பக்கங்கள்: 12+IV=பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 17 ஞாயிற்றுக்கிழமை (01-06-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:186

## குடும்பஸ்தர் வெட்டிக் கொலை! கிணற்றிலிருந்து சடலம் மீட்பு!!

### கரந்தனில் நேற்றுமுன்தினம் பயங்கரம்

வலி.கிழக்கு,ஜூன்1

நீர்வேலி மேற்கு, கரந்தன் பகுதியில் உள்ள தோட்டக் கிணறு ஒன்றில் இருந்து வெட்டுக்காயங்களுடன் நேற்றுக் காலை குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நீர்வேலி மேற்கைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான ஆறுமுகம் சிவபாதம் (வயது 46) என்பவரின் சடலமே அது எனப் பின்னர் அடையாளம் காணப்பட்டது.

யாழ்.மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம் நேற்று மாலை 6 மணியளவில் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார்.

விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டதாவது:-

பிரஸ்தாப நபர் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் டிராக்டர் ஒன்றை வாடகைக்கு அமர்த்துவதற்காக வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார். மறுநாள்வரை அவர் வீடு திரும்பாததை அடுத்து அவரது மனைவி இது குறித்து கோப்பாய்ப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

### வடமராட்சி அரசியல்துறை அலுவலக சோதனை:

## கண்காணிப்புக் குழு அதிகாரியின் செயலுக்குப் புலிகள் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜூன்1

வடமராட்சி, வதிரியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறைக் கோட்ட அலுவலகத்தில் நவீன தொலைத் தொடர்புக் கருவிகள் இருப்பதாகத் தெரிவித்து சோதனை நடத்த எடுத்த நடவடிக்கையின் போது யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரி செயற்பட்டவிதம் குறித்து விடுதலைப் புலிகள் வன்மையாகக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நேற்று நண்பகல் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.தலைவர் ஒலே புறொண்டத்தைச் சந்தித்து தமது கண்டனத்தை நேரடியாகத் தெரிவித்தார்.

படையினர், பொலீஸார் சகிதம் தமது அலுவலகத்தில் சோதனை நடத்த எடுத்த முயற்சியின்போது,

(12ஆம் பக்கம் பார்க்க)

# மாற்று யோசனைகள் தொடர்பாக பிரதமர் அமைச்சர்களுடன் ஆராய்வு

## ஓரிரு தினங்களில் புலிகளுக்கு பதில்!

கொழும்பு,ஜூன்1

**விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக யோசனைக்கு மாற்றாக அரசு முன்வைத்துள்ள யோசனைகளைப் புலிகள் நிராகரித்தது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீவிரமாக ஆராய்ந்து வருகின்றார். முக்கிய அமைச்சர்களுடனும் அவர் கலந்துரையாடி வருகின்றார்.**

**தீவிர ஆலோசனைகளுக்குப் பின்னர் அரசு மாற்று யோசனைகளைச் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இன்னும் ஓரிரு தினங்களில் அரசின் பதில் கடிதம் புலிகளுக்கு அனுப்பப்படலாம் என்று பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.**

வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள சட்டவலுவுள்ள, அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கவேண்டும் என்று விடுதலைப் புலிகள் யோசனை ஒன்றை முன்வைத்திருந்தனர்.

அந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்குப் பதிலாக மாற்று யோசனை ஒன்று தொடர்பாகப் பிரதமர் அனுப்பிய திட்டத்தைப் புலிகள் நிராகரித்து விட்டனர். இது தொடர்பான கடிதத்தை விடுதலைப் புலிகளின் மதியு

(12ஆம் பக்கம் பார்க்க)

## மணற்காட்டுக் கடற் பகுதியில் 3 கடற்படையினரைக் காணோம்

கொழும்பு,ஜூன்1

பருத்தித்துறை மணற்காட்டுப் பகுதியில் மூன்று கடற்படையினர் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மூன்று கடற்படையினரும் பருத்தித்துறையில் இருந்து படகு ஒன்றின் மூலம் நேற்றுமுன்தினம் வெளளிக்கிழமை மணற்காட்டுப் பகுதிக்கு சென்ற வேளையிலேயே காணாமற் போனதாகக் கூறப்பட்டது.

இந்த மூன்று கடற்படையினரையும் தேடும் பணியில் விமானப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்தினாவிடம் கேட்டபோது, கடற்கொந்தளிப்புக் காரணமாக இவர்கள் காணாமற்போயிருக்கலாம் - என்று தெரிவித்தார். தேடுதல் நடவடிக்கைகள் தொடர்வதாகவும் அவர் கூறினார். (ம-9)

## ஏ-9 வீதி விபத்தில் இருவர் பலி!

கிளிநொச்சி,ஜூன்1

மாங்குளத்துக்கும் கொக்காவிலுக்கும் இடையில் ஏ-9 வீதியில் 18ஆம் போர் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற சாலை விபத்தில் இருவர் உயிரிழந்தனர்; மூவர் படுகாயம் அடைந்தனர்.

இந்த விபத்தில் ஓமந்தை, மருதோடையைச் சேர்ந்த சிற்றம்பலம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வல்வை சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் படை முகாம்

### இன்று மறியல் போராட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்1

வல்வை சிதம்பராக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள அதன் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் புதிய முகாம் ஒன்றை அமைக்கும் பணியில் படையினர் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

கொட்டகை அமைக்கும் தளபாடங்கள் மற்றும் இரும்புக் கம்பிகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சியில் அமைக்கப்பட இருக்கும்

## தொலைத் தொடர்புக் கோபுரத்துக்கான உபகரணம் எடுத்துவர அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்1

கிளிநொச்சியில் அமைக்கப்படவிருக்கும் தொலைத் தொடர்புக் கோபுரத்துக்குரிய உபகரணங்களை எடுத்துவர பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் அமையவிருக்கும் 100 அடி உயரமான 'ரெலிக்கொம்' கோபுரத்துக்கும் பரந்தனில் அமைய இருக்கம் 80 அடி உயரமான கோபுரத்துக்கும் உரிய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுக் கொழும்பில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த உபகரணங்களை வன்னிக்கு எடுத்துச் செல்வதற்கான அனுமதியை

(12ஆம் பக்கம் பார்க்க)

## வெடிமருந்துகளுடன் 6பேர் மூதூர் கடலில் கைதாகினர்

திருகோணமலை மூதூர் கடலில் வெடிமருந்துகளுடன் சென்ற 6 நபர்களைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

அவர்கள் பயணம் செய்த படகில 'ஜெலிக்நைற்' குச்சிகள் மற்றும் வெடிக்க வைக்கும் கருவிகள் உட்பட வெடிமருந்துகள் இருந்ததாகவும் கடற்படையின் பேச்சாளர் தெரிவித்தார்.

மூதூரில் இருந்து சம்பூர் நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஒரு படகின மீது சந்தேகம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அதனை கடற்படையினர் சோதனையிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களும் வெடிமருந்துகளும் திருகோணமலைத் துறைமுகப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனர். (ம-3)

## மண்டைதீவுக் கடற்கரையில் அழுகிய நிலையில் சடலங்கள்

மண்டைதீவுக் கடற்கரைப் பகுதியில் நேற்றுக்காலை அழுகிய நிலையில் இரு சடலங்கள் கரை ஒதுங்கியுள்ளன.

அடையாளம் காணமுடியாத அளவுக்கு சிதைந்த நிலையில் அந்த இரு சடலங்களும் காணப்பட்டன.

ஊர்காவற்றுறைப் பொலீஸார் சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் மரண விசாரணைக்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

பதில் நீதிவான் எம்.திருநாவுக்கரசு இன்று சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை நடத்தவிருக்கின்றார். (ம-3)

# இடைக்கால நிர்வாக அமைப்புத் தொடர்பான அரசின் பதிலுக்கு தமிழ்க்கட்சிகள் கண்டனம்

கொழும்பு,ஜூன்1

விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக அமைப்புக்குப் பதிலாக அதிகாரங்கள் குறைந்த ஒரு சபையை அரசு முன்வைத்திருப்பது குறித்து தமிழ்க் கட்சிகள் கடும் அதிருப்தியைத் தெரிவித்துள்ளன. ஈ.பி.டி.பி. அமைப்பு அரசு முன்வைத்த சபையைப் புலிகள் நிராகரித்தமையைக் கண்டித்துள்ளது.

**மாவை சேனாதிராசா**

வடக்கு - கிழக்கு புனரமைப்பு மற்றும் அபிவிருத்தியை மேற்கொள்ளும் பணியை கையாள இடைக்கால நிர்வாகம் ஒன்று கோரப்பட்டது. ஆனால், வேறுவிதமான கட்டமைப்பு ஒன்றே முன்வைக்கப்பட்டுள்ளது. இது தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

உருப்படியான கட்டமைப்பு ஒ[illegible] வாக்க தமக்கு இயலாத நிலை உள்ளதாக அரசு கூறுவதால் பயன் இல்லை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் நாடாளுமன்ற அதிகாரத்தைக் கொண்ட அரசும் இணைந்து இடைக்கால நிர்வாக ஏற்பாட்டை செய்ய முன்வரவேண்டும். இதை விடுத்து, விடுதலைப் புலிகள் [illegible] கூடிய விடயம் அல்ல.

தமது இயலாத்தன்மையை வெளிக்காட்ட முற்படாது, அரசு விடுதலைப் புலிகள்மீது வீண் பழியைப்போட முனைவது ஏன் என்று புரியவில்லை. புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி போன்ற அடிப்படைப் பணிகளை மேற்கொள்வதற்கான இடைக்கால நிர்வாகத்தை அமைத்து[illegible] முடியாதவர்கள் இனப்பிரச்சி[illegible] எப்படித்தீர்வு காண்பா[illegible] என நம்ப முடியும்?

இந்த விடயத்தில் தமிழ் மக்கள் சார்பாக விடுதலைப் புலிகள் எந்த விட்டுக்கொடுப்பையும் செய்ய முடியாது.

ஜனாதிபதியும் அரசும் சேர்ந்து இந்த விடயத்தை ஆராய்ந்து புலிகள முன்வந்த யோசனைக்குச் சரியான பதிலை - நடைமுறைச் சாத்தியமான

(2ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் எங்கள் வீடுகளுக்கு செல்வதற்காக நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்

## பல்கலைச் சமூகம் படையினரிடம் கோரிக்கை

"நாங்கள் எங்கள் வீடுகளுக்குப் போவதற்காக நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்."

- இவ்வாறு குடாநாட்டில் தங்கி உள்ள இராணுவத்தினரிடம் அன்பாக வேண்டுகோள் விடுத்துள்ளது யாழ். பல்கலைக்கழகச் சமூகம்.

இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எப்போதெல்லாம் தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றனவோ, எப்போது எல்லாம் தமிழர்களின் விருப்பங்கள் ஒதுக்கப்படுகின்றனவோ, எப்போது எல்லாம் தமிழர்களின் மனங்கள் மறக்கப்படுகின்றனவோ, அப்போதெல்லாம் பொங்கும் நியாயமான உணர்வுகள் ஒன்று திரண்டு பொங்கி எழும். புதிய உண்மைகளை இந்த உலகின் காதுகளில் அறைந்து அவர்களின் மனசாட்சிக் கதவுகளைத் தட்டித்திறக்கும்.

மறக்கப்பட்ட, அறியப்படாத, திரித்துக் கதைக்கப்பட்ட தமிழர்களின் அபிலாசைகள் சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் கடந்த பொங்கு தமிழ் மூலம் சர்வதேசத்திற்கும் சிங்கள நண்பர்களுக்கும் நிரூபிக்கப்பட்டன. அது அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தியது. யுத்தம் ஓய்ந்த சமாதான வழிமுறையிலான பிரச்சினைத் தீர்வு என்ற இன்றைய யதார்த்தத்தை அது உருவாக்கியது. அதை எண்ணிப் பார்க்கின்றோம்; மகிழ்ச்சி அடைகின்றோம்.

இன்று சமாதானப் பேச்சு இடை நடுவில் நிற்கின்றது. கடந்த பேச்சுக்களில் நடக்கும் என்ற விடயங்கள் வெறும் பேச்சோடு நின்றதால், இயல்பு நிலை வடக்கிலும் கிழக்கிலும் கனவாகிப் போனது. இதனால் பேச்சுக்கள் எல்லாம் கருத்திழந்து போக இன்று பேச்சுக்கள் இடைநடுவில் நிற்கின்றன.

கொழும்பில் உயர் பாதுகாப்பு வலயங்கள் எல்லாம் அகற்றப்பட்டு நிம்மதியும் மகிழ்ச்சியும் கொண்ட இயல்பான வாழ்வு நிதர்சனமாகவுள்ளது. ஆனால், எங்கள் வீடுகள் இன்னமும் சுற்றியடைக்கப்பட்ட முள்ளுக்கம்பிகளின் பின்னால் இடிந்து கிடக்கின்றன.

நாம் வாழ்ந்து உலகைப் பிரிந்து கொண்ட எமது ஊர்களில், குளக்கரைகளில், மரநிழல்களில் எல்லாம் எமது கால்கள் பட்டு காலம் பல கடந்து விட்டது. அகதி முகாம்களில் 300 வீடுகளுக்கு 3 மலசலகூடம் என்று அவதிப்பட்டவாறு இப்போது போவோம், அப்போது போவோம் என்ற நம்பிக்கையெல்லாம் கரைந்து இனி எப்போதும் போகமாட்டோம் என்ற எண்ணங்கள் எழத் தொடங்கிவிட்டன.

அதிகாலையில் எழுந்து முற்றத் திற்கு வந்தால் முகத்திற்கு நேர இன்னமும் நீட்டிய துப்பாக்கிக் குழல்களும கரும்பச்சை உடைகளும். நாம் களைத்துப் போனோம்; இயல்பு நிலை திரும்பும் என்றிருந்து ஏமார்ந்து போனோம். மீண்டும் எமது செவிகளில் ஷெல் சத்தங்களும், பொம்மர் இரைச்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழு அலுவலகம் முன்பாக மறியல் நடத்த வலி.வடக்கு மக்கள் முடிவு

வலி.வடக்கு,ஜூன்1

வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தம்மைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துமாறு கோரி யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகம் முன் மறியல் போராட்டம் நடத்தவுள்ளனர்.

வலிவடக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் சுன்னாகத்தில் கூடி இந்த முடிவை எடுத்தனர்.

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத் தலைவர் க.கணேசு தலைமையில இக்கூட்டம் இடம்பெற்றது.

"புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி 15 மாதங்கள் கடந்துள்ள போதிலும் நலன்புரி நிலையங்களில் வசித்து வரும் வலி.வடக்கு மக்களின் அகதி வாழ்க்கை தொடர்கின்றது. இனியும் காலந்தாழ்த்தாது எமது வீடுகளுக்குச் சென்று வாழ்வதற்கு அரசும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும உடன் ஆவன செய்து தர வேண்டும்" - என்ற கோரிக்கையை வலியுறுத்தி மறியற் போராட்டத்தினை நடத்துவது என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (ம-12-86)

## மந்துவில் சுகாதார நிலையத்தை மீண்டும் இயக்குமாறு கோரிக்கை

வரணி,ஜூன்1

மந்துவில் பிரதேச மக்களின் வசதி கருதி முன்னர்இயங்கிய மந்துவில் ஆரம்ப சுகாதார நிலையத்தை மீள இயக்க ஏற்பாடு செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

படையினர் அப் பகுதியில் நிலை கொண்டிருந்த காலப்பகுதியில் அந் நிலையத்தை இயக்கமுடியாத நிலை இருந்தது. புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் இப்பகுதியில் பொதுமக்கள் மீள் குடியேறியுள்ளனர். எனினும், இந்நிலையத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எதனையும் சம்பந்தப்பட்டோர் இதுவரை மேற்கொள்ளவில்லை. இதனால், அப் பகுதியில் வாழும் மக்கள் தமது மருதத்துவ தேவைக்காக சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள வரணி அரசினர் மருந்தகத்துக்கு அல்லது சாவகச்சேரி அரசினர் வைத்திய நிலையத்துக்கே செல்லவேண்டியுள்ளது.

தமது தேவைகளை நிறைவு செய்வதற்கு இந்நிலையத்தை மீள இயக்க நடவடிக்கை எடுக்குமாறும் மந்துவில் கிராம முன்னேற்றச் சங்கத்தினர் சாவகச்சேரி பிரதேச செயலாளரிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-8-170)

## நீதிமன்ற வளாகம் அமைப்பது தொடர்பாக நாளை கூட்டம்

### நீதிச் சேவை பிரச்சினையும் குறித்தும் ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஜூன்1

யாழ்நகரில் அமைக்கப்பட இருக்கும் நீதிமன்ற வளாகம் தொடர்பாக நாளை முக்கிய கூட்டம் ஒன்று கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இந்த வளாகத்தை அதன் பழைய இடத்திலேயே அமைப்பதற்கான நிதி உதவியை உலக வங்கி வழங்க முன் வந்ததையடுத்து, வளாகக் கட்டடத்தை அமைப்பதற்கான மதிப்பீட்டுப்பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

நீதிமன்ற வளாகத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு குறித்தும், கட்டடப் பணிகளை எவ்வகையில் முன்னெடுப்பது என்பது குறித்தும் ஆராய்வதற்காக கூட்டப்படும் இக்கூட்டத்தில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவும் மற்றும் நீதிச்சேவை ஆணைக்குழு அதிகாரிகளும் கலந்துகொள்வர்.

இக் கூட்டத்தில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா, யாழ்நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா ஆகியோரும் கலந்துகொள்வர்.

குடாநாட்டில் நீதிச் சேவை எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் இக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவிருக்கின்றது. (ம-3)

## தமிழ்க் கவிதை ஆய்வரங்கு இரண்டாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்1

'தூண்டி' இலக்கிய வட்டம் நடத்தும் ஈழத்து தமிழ் கவிதை ஆய்வரங்கில் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று காலை 9 மணிக்கு யாழ்பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இரண்டாவது நாளின் முதலாவது அமர்வில் கவிஞர்களான ஊர்வசி, சிவரமணி, மைதிலி, அருளையா, ஆழியால ஆகியோரது கவிதைகளை ஆய்வாளர் பா.அகிலனும் -

கவிஞர்களான இ.முருகையன், சில்லையூர் செல்வராஜன், தருமு சிவராம், ஆத்மா ஆகியோரது கவிதைகளை ஆய்வாளர் மு.பொன்னம்பலமும் -

அஸ்வகோஸ், றஷ்மி, கருணாகரன், அமரதாஸ் ஆகியோரது கவிதைகளை ஆய்வாளர் அ.ஜேசுராசாவும் -

ஆய்வுசெய்வர்.

இரண்டாவது அமர்வு யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

இந்த அமர்வில் மகாகவி சா.வே. பஞ்சாட்சரம், காரை.சுந்தரம்பிள்ளை, கல்வயல் வே.குமாரசாமி ஆகியோரது கவிதைகளை கலாநிதி செ.திருநாவுக்கரசுவும் -

காசி ஆனந்தன், ஈழவாணன் நட்சத்திரன் செவ்விந்தியன், த.ஜெயசீலன் ஆகியோரது கவிதைகளை கவிஞர் சோ.பத்மநாதனும் -

சுபத்திரன், சண்முகம் சிவலிங்கம், புதுவை இரத்தினதுரை சாருமதி ஆகியோரது கவிதைகளும் ஆய்வுசெய்யப்படவுள்ளன.

கலந்துரையாடல்கள், கவிதை நாடகங்கள் என்பனவும் அந்த அமர்வில் இடம்பெறும்.

இதேவேளை -

இந்த ஆய்வரங்கின் முதலாம் நாள் நிகழ்வுகள் நேற்றைய தினம் சிறப்பாக நடைபெற்றன.

தூண்டி இலக்கிய வட்டத்தின் இயக்குநர் தி.செல்வமனோகரன் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் கவிதை ஆய்வாளர்கள் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.

எனினும், நேற்றைய நிகழ்வில் கலந்துகொள்ளவிருந்த ஆய்வாளர்களான கருணாகரன், நிலாந்தன் ஆகியோர் தவிர்க்கமுடியாத காரணத்தினால் வருகைதரவில்லை. (ம-4)

## இடைக்கால நிர்வாக அமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிலை - வெளியிட வேண்டும் - என் றார் அவர்.

**டக்ளஸ் தேவானந்தா**

ஜனநாயக அரசியல் சூழல் உருவாக்கப்படுவது, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு காண்பது மற்றும் புலிகளின் கைகளிலுள்ள ஆயுதங்கள் என்பன தொடர்பில் ஆக்கபூர்வமான - உறுதியான - பதில்களை சர்வதேச சமூகத்தின் முன்பாகத் தெளிவுபடுத்த புலிகள் தயங்குகின்றனர். இந்தத் தயக்கத்தை மூடி மறைப்பதற்கான காரணங்களையே புலிகள் தேடுகின்றனர். இதன் ஒரு வெளிப்பாடாகவே அரசினால் புதிதாக முன் வைக்கப்பட்ட யோசனைகளையும் புலிகள் நிராகரித்துள்ளனர்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனுடனான பேச்சுக்களின்போது புலிகளின் தலைவர் பிரபாகரன் வடக்கு - கிழக்கின் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக முன் வைத்த ஆலோசனைகள் அப்படியே நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனப் புலிகள் எதிர்பார்ப்பது போலத் தெரிகிறது. எனினும், புலிகளின் இந்த எதிர்பார்ப்பு நியாயமானதாகத் தெரியவில்லை. அத்துடன், இது நடைமுறைச் சாத்தியமானதாகவும் பொருத்தமானதாகவும் இல்லை.

**ஜி.ஜி.கஜேந்திரகுமார்**

வடக்கு - கிழக்குக்கு நிச்சயமாக ஓர் இடைக்கால நிர்வாகம் தேவைப்படுகின்றது என்று தமிழ்க் கூட்டமைப்பு அடிக்கடி அரசிடம் வலியுறுத்தி வந்துள்ளது.

இதுவரை நடந்த பேச்சுக்களில் தமிழ் மக்களுக்கு எந்தவித லாபமும் கிடைக்காத நிலையில் டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் கலந்துகொள்வதென்றால், அந்த மாநாட்டில் கிடைக்கப் போகும் நிதி சரியான ஒரு நிர்வாகம் மூலமாகத்தான் செலவு செய்யப்பட வேண்டும். ஆகவே, விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகம் ஒன்றைக் கேட்பது நியாயமானது தான் என்று நாங்கள் அரசுக்கு எடுத்துக் கூறியுள்ளோம்.

அதன் அடிப்படையில் அரசு தெளிவான பதில் ஒன்றை அனுப்பும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், அது ஏமாற்றமாகவே இருக்கின்றது.

தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளாத ஓர் அரசியல் யாப்பைத் தயாரித்து வைத்துக்கொண்டு, அந்த அரசியல் யாப்புக்கு கீழேதான் இடைக்கால நிர்வாகத்தைக்கொண்டு வந்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று கருதுவது நியாயமானதல்ல.

அரசியல் யாப்பில் இருக்கின்ற பிரச்சினைகள் எங்களுடைய பிரச்சினை அல்ல. அது சிங்கள மக்கள் மற்றும் சிங்கள கட்சிகளின் பிரச்சினை. எனவே, அந்த அரசியல் யாப்பினைக காட்டி தமிழ்மக்களது நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்படுவது ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது.

**ஜோசப் பரராஜசிங்கம்**

சமாதானப் பாதையில் தம்மை விடுதலைப் புலிகள் இணைத்துக் கொண்டபோது வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாகம் தேவை என்று தெரிவித்திருந்தனர். கடந்த தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசிய முன்னணியும் இடைக்கால நிர்வாகம் அமைப்பதாகத் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்து, அதற்கு மக்கள் ஆணையையும் பெற்றிருந்தது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் ஆரம்பமானபோது, முதலாவது சுற்றிலேயே இடைக்கால நிர்வாகம் குறித்துப் புலிகளின் பிரதிநிதிகள் பிரஸ்தாபித்திருந்தனர்.

அதிகாரம் உள்ள - நிதியைக் கையாளக் கூடிய சட்ட வலுவுள்ள - இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு இல்லாமல், வடக்கு - கிழக்கு புனரமைப்புக்கான நிதியைப் பெறுவதற்காக டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவதில் பயன் ஏதும் இல்லை.

வரலாற்றுத் தியாகங்களின் பின் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு நியாயமான கோரிக்கையைப் பெறுவதற்காக சமாதான வழிக்குத் திரும்பிய விடுதலைப் புலிகள், மக்களின் இயல்பு வாழ்க்கைக்காக புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ள இடைக்கால நிர்வாக அமைப்பை உருவாக்க பின்னடிப்பதை தமிழ்மக்கள் ஏற்கமுடியாது. மக்களின் விருப்பத்துக்கு ஏற்ப இடைக்கால நிர்வாக அமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தொடர்ந்து வலியுறுத்தும் - என்றார்.

**ரெலோ முதல்வர் என்.சிறிகாந்தா**

அரசு முன்வைத்துள்ள அபிவிருத்திச் சபை யோசனையை நிராகரிப்பதைத் தவிர விடுதலைப் புலிகளுக்கு வேறு வழியேதும் இருந்திருக்க முடியாது.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாகக் கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பத்தில் பலராலும் பிரஸ்தாபிக்கப்பட்டு வந்திருக்கின்றது. எனவே, இது ஒரு புதிய விவகாரம் அல்ல.

இடைக்கால நிர்வாகம் என்பது, ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு செயற்படக் கூடிய தற்காலிக ஏற்பாடு மட்டுமே. இதை வழங்குவதில் அரசுக்கு என்ன தடை அல்லது கஷ்டம் இருக்கின்றது என்பதுதான் தெளிவாகத் தெரியவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாண சபை 90 ஆம் ஆண்டு செயலிழந்துவிட்டது. அதன்பின் அதன் அதிகாரங்களை நாடாளுமன்றம் பொறுப்பேற்றுக் கொண்டது. இந்நிலையில், வடக்கு - கிழக்கில் ஓர் இடைக்கால ஏற்பாட்டினை அமைப்பதில், அரசமைப்பு ரீதியாக எந்தப் பிரச்சினையையும் ஏற்பட முடியாது.

ஒரு சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து சாதாரண பெரும்பான்மையுடன் அதை நிறைவேற்றுவதன் மூலம் வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை சட்ட ரீதியாக ஏற்படுத்த முடியும். இருந்தும் ஏனோ அரசு தயங்கிக்கொண்டிருக்கின்றது.

ஒருவேளை, தென்னிலங்கையில் உள்ள எதிர்ப்பு அரசியல் சக்திகளையிட்டு அளவுக்கு அதிகமாக அரசு அச்சப்படுகின்றதா? அல்லது திரை மறைவில் பேச்சுக்கு எதிராகச் செயற்படும் ஒரு வெளிநாட்டுச் சக்தியின் அழுத்தந்தான் காரணமா? அல்லது இக்கட்டத்தில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதில் அரசுக்குள்ளேயே கருத்து வேறுபாடா என்று தெரியவில்லை.

எனினும், அரசில் நிலைப்பாட்டால் இப்படிப் பல கேள்விகள் எழத்தான் செய்கின்றன.

தமிழினத்தைப் பொறுத்தமட்டில் இடைக்கால நிர்வாகக் கோரிக்கையைக் கூட ஏற்றுக்கொள்ள முடியாத அரசு, நீதியான அரசியல் தீர்வு ஒன்றுக்கு எப்படிச் சம்மதிக்கப் போகின்றது என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

இருந்தாலும், அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் தொடர்வதை, இன்று நிலைமை பாரதூரமாக பாதிக்காது என்றே நம்புகிறோம் - என்றார்.

**இயற்கையின் சீற்றத்தை தணிக்க இயன்ற வரை பா…**

(மே 29முதல் ஜூன் 4வரை சூழல் விழிப்புணர்வு வாரம்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஈராக் போர் தொடர்பாக

# தவறான தகவலை அளித்ததாக பிரிட்டிஷ் பிரதமர் மீது குற்றச்சாட்டு

லண்டன்,ஜூன்1

ஈராக் மீதான போர் குறித்து நாடாளுமன்றத்துக்கு தவறான தகவலை அளித்ததாக பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் மீது அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

போருக்கு முன்பே ஈராக் தன்னிடமிருந்த பேரழிவு ஆயுதங்களை அழித்திருக்கலாம் என அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் அண்மையில் ஓர் அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து ரொனி பிளயர் மீது அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சரமாரியாகக் குற்றஞ்சாட்டினர்.

ஈராக் மீது தாக்குதல் தொடுப்பதற்கு முன்பு சரியான காரணம் கூறாமல் அவசரப்பட்டு அந்நாட்டுக்கு படைகளை அனுப்பியதன் மூலம் மக்களுக்கும் நாடாளுமன்றத்துக்கும் தவறான தகவலை அளித்துள்ளார் ரொனி பிளயர். ஈராக்குக்கு படைகளை அனுப்பியதற்கு சட்டரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அவர் காரணம் கற்பிக்க முடியாது.

ஈராக்கிடம் பேரழிவு ஆயுதங்கள் எதுவும் இல்லை என்பது அவருக்குத் தெரியும். இருந்தும் போர் தொடங்கி 45 நிமிடங்களுக்குள் பேரழிவு ஆயுதங்களை ஈராக் பயன்படுத்தும் என்று நாடாளுமன்றத்தில் அவர் கூறிய தகவல்கள் பொய்யாகிவிட்டன என்று போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவரது அமைச்சரவையிலிருந்து ராஜினாமாச் செய்த முன்னாள் அமைச்சர் ரொபின் குக் தெரிவித்தார். இது குறித்து விசாரணை நடத்த கோரிக்கை விடுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களை அவர் கேட்டுக் கொண்டார். (ஐ)

# 'குளோரபோர்ம்' மயக்க மருந்து சீனாவில் கட்டுப்பாடின்றி தருவிப்பு

பெய்ஜிங்,ஜூன்1

இந்தியா, தென்கொரியா, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் உட்பட்ட நாடுகளிலிருந்து பெருமளவில் 'குளோரபோர்ம்' மயக்க மருந்து சீனாவில் குவிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து முறைப்படியான விசாரணையைத் தொடங்கியுள்ளதாகச் சீன வர்த்தக அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்பு அதிக அளவில் மயக்க மருந்தாகப் பயன்பட்டுவந்த 'குளோரபோர்ம்' தற்போது இரசாயனப் பொருளாகப் பயன்பட்டு வருகிறது. இந்த இரசாயனப் பொருள் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டு குவிக்கப்படுவதால் சீனாவில் இதைத் தயாரிக்கும் தொழில் நிறுவனங்கள் பெருமளவில் பாதிக்கப்படக்கூடும் என்ற அச்சம் நிலவுகிறது. எனவே, இது பற்றியும் விரிவான அளவில் மதிப்பீடு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த விசாரணை அடுத்த ஆண்டு மே 30ஆம் திகதி முடிவடையும். தேவைப்பட்டால் அடுத்த ஆண்டு நவம்பர் 30ஆம் திகதி வரை இந்த விசாரணைக் காலத்தை நீடிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ)

# நேபாள பிரதமர் ராஜினாமா!

காத்மண்டு,ஜூன்01

நேபாள பிரதமர் லோகேந்திர பகதூர் சந்த் வெள்ளிக்கிழமை பதவி விலகினார்.

அவருடைய ராஜினாமாவை ஏற்றுக்கொண்டதாக மன்னர் ஞானேந்திரா அறிவித்தார்.

மாற்று அரசை அமைக்கும்வரை தற்காலிகப் பிரதமராக பதவியில் நீடிக்குமாறு லோகேந்திர பகதூர் சந்தை அவர் கேட்டுக்கொண்டார்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 11 ஆம் திகதி இவர் பிரதமராக நியமிக்கப்பட்டார்.

நேபாள காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பேர் பகதூர் தேபா தலைமையிலான தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை அதற்கு ஒரு வாரம் முன்பு மன்னர் 'டிஸ்மிஸ்' செய்துவிட்டார்.

மன்னரின் இந்த நடவடிக்கையை எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்து வந்தன.

அனைத்துக் கட்சிகளும் பங்கேற்கும் புதிய அரசை அமைக்குமாறு மன்னரை அவை வலியுறுத்தின. (ஐ)

# வியட்நாமில் கடற்படைத் தளம் அமைக்க அமெரிக்கா முயற்சி

வாஷிங்ரன்,ஜூன்1

வியட்நாமில் தனது கடற்படை தளத்தை அமைக்க அமெரிக்கா முயற்சிசெய்து வருகிறது. இது குறித்து வியட்நாம் அரசை அது அணுகவுள்ளதாக லொஸ் ஏஞ்சல்ஸிலிருந்து வெளியாகும் நாளிதழ் தெரிவித்தது.

வியட்நாமில் நடந்த உள்நாட்டு போரின் போது தனது கடற்படை வசதிகளை அங்கு அமெரிக்கா ஏற்படுத்திக் கொண்டது. தற்போது இரு நாடுகளுக்கிடையேயும் சுமுக உறவு நிலவுகிறது. இதன் காரணமாக அந்நாட்டை அணுகி கடற்படை தளம் அமைக்கும் யோசனையை அமெரிக்கா தெரிவிக்கவுள்ளது.

வியட்நாம் அரசு அதற்கு ஒப்புக்கொள்ளும் பட்சத்தில், அந்தப் பிராந்தியத்துக்குப் பல நன்மைகள் கிடைக்க வாய்ப்பு உண்டாகும். சவூதி அரேபியா மற்றும் துருக்கியிலிருந்து தனது தளங்களை அமெரிக்கா திரும்ப பெற்றுக் கொண்டது. அதேபோல் தென் கொரியாவில் இராணுவம் விலக்கப்பட்ட பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள தனது துருப்புகளை அந்நாட்டில் வேறு பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லக்கூடும் என அது மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# சிங்கப்பூரில் பாதுகாப்புக் கூட்டம்

சிங்கப்பூர்,ஜூன்1

இந்தியா உட்பட ஆசிய நாடுகள் மற்றும் முக்கிய வல்லரசு நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் மற்றும் இராணுவத் தளபதிகள் கூட்டம் சிங்கப்பூரில் மூன்று நாள்கள் நடைபெறுகின்றன.

இக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக இந்நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களும் இராணுவத் தளபதிகளும் வெள்ளிக்கிழமை சிங்கப்பூருக்கு வந்து சேர்ந்தனர்.

சர்வதேச பயங்கரவாதம், வட கொரியாவின் அணுஆயுத விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

அமெரிக்கப் பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் போல் வோட்போவிட்ஸ், பிரிட்டன் பாதுகாப்புத் துறை அமைச்சர் ரோபார்ட் ஹில், ஜப்பான் மற்றும் தென்கிழக்காசிய நாடுகள் உட்பட 20 நாடுகளின் பாதுகாப்பு துறை அமைச்சர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்கின்றனர். (ஐ)

# ஒலிம்பிக் போட்டிகளின் போது 'அல்கெய்டா' அச்சுறுத்தல் இருந்தது!

கன்பெரா,ஜூன்1

சிட்னியில் 2000 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின் பாதுகாப்புக்கு சர்வதேச தீவிரவாதி ஒசாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்பு பெரும் அச்சுறுத்தலாக இருந்தது.

ஒலிம்பிக் போட்டியின் உளவுத் துறைத் தலைவராக இருந்த நீல் பெர்கஸ் இதைத் தெரிவித்தார்.

கன்பெராவுக்கு அருகில் அல்கெய்டாவின் சகோதர அமைப்பின் முகாம் ஒலிம்பிக்கின் போது செயற்பட்டுவந்தது என்றார் அவர். பாதுகாபபுக்கு அதிக கவனம் செலுத்தியதால அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நிகழாமல் தடுக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## ஆச் மாநிலத்தில் 100 பேர் பலி!

ஜகார்த்தா,ஜூன்1

இந்தோனேசியாவின் ஆச் மாநிலத்தில் பிரிவினை கோரிப் போராடி வரும் தீவிரவாதிகளுக்கு எதிராகத் தாம் கடந்த 11 தினங்களில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின் போது 100பேர் வரையில் கொல்லப்பட்டதாக அரசு அறிவித்துள்ளது.

அவர்களில் குறைந்தது 84பேர் சுதந்திர ஆச் முன்னணி என்ற தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் -

ஏனையவர்களில் 7பேர் இராணுவத்தினர், மூவர் பொலீஸார், 14பேர் பொதுமக்கள் என்றும் - அரசின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் இந்த நடவடிக்கை இடம்பெற்று வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## சென்.பீற்றஸ்பேர்க்கில் உலகத் தலைவர்கள்

மொஸ்கோ,ஜூன்1

ரஷ்யாவின் மிகப்பழம்பெருமை வாய்ந்த சென்.பீற்றர்ஸ் பேர்க் உருவாக்கப்பட்டதன் 300ஆவது ஆண்டு நிறைவு தினம் நேற்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

உலகின் 48 நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் இந்தக் கொண்டாட்டத்துக்காக பீற்றர்ஸ் பேர்க் நகரில் கூடியுள்ளனர். (ம)

## பெருவில் ஒருவர் மரணம்

லீமா,ஜூன்1

பெருவில் தொழிலாளர்கள் மேற்கொண்டுவரும் வேலைநிறுத்தம் வன்முறையை நோக்கி தொடர்ந்து நகர்ந்துகொண்டிருக்கிறது. பல இடங்களிலும் பொலீஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களில் குறைந்தது ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் 70இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

ஆர்ப்பாட்டம் ஒன்றைக் கட்டுப்படுத்தப் பொலீஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மாணவன் ஒருவர் கொல்லப்பட்டார். தொடர்ந்தும் நாட்டில் அவசரகாலநிலை நடைமுறையில் உள்ளது. (ம)

# சுறுசுறுப்பாகப் பணியாற்றும் 101வயது ஜப்பான் மூதாட்டி

டோக்கியோ,ஜூன்1

ஜப்பானில் 101 வயதான ஒரு மூதாட்டி மதுபான நிலையம் ஒன்றில் இன்னமும் உதவியாளராக வேலை செய்து கொண்டிருக்கின்றார். இந்த வயதிலும் இவரிடம் காணப்படும் சுறுசுறுப்பு உலக ஊடகங்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

கிடிக்கோ அரிமா என்ற அந்த 101வயது மூதாட்டி கடந்த 55 வருடங்களாக அந்த மதுபானக் கடையில் பணியாற்றி வருகின்றார். 1948 இல் அவர் தனது சிறிய கிராமம் ஒன்றில் சிறிதாக ஒரு தேநீர்ச் சாலை ஒன்றை அமைத்தார். பின்னர் படிப்படியாக உயர்ந்து நகரத்தில் பெரிய மதுபான நிலையம் ஒன்றை அமைத்தார். இன்னும் அவர் அங்கு சுறுசுறுப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்.

"நான் மக்களுடன் நெருங்கிப் பழகுவதனாலும் பேசுவதனாலுமே நான் நீண்ட காலம் வாழ்வதாக நீங்கள் நினைக்கிறீர்களா?' - என்று தன்னைச் செவ்வி கண்ட செய்தியாளரிடம் கேட்ட அரிமா, "நான் ஜப்பானில் இருந்து வெளியாகும் பத்திரிகைகளில் செய்திகளை மட்டும் வாசிப்பதில்லை. அதில் வரும் எல்லா விடயங்களையுமே வாசிப்பேன். இதனால்தான் மக்களுடன் எந்த விடயத்தைப் பற்றியும் என்னால் மிக இலகுவாகக கதைக்க முடிகின்றது. இதுவே அவர்கள் என்னை நேசிப்பதற்கான காரணம் என்று நான் நினைக்கின்றேன்" - என்றும் அவர் மேலும் சொன்னார்.



பொதுவாகவே ஜப்பானில் மனிதர்களின் சராசரி வாழ்நாள் காலம் மிக உயர்வானது. ஆண்கள் சராசரியாக 84.93 ஆண்டுகளும் பெண்கள் சராசரியாக 78.07 ஆண்டுகளும் வாழ்கின்றார்கள். 17ஆயிரத்து 394பேர் தமது 100 வயதைத் தாண்டியும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். (ம)

## சீனாவுக்கு திபெத் நிதி நன்கொடை

பெய்ஜிங்,ஜூன்1

சீனாவில் 'சார்ஸ்' நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக 65 லட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது திபெத்.

இத்தகைய நன்கொடையை சீனாவுக்கு, திபெத் வழங்குவது இதுவே முதல்முறையாகும். 'சார்ஸ்' தாக்குதலுக்கு திபெத் உள்ளாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சுற்றுலாப் பயணிகள் எவரும் திபெத்துக்குள் செல்லக்கூடாது என சீனா ஏற்கனவே தடைவிதித்துள்ளது. இந்தியாவிலிருந்து மேற்கொள்ளப்படவிருந்த கைலாய யாத்திரையையும் சீனா தாமதப்படுத்தியுள்ளது. 'சார்ஸ்' பாதிப்பைத் தடுக்க தனது எல்லையை மூடி வைத்துள்ளது சீனா. இதற்கிடையில் சீனாவில் 'சார்ஸ்' பாதிப்பு குறைந்து வருகிறது.


## கெமரா பழுது பார்த்தல்

1975 ஆம் ஆண்டில் இருந்து 25 வருடங்களுக்கு மேலாக, அனுபவமிக்க, விஷேட சேவையுடன் மக்கள் மத்தியில் நன் மதிப்பையும், பாராட்டையும் பெற்றுக் கொண்ட விசுவாசமிக்க சேர்விஸ் சென்டர்.

திறமை வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் 40 பேர்களுடன், அதி நவீன தொழில்நுட்பத்தைக் கையாண்டு, ஒரே நாளில் கொம்பியூட்டர் மயப்படுத்தப்பட்ட துரித சேவை, ஒரு வருட உத்தரவாதம்!




டிஜிட்டல், ஸ்டில் & வீடியோ கெமரா, லென்சஸ், ஸூம் கெமரா பிளேக்ஸ்சேர்கியுற், ஃபிளாஸ் கன்ஸ்

DURST ELECTRONICS (PVT) LTD.

364, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3. போன்: 575480, 565756
P.G. மாட்டினுக்கு எதிரிலும், நெஷனல் ஷோரூம் மற்றும் ஹோட்டல் ரேனுகா மத்தியிலும் (கடல் பக்கம்)

## பிள்ளைகள் பிரச்சினைக்குரியவர்களா?

பொறாமைப்பட்டு மற்றவர்களைத் துன்புறுத்தி விரோத மனப்பான்மையுடன் நடந்துகொண்டு, பிடிவாதம் செய்யும் பிள்ளைகளை ஆரோக்கியமான முறையில் வளர்க்க முடியுமா?

ஆம்! அன்பு காட்டி அரவணைப்புடன் கூடிய ஆலோசனைகளை வழங்குவதுடன் "நான் பாதுகாப்பாக இருக்கின்றேன். என் பெற்றோர், ஆசிரியர்கள் என்மேல் அன்பாக நடந்துகொள்கிறார்கள்" என உங்கள் பிள்ளைகள் உணர்ந்துகொள்ளும்படி அவர்களை வளர்ப்பதன் மூலம் அவர்களிடம் வேண்டத்தகாத நடத்தைகளைக் குறைத்துக்கொள்ளமுடியும்.

விளம்பர அனுசரணை
சிறுவர் பாதுகாப்பு நிதியம்

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி :
மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழு
அறை எண் 30
யாழ்.போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
T.P 222 5657 (C/28184)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதிகள் புனரமைப்பு

வலி.தெற்கு,ஜூன்1

புன்னாலைக்கட்டுவன் ஐயனார் கோயில் வீதி, உடுவில் பட்டியோலை வீதி என்பவற்றின் புனரமைப்பு வேலைகள் வலிகாமம் தெற்கு பிரதேச சபையினரால் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

புன்னாலைக்கட்டுவன் வீதி ஐந்து லட்சம் ரூபா செலவிலும், பட்டியோலை வீதி மூன்று லட்சத்து 70 ஆயிரம் ரூபா செலவிலும் புனரமைக்கப்படுகின்றன. (எ-152)

## வர்த்தக நிலையத்தில் வியாழனிரவு சூறை!

சாவகச்சேரி,ஜூன்1

சாவகச்சேரி, நுணாவில் மேற்கு பிரதான வீதியில் உள்ள வியாபார நிலையமொன்று கடந்த வியாழனன்று இரவு சூறையாடப்பட்டுள்ளது.

எஸ்.கணேசதுரை என்பவரின் பலசரக்குக் கடையிலிருந்தே சுமார் ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயுள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடா பாக சாவகச்சேரி பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-31)

## கறுக்காய் தீவுக்கிளை மீண்டும் இயங்குகிறது

யாழ்ப்பாணம், ஜூன்1

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கறுக்காய் தீவுக்கிளை கடந்த 26ஆம் திகதி முதல் பழைய இடத்தில் புதிய கட்டடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

1991ஆம் ஆண்டு இடம்பெற்ற 'வலம்புரி' இராணுவ நடவடிக்கையை அடுத்து இந்தக் கிளைக் கட்டடம் முற்றாக அழிவடைந்தது. (எ-12)

## கொழும்புத்துறை இந்துவுக்கு மாடிக்கட்டடம்

அரியாலை,ஜூன்1

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் புதிதாக மாடிக் கட்டடம் அமைக்கும் பணிகள் இடம் பெற்றுவருகின்றன.

அத்துடன், பாடசாலைக்குப் பின் புறமாகவுள்ள ஆரம்பப்பிரிவு கட்டடப் பகுதியும் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (எ-17)

## கொக்குவில் பகுதி இரு கிராமங்கள் மின் இணைப்புப்பெறும்

யாழ்ப்பாணம்,ஜூன்1

பின்தங்கிய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கும் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட இரு கிராமங்களுக்கு இரண்டு லட்சம் ரூபா செலவில் மின் இணைப்பு வழங்கப்படவுள்ளது.

கொக்குவில் கிழக்கு காளிகோயில் வீதி, கொக்குவில் மேற்கு காந்திஜி சனசமூக நிலைய வீதி என்பனவே இவ்வாறு மின்சாரம் பெறவுள்ளன.

இதேவேளை, கொக்குவில் பூநாரி ஒழுங்கையில் உள்ள கலைவாணி வீதி 3லட்சத்து 70ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.(எ-180)

## ஊர்காவற்றுறையில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

கொக்குவில்,ஜூன்1

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றும் இடங்கள் மற்றும் தினங்களை ஊர்காவற்றுறை சுகாதாரப் பணிமனை அறிவித்துள்ளது.

அந்த விவரங்கள் வருமாறு:-

எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணி தொடக்கம் 10.30 மணிவரை புளியங்கூடல் கிளினிக்கிலும், 10.45மணி தொடக்கம் 11.45 மணிவரை சின்னமடு றோ.க.பாடசாலையிலும். நண்பகல் 12 மணி தொடக்கம் ஒருமணி வரை நாரந்தனை பிரதேச உப அலுவலகத்திலும், பிற்பகல் 1.30 மணி தொடக்கம் 3.30 மணிவரை தம்பாட்டி சனசமூக நிலையத்திலும்

மறுநாள் புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10.30 மணிவரை மெலிஞ்சிமுனை தேவாலயத்திலும், 10.45 மணி தொடக்கம் நண்பகல் 12மணிவரை பருத்தியடைப்பு பாலர் பாடசாலையிலும்,

12.15 மணி தொடக்கம் பிற்பகல் 1.15மணிவரை நாரந்தனை உப தபால் நிலையத்திலும், 1.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கு அருகிலும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி-76)


## ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்
## தற்காலிக கிளை முகாமையாளர் பதவி விண்ணப்பம்

ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கத்தில் தற்காலிக கிளை முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஊர்காவற்றுறையில் உள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பதாரர் க.பொ.த. (சா/த) இல் கணிதம், தமிழ் உட்பட சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பங்களை 08.06.2003ஆம் திகதிக்கு முன்னர் பொதுமுகாமையாளர், ஊர்காவற்றுறை ப.நோ. கூ.சங்கம், ஊர்காவற்றுறை என்னும் முகவரிக்கு நேரிலோ, பதிவுத் தபாலிலோ அனுப்பிவைக்கலாம்.

பொது முகாமையாளர்,
ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம். (c/28168)



## வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் முயற்சிகள் தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு

கௌரவ பிரதம மந்திரியின் அறிவுறுத்தல்களின் பேரில் மேற்படி விடயம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு விசாரணைக் குழுவொன்று கௌரவ பாதுகாப்பு அமைச்சரினால் நியமிக்கப்பட்டிருப்பதுடன், அதுதொடர்பான விசாரணைகள் மேற்கொண்டு அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்குமாறும், அவசியமாயின் தற்போது தென்பகுதிப் பத்திரிகையாளர்கள் அனுபவித்துவரும் பாதுகாப்பு மற்றும் சலுகைகளை உறுதிசெய்வதற்கான பரிந்துரைகளை வழங்குமாறும் அக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி குழு எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி முதல் 6ஆம் திகதிவரை தினமும் காலை 9.45 மணிமுதல் மாலை 4.00 மணிவரை யாழ்ப்பாணம் கச்சேரியில் தனது விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது. பொதுமக்கள் இது தொடர்பான தமது கருத்துக்களை நேரிலோ அல்லது எழுத்து மூலமோ மேற்குறிப்பிட்ட தினங்களில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கீழ்க்குறிப்பிடப்படுவோர் இவ்விசாரணைக் குழுவில் அங்கம் வகிப்பர்.

**திரு.ஒலிவர் பி.வீரசேன**
(ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி) - தலைவர்.

**திரு. ஈ.ஜீ.சந்திரரட்ண**
(சிரேஷ்ட உதவிச் செயலாளர் -
அங்கத்தவர் மக்கள் தொடர்பாடல் அமைச்சு)

ஒப்பம்:
**ஆர்.ஏ.டீ.எஸ்.ரணதுங்க**
(விசாரணைக்குழுவின் செயலாளர்)

பாதுகாப்பு அமைச்சு
15/5, பாலதக்ஷ மாவத்தை,
கொழும்பு-03.
01-ஜூன்-2003 (சி-28132)



## NEW SCIENCE COLLEGE
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

**2004 A/L DAY CLASS**
(2003 பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்குரியது)
**CHEMISTRY**
திரு. N. மகேஸ்வரன் B.Sc. Dip.In. Ed.,
ஆரம்பம் - 02-06-2003 திங்கள் காலை 7.00 மணி
**2004 A/L Paper Class**
ஆரம்பம்: 02-06-2003 திங்கள் காலை 6.00 மணி
(18608)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அல்வாய் கிழக்கு
கிராம உத்தியோகத்தர் (J/380)
**உயர்திரு.வேலுப்பிள்ளை தியாகராசா**
அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம் Iஇற்கு பதவி உயர்வு பெற்றுள்ளமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவரது சேவை மேன்மேலும் சிறப்புடன் தொடர எல்லாம்வல்ல ஞானவைரவப் பெருமானை வணங்கி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

பெரியார் பகுதி,
அல்வாய் கிழக்கு,
அபிவிருத்திச் சபையினரும், மக்களும்.
(18604)



## விழாக்காலச் சிறப்பு வாணிப உரிமம்

எதிர்வரும் 2003.06.09ஆம் நாள் இடம்பெறவுள்ள வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய பொங்கல் நிகழ்வில் வாணிபம் நடத்தவுள்ளோர் 2003.06.05ஆம் நாள் தொடக்கம் ஆலய முன்றிலில் செயற்படவுள்ள வருவாய்ப்பகுதிச் சிறப்புச் செயலகத்தில் விழாக்காலச் சிறப்பு வாணிப உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அறியத்தருகின்றோம்.

வருவாய்ப்பகுதி,
நிதித்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்.
(18606)



பெயாரோஸ் சுப மாங்கல்யம்

உங்கள் திருமணச் செலவில்
பெரும் பகுதியை நாம் ஏற்போம்..



உங்கள் திருமணத்தை வெகு விமரிசையாக நிகழ்த்த பெயாரோஸ் விரும்புகிறது. உங்களுக்கு பிடித்த விதத்தில், பிடித்த இடத்தில் திருமணத்தை நடத்தலாம். ஆனால் இந்த வருடத்தில் நடக்க வேண்டும் என்பதே எமது ஒரே வேண்டுகோள்.

- மணப்பெண்ணின் புடவை
- தங்கச் சங்கிலி
- பாதணிகள்
- தோழியர் இருவரின் புடவைகள்
- ஆபரணங்கள்
- பாதணிகள்
- முக அலங்காரம்
- தலையலங்கார ஆலோசனைகள்
- மலர் அலங்காரம்
- மணமேடை அலங்காரம்
- மேசை அலங்காரம்
- திருமண கேக்
- திருமண ஸ்ரக்சர் கேக்
- திருமண அழைப்பிதழ்/கேக் பெட்டிகள்
- புகைப்படங்கள்/வீடியோ படங்கள்
- 150 பேருக்கான விருந்துபசாரத்துடனான மண்டபச் செலவுகள்

இவை அனைத்தையும் வழங்க நாம் தயாராக உள்ளோம்.

ஆறுதல் பரிசாக 10 தங்க நாணயங்கள்.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்
உங்கள் வருங்கால துணைவருக்கும் உங்களுக்கும் இடையில் நடந்த மறக்க முடியாத சம்பவத்தை சுவைபட எழுதி, இருவரும் சேர்ந்து அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிட்டு 25கி அல்லது 50கி பெயாரோஸ் வெற்று உறையுடன் இணைத்து இன்றே எமக்கு அனுப்பி வையுங்கள்.

பெயாரோஸ் சுப மாங்கல்யம், த.பெ. 1263, கொழும்பு.
முடிவுத் திகதி 2003 ஆகஸ்ட் 31.

அழகுக்கலை ஆலோசனைகளை
வழங்கும் அனுசரணையாளர்கள்
Salon Nayana

FairRose
Fairness Cream
With Rosewater & Sandalwood Paste




மென்மையான சருமத்திற்கு
வெண்மையான முகத்திற்கு

PHOENIX O&M 0147 Licence No.: C/39/2003


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# காலம் கடந்து விடவில்லை தட்டுங்கள்! திறக்கப்படலாம்!!

அரசு முன்வைத்துள்ள புதிய அபிவிருத்திக் கவுன்ஸில் ஆலோசனையை புலிகள் முற்றாக நிராகரித்துவிட்டனர்.

கேட்டது ஒன்று; அரசு தர முன்வந்ததோ வேறொன்று. அதைத் தெட்டத் தெளிவாக விளக்கியிருக்கின்றார் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் - இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தாம் எழுதிய கடிதத்தில்.

கடந்த பதினாறு மாத கால அமைதி முயற்சிகளின் போது மிகுந்த நெகிழ்ச்சிப்போக்கை - விட்டுக்கொடுப்பை - இணக்கப்பாட்டை - புலிகள் வெளிப்படுத்தியிருந்தனர். விடாப்பிடியான தங்களின் நிலைப்பாட்டிலிருந்து இறங்கி பல முக்கிய அரசியல் சலுகைகளை அரசுத் தரப்புக்கு வழங்கினர்.

அதுமட்டுமல்ல, மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் குறிப்பிட்டதுபோல மோசமான ஆத்திரமூட்டலுககு மத்தியிலும் புலிகள் மௌனம் பேணினர். புலிகளின் கப்பல் தகர்ப்பு, படகுகளில் போராளிகள் வீரச்சாவு ஆகியவற்றின் பின்னரும் தமது கொதிப்பை அடக்கி, அமைதி காத்தனர்.

இவ்வளவு விட்டுக் கொடுப்புக்களையும் புலிகள் செய்ததை வைத்துக்கொண்டு அமைதி முயற்சிகளின் போது அவர்களின் காதில் இலகுவாகப் பூச் சுற்றிவிடலாம் என்று யாரும் எண்ணி விடக்கூடாது. அரசின் புதிய யோசனைக்கு மதியுரைஞர் பாலசிங்கம் மூலமாகப் புலிகள் கொடுத்த பதிலடி இதை நிரூபிக்கப் போதுமானது.

அவரின் பதிலடி அறிக்கையில் முக்கியமான மூன்று அம்சங்கள் கவனிக்கத்தக்கவை.

ஒன்று - அரசின் யோசனை, கணக்கில் கொள்வதற்கே தகுதியற்றது என்பதற்கான காரணங்கள். அதுதான் அந்தக் கடிதத்தின் அடிப்படை சாராம்சம்.

இரண்டாவது - சமாதானத்தின், அமைதி முயற்சிகளின் பெயரால் புலிகளுக்கு பூச்சாண்டி காட்ட முயலும் - 'நல்லுபதேசம்'(?) செய்துவரும் - சில சர்வதேச சக்திகளுக்கு கொடுக்கப்பட்ட பதிலடி. இலங்கை அரசைப் புறம்தள்ளி வைத்துவிட்டு, புலகளுக்கு மட்டும் நிபந்தனைகளை - அழுத்தங்களை - போடும் விதத்தில் அறிவிப்புக்களை, ஆலோ சனை வடிவத்திலான உபதேசங்களை வெளியிட்டுவருகின்ற அந்த நாடுகளின் வாய்க்கு நல்ல பூட்டாக அமைந்திருக்கின்றது பாலசிங் கத்தின் பதில்.

தமது வழமையான இந்தப் பாணியில் டோக்கியோ மாநாட்டின்போது அதிரடித் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து புலிகளை 'அடக்கி' வைக்க முயன்ற இந்தச் சக்திகளை, 'மடக்கி' வாய் மூடி மௌனிகளாக்க வைத்திருக்கின்றது தற்போது மதியுரைஞர் பாலசிங்கம் வரைந்த கடிதம்.

இலங்கை அரசின் கையாலாகாத்தனத்தை இவ்வளவு தூரம் புட்டுக்காட்டிய பின்னரும், புலிகளைப் பார்த்து ஆயுதங்களை இப்போதைக்குக் கையளியுங்கள் என்று எந்த சக்தியும் கோருவதற்கு முகாந்தரம் இல்லை என்ற நியாயத்தை நிரூபித் திருக்கிறார் அவர்.

அவரது கடிதத்தின் மூன்றாவது முக்கிய அம்சம் - அதில் அரசின் புதிய யோசனை நிராகரிக்கப்பட்டிருக்கின்றதே தவிர - ரணிலின் அரசின் சங்கட நிலையை அது அம்பலப்படுத்தியிருக்கின்றதே தவிர - டோக்கியோவில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்ள மாட்டோம் என்ற புலிகளின் முந்திய அறிவிப்பு அதில் மீள வலியுறுத்தப்படவில்லை.

டோக்கியோ மாநாட்டில் புலிகள் பங்குபற்ற வேண்டும் என்று வலியுறுத்தும் அரசுத் தரப்புக்கும் ஏனையயோருக்கும் சற்று ஆறுதல் தரும் விடயம் இதுதான்.

தமது முந்திய அறிவிப்பை தற்போதைய கடிதத்தில் புலிகள் மீள வலியுறுத்தாமல் இருப்பதை நோக்கினால் -

டோக்கியோ மாநாட்டில் பங்குபற்றமாட்டோம் என்று தெரிவித்து கதவை இழுத்துச் சாத்திய புலிகள், இன்னும் அந்தக் கதவுக்கு தாழ்பாள் போட்டு அதை இறுக மூடவில்லை என்றுதான் கொள்ள வேண்டியிருக்கின்றது!

நியாயமான நடவடிக்கைகளை எடுத்து அதன் மூலம் புலிகளை வழிக்கு - டோக்கியா மாநாட்டுப் பாதைக்கு - கொண்டுவரவேண்டிய பொறுப்பு நலிவுற்று நிற்கும் ரணிலின் அரசையே சார்ந்தது.

காலம் கடந்து விடவில்லை. இன்னும் இருக்கின்றது.

"தட்டுங்கள்; திறக்கப்படலாம்!"

# நுணசை வித்தியாலயத்தை மீள இயக்க அனுமதி வழங்குக!

## பாடசாலைச் சமூகம் கோரிக்கை

சண்டிலிப்பாய்,ஜூன்1

கடந்த 12 வருட காலமாக இடம்பெயர்ந்து இயங்கிவரும் மாதகல் மேற்கு, நுணசை வித்தியாலயத்தை அதன் சொந்த இடத்தில் இயங்குவதற்கு அனுமதி வழங்குமாறு பாடசாலைச் சமூகம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கடிதம்மூலம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-

கடந்த 1992 ஆம் ஆண்டில் மாதகல் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையை அடுத்து இடம்பெயர்ந்த இந்த வித்தியாலயம் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, சாவகச்சேரி நுணாவில் என்ற இடத்திலுள்ள தனியார் கட்டடம் ஆகியவற்றில் இயங்கி வந்தது.

தற்போது மாதகல் சென்.யோசப் மகா வித்தியாலயத்தில் பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது.

இவ்வித்தியாலயத்தை மாதகல் மேற்கிலுள்ள அதன் சொந்த இடத்தில் மீள இயங்கச் செய்வதற்கு ஆவன செய்து தரவும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ். அரசாங்க அதிபர், சண்டிலிப்பாய் பிரதேச செயலர், வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கும் இது தொடர்பான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## நாட்டு நடப்பு

### ஒழிந்து போ! செவ்வாய் நீயே!!

அழகினில் அவளை மிஞ்ச
அவ்வூரில் எவரும் இல்லை
களங்கமில் மனதுடையாள்
கற்பினில் கண்ணகியை ஒத்தாள்
வளமுடன் வாழ்ந்த பாதை
வாட்டிற்று "செவ்வாய்" குற்றம்
இளமையின் எழிலும் போச்சு
இனியவள் வயதும் போச்சு
குளமதாய் கண்ணீர் மல்ல
கூனிற்று கும்பம் மெல்ல
அழஅழ அவளின் கண்கள்
ஆழமாய் உள்ளே போச்சு
பாழான இச்செவ்வாய்க் குற்றம்
பழி வாங்குது மாதர் தம்மை
வளமாக உலகில் வாழும்
வனிதையரைத் தீண்டாச் செவ்வாய்
இளமையில் மாதர் தம்மை
இழிவுறச் செய்யு திங்கே
அளப்பெரும் கொடுமை செய்யும்
அநியாயச் செவ்வாய் உன்னை
ஒழிந்து போ என விரட்ட
உன்னத இளைஞர் வாரீர்!

- விகடகவி.

## பதவி உயர்வு பெற்ற ஆசிரியர்களுக்கு

# தேக்கநிலைச் சம்பள உயர்ச்சி வழங்குவதில் முரண்பட்ட நடைமுறை

## உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

அச்சுவேலி,ஜூன்1

தேக்கநிலைச் சம்பள உயர்ச்சி வழங்குவதில் கல்வி வலயங்களுக்கு இடையில் வெவ்வேறான நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருவதாக ஆசிரியர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

ஆசிரியர் சேவை தரம்1 பதவி உயர்வுக்கு 2000ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் 50 வயது பூர்த்தி அடைந்திருக்கவேண்டும் என்ற வயதுக்கட்டுப்பாட்டு நிபந்தனையால் பதவியுயர்வு பெறமுடியாத ஆசிரியர்களுக்கு தற்போது தேக்கநிலைச் சம்பள உயர்வு வழங்கப்படுகின்றது.

சாதாரண வருடாந்த சம்பள உயர்ச்சி வருடந்தோறும் வழங்கப்படும் அதேவேளையில், தேக்கநிலைச் சம்பள உயர்ச்சி இரண்டு வருடங்களுக்கு ஒன்று என்ற அடிப்படையில் உச்ச சம்பளம் பெற்றவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

ஆசிரியர் சேவை தரம் 2:1 இல் உச்ச சம்பளம் பெற்ற காலத்தில் இருந்து கணிப்பீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வரும் தேக்கநிலைச் சம்பள உயர்ச்சி வழங்குவதில் மாவட்டத்திற்கு மாவட்டம், கல்வி வலயத்திற்கு வலயம் [illegible]றுபட்ட விதத்தில் முரண்பாடான நடைமுறைகள் பின்பற்ற[illegible]கின்றன.

சில கல்வி வலயங்களில் ஐந்து வருடங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட தேக்கநிலைச் சம்பள உயர்வு தவறாகக் கணிக்கப்பட்டு வழங்கப்பட்டுவிட்டதாக பல ஆயிரக்கணக்கான ரூபாக்கள் ஆசிரியர்களின் மாதாந்தச் சம்பளத்தில் இருந்து ஒரே தடவையில் முன்னறிவிப்பு இல்லாமல் மீளப்பெறப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சேவையில் மூத்த ஆசிரியர் வயதுக் கட்டுப்பாட்டால் பதவி உயர்வு பெறமுடியாமல் பாதிக்கப்பட்டு குறைந்த சம்பளம் பெறும் அதேவேளையில், இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை வழங்கப்படும் தேக்கநிலைச் சம்பள உயர்விலும் புறந்தள்ளப்படுவது தொடர்பாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

## பின்தங்கிய கிராமங்களில்

# கூட்டுத் தொழில் முயற்சிக்கு 'கெயர்' நிறுவனம் உதவி

## மூலதனம், பயிற்சிகள் வழங்கும்

யாழ்ப்பாணம்,ஜூன்1

குடாநாட்டிலுள்ள வறிய கிராமங்களில் கூட்டுத் தொழில் முயற்சிகளை ஏற்படுத்தி அக்கிராமங்களிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு 'கெயர்' நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

பண்டத்தரிப்பு, அச்செழு, விளான், கட்டுடை, மாதகல், வட்டுக்கோட்டை, சிறுப்பிட்டி, புத்தூர் ஆகிய எட்டுக்கிராமங்களில முதற்கட்டமாக இந்தக் கூட்டுத்தொழில் முயற்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மேற்படி கிராமங்களிலுள்ள வறிய மக்களை குழுக்களாகப் பிரித்து அக்கிராமங்களில் சிறந்து விளங்குகின்ற கைத்தொழில் உற்பத்திகளை அவர்கள் மூலமாக மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கம் என 'கெயர்' நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்குரிய மூலதன உதவிகள் மற்றும் மேலதிக பயிற்சிகளையும் தமது நிறுவனம் இலவசமாக வழங்கும் என்றும் - அவர் தெரிவித்தார்.

இந்தக் கிராமங்கள் ஒவ்வொன்றிலும் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களை வேறு இடங்களில் சந்தைப்படுத்துவதற்கேற்ற உதவிகளையும் தமது நிறுவனம் செய்து கொடுக்கும் என்றும் -

இதன் மூலம் கிராமப்புற வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும் எனத் தாம் நம்புவதாகவும் - அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (எ-4)

### நாளை

வைகாசி 19
திங்கட்கிழமை
02.06.2003
திதி : துதியை
பிற்பகல் 12.47 வரை
நட்சத்திரம் : திருவாதிரை
வைகறை 5.11 வரை
[illegible] : 11.52-1.22
[illegible] : 7.22-8.52
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

உ[illegible]லத்தின் மதிப்பை நோய் வரும்வரை அறியமுடியாது.

# உடுவில் கோட்டப் பாடசாலைகளின் குறைகள் விரைவில் நீக்கப்படும்

## புதிய உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

உடுவில் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் தேவைகள், வேலைத்திட்டங்கள், ஆசிரியர் பற்றாக்குறை போன்ற குறைபாடுகளை நிவர்த்திசெய்ய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என உடுவில் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குபேரநாதன் அறிவித்துள்ளார்.

இதன்பொருட்டு ஒவ்வொரு பாடசாலை அதிபர்களிடமிருந்தும் தரவுகள் சேகரிக்கப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்தொகை, அதிபர், ஆசிரியர் பற்றிய விவரங்கள், அதிபரின் சொந்த முகவரி, பாடசாலை தொலைபேசி இலக்கம், வலிகாமம் கல்வி வலயத்திலிருந்து பாடசாலை அமைந்துள்ள தூரம் போன்ற பல விவரங்கள பாடசாலை அதிபர்களிடமிருந்து கோரப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (எ-152)

# ஊர்காவற்றுறை பிரதேசத்துக்கான தொலைத்தொடர்பு சீரில்லை

## ரெலிகொம் முகாமையாளரிடம் முறைப்பாடு

ஊர்காவற்றுறை பிரதேசத்துக்கான தொலைத்தொடர்பு வசதிகள் கடந்த சில மாதங்களாக சீரற்றிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஊர்காவற்றுறை ஆர்.எல்.எல். தொலைத்தொடர்பக உரிமையாளர்கள் யாழ். ரெலிகொம் முகாமையாளருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளனர். அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது பிரதேசத்துக்கான தொலைத்தொடர்பு சீரற்றிருப்பது குறித்து தொலைபேசி இயக்குநரிடம் முறைப்பாடு தெரிவித்திருந்தோம். ஆனால் இதுவரை தொலைத்தொடர்பு சீராக்கப்படவில்லை.

எமக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா தொடக்கம் ஐயாயிரம் ரூபா வரையிலான மாதாந்த ஒப்பந்த அடிப்படையிலேயே இணைப்புக்கள் வழங்கப்பட்டதை தங்களின் கவனத்துக்கு அறியத்தருவதுடன், விரைவில் தொலைத்தொடர்பு வசதிகளை சீராக்கி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது. (எ)

# சட்டவிரோத மணல் அகழ்வு; 15 பேருக்கு விளக்கமறியல்!

## சாவகச்சேரி நீதிவான் உத்தரவு

தென்மராட்சி,ஜூன்1

கச்சாய்ப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து ஏற்றிச்சென்ற 15பேரை சாவகச்சேரி நீதிவான் விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.

இரவுவேளைகளில் திருட்டுத்தனமாக வாகனங்களில் மணல் ஏற்றிச்சென்ற இவர்கள் கொடிகாமம் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட[illegible] கடந்த வியாழனன்று இவர்களைப் பொலீஸார் சாவகச்சேரி [illegible]ன்றில் ஆஜர்செய்தனர். அவர்களில் ஆறு பேரை எதிர்[illegible] 10ஆம் திகதிவரையும், ஒன்பதுபேரை எதிர்வரும் 12ஆ[illegible] திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் க.அரியநாயகம் உத்தரவிட்டார். (ஒ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி நகர அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வு

சாவகச்சேரி,ஜூன்1

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நகர சபைக்கு விஜயம் செய்து நகர அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடினார்.

யுத்த அழிவுகளின் பின்னர் சாவகச்சேரி நகரசபை பல பின்னடைவுகளைச் சந்தித்திருப்பதாகவும் -

நகரில் நாளாந்தம் சேரும் நகரக் கழிவுகளை அகற்ற போதிய வாகனங்கள் இல்லாதிருப்பதாகவும் நகர சபை செயலாளர் செ.சரவணபவ, சிவாஜிலிங்கம் எம்.பியிடம் சுட்டிக் காட்டினார். (எ-31)

## 'ரீ.வி' பார்த்தவர்கள் மீது கத்திக்குத்து மூவர் படுகாயம்!

தென்மராட்சி,ஜூன்1

தொலைக்காட்சி நிகழ்வு பார்த்துக் கொண்டிருந்த குடும்பத்தினர் கத்தி, இரும்புக் கம்பி ஆகியவற்றால தாக்கப்பட்ட சம்பவம் கடந்த புதனன்று இரவு மட்டுவில் வடக்கு அரசடி வீதியில் இடம்பெற்றது.

வெட்டுக்காயம் மற்றும் அடிகாயங்களுக்கு இலக்கான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதே இடத்தைச் சேர்ந்த செல்லர் யோகரத்தினம் (வயது 48), அவரது மனைவியான யோ.கமலாதேவி (வயது47), மகளான யோ.சுயேந்தினி (வயது18) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (எ-117)

## வலி.கிழக்கில் சட்டவிரோத மின்பாவனை அதிகரிப்பு

வலி.கிழக்கு,ஜூன்1

வலிகாமம் கிழக்கின் பல்வேறு பிரதேசங்களிலும் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகவும் -

மின்சாரசபையினர் இது குறித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் - பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோப்பாய், புத்தூர், நீர்வேலி ஆகிய பகுதிகளிலேயே இவ்வாறு சட்டவிரோதமாக மின் பெறுவோரின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதாகவும்- இதனால் உயிர் ஆபத்து ஏற்படக் கூடிய நிலை உள்ளதாகவும் - சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-180)

## நஷ்டஈடு பெறாதோரின் விவரங்களை சமர்ப்பிக்க அவசர பணிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்1

யாழ்.மாவட்டத்தில் யுத்தம் காரணமாக வீடு, மலசலகூடம், கிணறு ஆகியவை சேதமடைந்து அவற்றுக்கு இதுவரை நஷ்டஈடு பெறாதவர்களின விவரங்களை திட்டமுன் மொழிவாக உடன் அனுப்பிவைக்குமாறு சகல பிரதேச செயலாளர்களையும் புனர்வாழ்வு திட்டமிடல் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை கேட்டுள்ளார்.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக தொழில் நுட்ப உத்தியோகத்தரின் உதவியுடன் இந்த விவரங்கள் திரட்டப்பட வேண்டும் என்றும் - அவர் அறிவித்துள்ளார். (எ-80)


**தையல்**

நவீன முறையில்
திரைச்சீலை (ஸ்கேட்டின்)
தைத்துப்
பெற்றுக்கொள்ள
விரும்புபவர்கள்
தொடர்பு கொள்ளவும்.
T.P.: 077 6057 224

(18439)

**பணியாளர் தேவை**

இரும்புப் பொருள் விற்பனையில் அனுபவமுள்ள ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விரும்புபவர்கள்:
"பகலோன் களஞ்சியம்"
334, ஆஸ்பத்திரி வீதிக்குச்
சமுகமளிக்குமாறு
வேண்டுகின்றோம். (18575)

**புற்றுநோயாளர் கவனத்திற்கு**

எதிர்வரும் ஜூன் 21 ஆம், 31 ஆம் திகதிகளில் புற்றுநோய் வைத்திய நிபுணர் Dr. வாணி அவர்கள் வருகை தருகின்றார். நோயாளர்கள் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**
8, இராமைய்யாச் செட்டியார் லேன்,
யாழ்ப்பாணம்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகே). (18583)

**இதோ!**

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 - 222 - 2567

(குறிப்பு:- சத்திரச் சந்திக்கு அண்மை) (சி-27866)

**I.E.M.S. (S.T.S.D.U.K.)**

(MEMBER OF THE WORLD COMMUNICATION ASSOCIATION)

We have the pleasure to inform the opening of an English medium Pre School Enrolments Now on...

சர்வதேச ரீதியிலான ஆங்கில பாலர் பாடசாலை
ஆரம்பம் இன்றுமுதல் : (2 முதல் 5 வயது வரை)
★ உங்கள் நேரத்திற்கேற்ப குழந்தைகள் பராமரிக்கப்படுவர்.

**ELOCUTION** I.E.M.S. & LAMDA

Spoken / Written with Grammar வகுப்புகள் நடைபெற்று சர்வதேச ரீதியிலான சான்றிதழ்களும் விஷேட சித்திக்கு கொழும்பில் பரிசுகளும் வழங்கப்படும்.

★ ஆங்கில ★ பிரத்தியேக வகுப்புகள் / Individual Classes எல்லா வயதினருக்கும் உங்கள் வசதிக்கேற்ப நேரம் ஒதுக்கப்படும்.

இடம் :
**I.E.M.S. INSTITUTE**
டச் றோட், கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(18485)


**முதலாம் ஆண்டு நீங்காத நினைவலைகள்**



மண்ணில் 20 - 10 - 1937

விண்ணில் 11 - 06 - 2002

**அமரர் அப்புத்துரை பரமசிவம்**

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர் - வட்டுக்கோட்டை)

ஆண்டு ஒன்று ஆனதப்பா
அன்பு நதி ஓய்ந்ததப்பா
நினைவலைகள் மோதுதப்பா
நிழற்படம் தான் தெரியுதப்பா!

என்றும் உங்கள் நினைவுடன்....,
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகன்,
பேரன், சகோதரர்கள், உற்றார். உறவினர்கள்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(18176)

**ஐந்தாம் ஆண்டின் விளிம்பில்**



மலர்வு 17 - 05 - 1931

உதிர்வு 27 - 05 - 1998

அமரர்
**வைத்திலிங்கம் கனகரெட்ணம்**

(யாழ்.மாநகர சபை முன்னாள் சாரதி)

அன்புள்ள அப்பாவே!

காலத்தின் வேகத்தில் காயங்கள் ஆறாது
கண்ணீரின் வேகத்தில் காவியங்கள்
படைக்கின்றோம்
உமை எண்ணி தவிக்கின்றோம்.

மனைவி - மோட்சலெட்சுமி
மகன் - சதீஸ் (Finland)
மகள் - கமலினி
(இராமநாதன் நுண்கலைப்பீடம்.
முதலாம் வருடம், நடனம்).

புங்கன்குளம்
(கச்சேரியடி),
அரியாலை,
யாழ்ப்பாணம். (18555)


**அதிபோஷாக்கு மிக்க உன்னத பானம்**

**PROVIN-X**

புரோவினெக்ஸ் இல் 16 வகையான விற்றமின்களும் மேலதிக கனியுப்புக்களும் அடங்கியது.

- இழந்த சக்தியை விரைவாக மீட்டெடுத்தல்
- நோய்வாய்ப்பட்டோர் உடன் புத்துணர்வு பெற
- கண்பார்வை சக்தியை அதிகரித்தல்

மேலும் விளையாட்டு வீரர். கர்ப்பிணித்தாய்மார். வளரும் பிள்ளைகள். வயோதிபர் உட்பட முழுக்குடும்பத்துக்கும் ஏற்ற சிறந்த பானம்




யாழ். முகவர்:
**ஜெகன் பார்மசி,**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 3191

வன்னி முகவர்:
**அகிலன்ஸ் பார்மஸி**
(பிள்ளையார் மருந்தகம்)
கிளிநொச்சி.



இலங்கையில் சந்தைப்படுத்துவோர்:
**ARKEM COLOMBO**
T.P.: 470290, 075 344436
E-mail: arkem@sltnet.lk

(சி27733)

PROVIN - X தற்போது அனைத்து முன்னணி பார்மஸிகளிலும் பிரதான கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லை மண் மீண்டும் எழும்!

**1987இல் இந்திய அமைதிப் படை இலங்கைக்கு வந்தபோது யாழ்ப்பாணத்தில் 'சயனைட்' அருந்தி வீரச்சாவடைந்த குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் ஞாபகார்த்தமாக வல்லை தீருவில் மைதானத்தில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபி கடந்த 1996ஆம் ஆண்டு ஸ்ரீலங்காப் படைகளால் துவம்சம் செய்யப்பட்ட சம்பவத்தை நினைவு கூர்கிறார் கட்டுரையாளர்.**

**தற்போது இந்தத் தூபி அங்கு மீள நிர்மாணிக்கப்படுகிறது.**

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகப் போரில் தாக்கங்களைப் புதைத்து வைக்காத தமிழீழத்தின் ஒரு பகுதி கூட இன்றில்லை. துல்லியமாகக் கூறின் வங்கக்கடலே வாய் திறந்து நீ கூறு. ஈழமண்ணை அலையலையாக நித்தம் நீ முத்தமிட்டுச் செல்வாயே! சப்தமிட்டுக்கூறு.

நீலிவிழிக்கண்ணீரால் ஈழத்தமி



ழர் நெஞ்சங்களை கழுவிவிடலாம் எனப் பசுத்தோல் போர்த்து வந்த பாரதமே படிக்கவில்லையா நீ! எம் தலைவர் சுதுமலையிற்கூறிய வார்த்தைகளை.

"ஈழத்தமிழரை இனிப் பாரதத்தின் கைகளில் ஒப்படைக்கிறேன்" என்று மனமின்றிக் கூறிய அந்தச் செய்தி பத்திரிகைக்குப் போய் ஈரமை காய்வதற்குள் ஈவிரக்கமற்ற நரி வேடம் போட்ட அந்த ஜே.ஆர். கதைகேட்டு நம்பன்னிருவரைப் பறித்தாயே.

புலேந்தி அம்மான் என்றால் எங்கும் புகுந்து வீரத்துடன் விளையாடும் வீரன் அல்லவா? குமரப்பா என்றால் குடல் கலங்குமே? இவர்களைக் குறிவைக்க இதுவா நீ போட்ட ஒப்பந்த வரிகள். அவர்களுடன் அந்தப் பன்னிருவரைப் பறித்ததனால் போராட்டப் பாதையை மாற்றமுடிந்ததா? சங்கத்தமிழும் தமிழீழ மண்ணும் தங்கள் இரு விழிகள் என இலட்சியப் பற்றைக் காட்டினார்களே இன்னுமா புரியவில்லை.

வரலாறு உள்ளவரை இதனை வாய்விட்டுச் சொல்லுவதற்காகவே வல்லையில் ஓங்கி உயர்ந்ததுதான் தீருவில் நினைவுத் தூபி.

காலம் உருண்டோடியது. வரலாறு வாசலைத்தட்டியது. பதினைந்து ஆண்டுகள் கழிந்து வந்த நினைவு நாள். அன்று 05.10.2002 என்மனம் அதிகாலையிலேயே அவசரப்படுத்திக் கொண்டிருந்தது. வங்கி அலுவல்கள் எவ்வாறு சீக்கிரமே நிறைவு பெற்றதை யான் அறியேன். பதிலோன்றே ஒன்றுதான். ஆவல். ஆம், எமது வீட்டின் அருகே நடக்கும் நிகழ்வுக்காக ஆவல் கொண்டது ஆச்சரியமென்ன? அதுவும் அந்த விலை மதிக்க முடியாத வீர புருஷர்களுக்காக தூபி அமைந்துள்ள எல்லையே எங்கள் வீட்டு மதில்தானே. நானும் எனது மனைவியும் எமது வீட்டைச் சென்றடைந்தபோது மாலை ஏழு மணியாகியது. புலிகளின் ஏற்பாட்டில் நடந்த அந்த நிகழ்வில் அப்போது வல்லை... வல்லை... வல்லை... மண்... மண்... மண்... மீண்டும்... மீண்டும்... மீண்டும்... எழும்... எழும்... என எதிரொலி.

கூட்டத்தில் நானிருந்தேன். கூடவே வந்த ஆவலைத் துறந்தேன். கூடியிருந்தோரை மறந்தேன். அந்த நாள் அதேநாள் எனது நினைவுக்கு வந்தது. மறக்கமுடியாத அந்த நாள் என் நினைவுத் திரையில் நிழல் படமாக ஓடியது.

1987இல் இந்திய இராணுவம் இலங்கை வந்ததும் அமைதிப்புறா ஒன்று அதன் சிறகை ஒடித்ததும் முடிந்த கதையல்லவோ. தீருவில் நினைவுத்தூபி அதனால் உருவாகியதன்றோ. பொதுமக்கள் பலர் தம் காணிகளைப் பகிர்ந்தளிக்க விஸ்தீரமான அந்த வடிவம் பெற்று ஓடிக்கொண்டிருந்தது.

பின்னாளில் போராளிகளின் ஒன்றுகூடல் நிகழ்வுகளுக்குரிய இடமாகிய அதன் சுற்றுப்புறச் சூழலில் அமைக்கப்பட்ட பூங்கா சுற்றுலா மையமானது.

அந்தப் புனிதமான இடம் பொழுதுபோக்கிற்காகக் கட்டப்பட்டதல்ல. காதலுக்காக எழுந்த தாஜ்மஹாலுமல்ல. இதனையறியாதோர் ஏதோ சுடுகாடு எனும் போதெல்லாம் என்னைச் சல்லடை போட்டுத்துழைப்பதுபோல் இதயம் குமுறிடும் வேளையில் அனலிடைமெழுகாவேன்.

இங்கு தானே.... அந்தத் தியாகச் செம்மல்கள்.... தலைவன் காட்டிய வழியில் நின்றவர்கள்.... தமிழீழமே எங்கள் மூச்சென்று கட்டுண்டவர் வெற்றுடல்கள் காற்றுடன் சங்கமமாகியபோது கரைபுரண்டோடியது கண்ணீர் வெள்ளம். தமிழன் சாதனைக்கு வரையறை போட்டு வரம்பு கட்டமுடியுமா? ஒருமுறைதான் வாழ்வு என்று உலகம் அறியும். ஆனால், ஈழத்தமிழன் என்றால் அந்த முடிவிலும் உலகின் கண்களை உயர்த்த வைப்பான். கருவறையே கல்லறையானாலும் காவியம் படைப்பான்.

அதனால் உயர்ந்ததுதான் தீருவில் நினைவுத்தூபி. மக்கள் மனங்கள் இணைந்தன. வல்லுநர்கள் திரண்டார்கள். செய்வதைச் செவ்வனே செய்யும் செல்வேந்திரா நெறிப்படுத்தினார். பொறியியல் வல்லுநர் இராஜேந்திரன் தலைமையில் வடிவமைத்தார்கள். 1938இல் அமெரிக்கா சென்ற அன்னபூரணி கப்பலின் பாய்மரத்தை அன்போடு நினைவு கூர்ந்தார்கள். அன்று தமிழன் வரலாறு படைத்தான் கடலிலே. ஆனால், இன்றோ அதே வழிவந்தவர்கள் கடலுக்குள் செல்வதற்குத் தடை விதிப்பா? காற்றுக்கும் வேலி போடுவார்கள். நேற்றுவரை தமிழன் எத்தனைதடை தாண்டிவிட்டான். இலங்கை இராணுவம் ஓய்வெடுக்க ஏற்படுத்திய ஒப்பந்தமா இலங்கை - இந்திய ஒப்பந்தம். 1987இல் அமைதிப்படை என்ற பேரில் ஆக்கிரமிப்புப் படையொன்று காலடி எடுத்துவைத்தது.

மஹாத்மா காந்தி சிலைக்கு முன்னாலே மனித உயிர்கள் பறிக்கப்பட்டன. எந்த நாட்டிலுமில்லா கொடூரம். வைத்தியசாலைக்குள்ளேயே மனித உயிர்கள் பறிக்கப்பட்டன. காட்டுமிராண்டித்தனம் அரங்கேறியது. அப்பாவி மனித உயிர்கள் அநியாயமாக அழிக்கப்பட்டன.

அவர்களுக்காக அந்த இனத்திற்காகப் பசியை மறந்தவர், வீட்டை மறந்தவர் வீரமுழக்கமிட்டு சாதனை படைத்தவர் சரித்திரத்தை முடிக்கலாமென்று தப்புக்கணக்குப் போட்டு வந்த அமைதிப்படை அமைதி கொல்லும் படையாகினர்.

கடலிலே சென்ற எம் வீரப்புதல்வர்கள் பன்னிருவரைக் கைதியாக்கினர். கைகளில் ஆயுதமில்லை ஆனாலும் அவர்கள் கைகளுக்கு விலங்கிட்டனர். தலைநகர் கொழும்புக்கு அனுப்ப முயற்சித்தவேளை தடுத்துக் கூறினர். அனுப்பவேண்டாம் என்றும், எங்களுக்கு என்ன நடக்கும் என்பதை நாம் அறிவோமென்று எடுத்துக் கூறினர். கேட்டார்களா? நாடகத்தை நடத்திப் பார்க்கலாமென்று நடவடிக்கையில் இறங்கினர். எண்ணம் - சொல் - செயல் மூன்றும் ஒன்றாகவே வாழும் வீரமறவர்கள் அல்லவா "சயனைட்" அருந்தினர். இந்தியாவையே சம்மட்டி, சாட்டையால் அடித்தனர். பன்னிருவரும் தம்முயிரை மாய்த்தனர். அவர்களுக்காக ஓங்கி உயர்ந்து நின்றது "தீருவில் நினைவுத்தூபி".

1988இல் அமைக்கப்பட்டு அதன் முதலாவது நினைவஞ்சலி அனுசரிக்கப்பட்டது. ஒக்ரோபர் 5 என்றால் எல்லாத்திக்கிலும் இருந்து திரண்டு வரும் போராளிகளை அங்கு காணலாம். இதயத்தைத்தொடும் அந்த நிகழ்வே எல்லோரையும் ஈர்த்தது. மக்கள் திரண்டிடும் அந்நாள் வல்வை முத்து மாரியம்மன் கோயில் இந்திரவிழாவை எமக்கு நினைவூட்டியது. காலையில் வந்தவர்கூட மாலை வருவதை மறந்தனர்.

வண்ணத் தமிழ் காவலருக்கு வடிவமைத்த எழுச்சிச் சிலை அங்கு தூபியுடன் திரு.ரமணி அவர்களால் வடிவமைக்கப்பட்டு ஆண் - பெண் போராளிகள் இணைந்து வெற்றிக் கொடியாம் புலிக்கொடியை ஏற்றுவதாகவும் சமரிலே 'சயனைட்' கடித்து வீரமரணம் அடைந்த சக போராளி ஒருவரை கைகளில் தாங்கும் போராளியை அந்த எழுச்சிச் சிலை தன்னகத்தே கொண்டு வீரகாவியத்தை எல்லோருக்கும் எடுத்துக்கூறி நினைவூட்டுவதாக அமைந்தது.

யாழ்.குடாநாட்டையே ஒரு குறிப்பிட்ட காலம் வரை தன்கட்டுப்பாட்டில், கட்டுக்கோப்பான வாழ்க்கை முறையுடன் வைத்திருந்த கேணல் கிட்டுவினதும் அவர்களுடன் கடலிலே காவியமான சக போராளிகளதும் ஞாபகார்த்த சிலையும் அவர்கள் மரணித்த 'எம்.வி.அகத்' (M.V. Ahad) கப்பலின் முன் அணியம் அங்குள்ள குளத்தில் நங்கூரமிட்ட வடிவிலும் எல்லோருக்கும் நினைவூட்டுவதாக அமைந்தது.

பல வீரகாவியங்கள் ஒன்றாக நினைவுபடுத்தப்பட்டு குமரப்பா, புலேந்திரன் போன்ற பன்னிருவருக்காகவும் வடிவமைக்கப்பட்ட நினைவுத் தூபி இந்தியா, இலங்கைத் தமிழர்மீது காட்டிய கயமைத்தனத்தை உரத்துக் கூறுவதற்காக உயர்ந்து நின்றது. அங்கு அமைக்கப்பட்ட பூங்கா அந்த வீர மறவர்களுக்கு மலர் அஞ்சலி நிரந்தரமாகவே செலுத்துவதுபோல் அமைக்கப்பட்டது. வீதியும் மாவீரர் வீதியென உரத்துக் கூறிக்கொண்டது. வரலாறு படைத்தவர் இல்லத்துக்கு வழிவிட்டு நின்றது.

காலதேவன் கைவிரித்தான். ஞாலத்தில் நமக்கோர் இடம் வேண்டும் என்று தானே கேட்டோம். அந்த இடத்தையே ஆக்கிரமித்தது சிங்கள அரசு. வரலாறு கண்டிராத யாழ். குடா நாட்டுமக்களின் ஒட்டு மொத்த இடப்பெயர்வும் அதனைத் தொடர்ந்து 1996 மே மாதம் ஸ்ரீலங்கா இராணுவம் வடமராட்சியில் காலடி எடுத்து வைத்தது. அப்போது எமது குடும்பம் தற்காலிகமாகக் கரவெட்டியில் வாழ்ந்து வந்தபோதும் நாம் பிறந்து தவழ்ந்து விளையாடிய மண்ணாம் வல்வெட்டித்துறைக்குப் போய்வருவதுண்டு.

வல்வெட்டித்துறைக்குச் சென்று வரும் நாளில்தான் எனது 12 வயது மகனுடன் ஒருநாள் எமது வீட்டை நெருங்கியபோது எமது வீடு சிங்கள இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது.

அங்குள்ள இராணுவத்துடன் சிங்களத்தில் உரையாடியபோது கப்டன் தரத்திலுள்ள (கருணரட்ணா என நினைக்கிறேன்) ஓர் அதிகாரி என்னிடத்தில் முன்வந்து தன்னை அறிமுகம் செய்ததுடன் "உங்கள் வீட்டை எந்தவித சேதமுமின்றி வைத்திருக்கிறோம், உள்ளே வந்து பாருங்கள் எனக் கூறி அழைத்துச்சென்றார்.

"அந்த வீடு இருந்த கோலத்தையோ வீட்டின் சுவர்களும் சுற்று மதில்களும் பாரிய துவாரங்கள் போடப்பட்டு காவலரணாகக் காட்சியளித்தமையையோ நான் இங்கு கூற வார்த்தை இல்லை. அதன்பின்பு நடந்த சோக நிகழ்வையும் வக்கிர செயலையும் தான் இங்கு மனங்குமுற நினைவு கூற விளைகின்றேன்.


மிகவும் நாகரிகமாகவும் பவ்வியமாகவும் கதைத்த அந்தக் கப்டன் சிறிது நேரத்தில் என் மகனையும் அழைத்துக் கொண்டு எமது வீட்டின் முன்னால் அமைந்துள்ள என் மைத்துனியின் வீட்டுக்குள் போகும்படி பணித்தார்.

கண்மூடித்திறப்பதற்குள் பாரிய வெடிச்சத்தம் கேட்டது. நாம் இருந்த வீட்டுக் கூரைத்தகடுகள் மீது பொலபொலவென மழைபோல் கற்சிதறல்கள்

**ஆதிகோயிலடி ஜெயம்**

வந்து வீழ்ந்ததை உணர்ந்தோம். வீட்டு மதிலால் தூபிப் பக்கம் பார்த்தபோது தூபி 5 பாகையளவில் சரிந்து காணப்பட்டது. மீண்டும் பாரிய சத்தம். வெளியேவந்த என்னை உள்ளே போகுமாறு பணிக்கப்பட்டேன். எமது வீட்டில் இருந்து அதாவது, அவர்கள் போட்ட காவலரணிருக்கும் எமது வீட்டில் இருந்து நீளமான மின்காந்த வயர்கள தூபியின்

சிதைக்கப்பட்ட சிலைகள்



அடிப்பாகம்வரை நீட்டிச் சென்றதை அவதானிக்கமுடிந்தது. மீண்டும் பாரிய சத்தம். அதைத் தொடர்ந்து கற்சிதறல்கள். அப்போது பூஜிக்கப்பட வேண்டிய தூபியை நாம் பார்த்தபோது அது மேலும் வல்வை சிவன் கோவில் பக்கமாகச் சரிந்து காணப்பட்டது. எல்லாம்வல்ல பரம்பொருளே என்று வணங்குவதுபோல் நின்றது. இப்போது 15பாகை அளவில் சரிந்தது. சரித்திரம் படைத்தவர் சரீரம் சங்கமமான இடமல்லவா. தலை சாய சங்கடப்பட்டது. மீண்டும் பாரிய சத்தம். பொறுமையிழந்தேன் வெளியில் வந்தேன். வீட்டு வாசலில் நின்ற சிங்களச் சிப்பாய் தடுத்து நிறுத்தினான் என்னை. என் உணர்வுகளை அல்ல. வீட்டுக்குள் முடக்கப்பட்டேன். மீண்டும் 3,4 தடவை பாரிய வெடிச்சத்தம். நீரோ மன்னன் பிடில் வாசித்து மகிழந்ததில் தவறில்லை அத்தனை மகிழச்சியில் ஆர்ப்பரித்தார்கள். உயிருடன் அந்த வீரமறவர் இருந்த காலத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்திற்குச் சிம்மசொப்பனமாக இருந்தவர் சின்னம் வீழ்ந்தது. அந்த நீண்ட நெடிய தூபி சரிந்தது. சிவன் - பார்வதி கோவிலின் பக்கமாக மட்டுமல்ல இந்தியாவையும் நோக்கி அதன் அநீதியைச் சுட்டிக்காட்டுவதாகவும் சரிந்தது. அந்த மகிழ்ச்சி அடங்க அதிகநேரம் எடுத்தது அவர்களுக்கு.

மதிலால் நான் பார்த்தபோது அந்தோ தூபியைக் காணவில்லை. என் ஆவேசமும் துடிப்பும் இன்றும் எழுத்தில் வடிக்க முடியாமல் வருந்துகிறேன். என்ன செய்வேன். போர் நெறி தவறிய, சர்வதேச மரபுகளை யுத்தத்தில் கடைப்பிடிக்கத் தெரியாதவர்கள் மகிழ்ந்தார்கள். ஆனால், எனக்குள்ளே ஒரு தீக்குளிப்பே நடந்து கொண்டிருந்தது. இனவாத அரசே இதற்கு ஒரு முடிவுகாலம் நிச்சயம் வரும் என்று வாய்விட்டுத் திட்டினேன். வல்லமையற்று வேறு ஒன்றும் செய்யமுடியாமல் தவித்தேன்.

ஒரு சிப்பாய் எம் வீட்டை நோக்கி ஓடிவந்தார். என்னிடம் மண்வெட்டி அல்லது அலவாங்கு இருக்கிறதா என்று கேட்டான். ம்... அவருக்கு உதவி செய்யும் நிலையிலா இருந்தேன். இல்லை என்று கூறினேன். நான் கூறிய விதத்தில் என் மனநிலையைப் புரிந்து கொண்டானோ என்னவோ அவன் விடவில்லை. எமது வீட்டுக்குள் புகுந்து எப்படியோ ஒரு மண்வெட்டிப் பிடியை எடுத்து வந்தான். என்ன செய்யப்போகிறான் என எண்ணினேன். இல்லை என்றதற்காக என்னைத் தாக்குவானோ என நினைத்த நான் இப்படியே என்னை அடித்துக் கொன்றான் என்றால் எவ்வளவு உதவியாக இருக்கும். இனி நான் உயிருடன் இருக்கவேண்டுமா? மானங்கெட்ட தமிழனாக வாழும் ஒரு வாழ்வா. அதுவும் இந்த வல்வை மண்ணில்.

என்னே ஈனச்செயல் எழுச்சிச் சிலையில் இருந்து வெடித்துச் சிதறிய ஒரு போராளியின் சிமெந்தினாலான ஒரு முன்கைப்பகுதியை அந்தப் பிடியால் அடித்து அடித்து அவை சிறு துண்டுகளாகப் போகும் வரை தன் வக்கிரகத்தைத் தீர்த்துக் கொண்டான். சிலுவையில் மரித்த கிறிஸ்து பிரானின உயிரற்ற உடலை ஒரு யூதன் ஈட்டிகொண்டு துளைத்தானே அதுபோல் இருந்தது. நெஞ்சைப்பிளக்கும், குருதியை உறைய வைக்கும் அந்தச் செயல் உலகில் எந்த மனிதனாலும் மன்னிக்க முடியாதது. சிலைக்கே இந்தநிலை என்றால் இவர்களிடம் போராளிகள் உயிருடன் அகப்பட்டால் - எண்ணிப்பார்கவே முடியாமல் தவித்தேன். அந்தப் பன்னிருவரும் 'சயனைட்' அருந்திய ஒப்பற்ற அந்த நிலையை ஒரு முறை நினைத்தபோது என் ஓர விழிகள் அப்போது கண்ணீர் வடித்துக் காய்ந்திருந்தது.

வீரகாவியம் படைத்த வல்லை மண்ணிலே சரித்திரச் சின்னங்களாக அமைந்த குமரப்பா, புலேந்திரன் போன்ற பன்னிருவர் நினைவுத்தூபி, போராளிகளின் எழுச்சிச் சிலை, கேணல் கிட்டுவினதும் சக போராளிகளினதும் நினைவுச் சின்னமான கப்பல்.. அழிக்கப்பட்டு தீருவில் மைதானம் 05.10.2002இல் கொண்டாடப்பட்டு அதில் வீரமுழக்கமிட்ட சூரியமூர்த்தி பேசிய வல்லை மண் மீண்டும் எழும் என்பதில் சந்தேகமில்லை. அது தூரத்திலுமில்லை. என்றும் பொய்க்கப் போவதும் இல்லை.

மண்ணின் மகிமை அன்னபூரணியுடன் சென்றுவிடவில்லை. ஆக்கிரமிப்புப் படைகளால் அழிக்கப்பட்டாலும் அது தன்னகத்தே கொண்டுள்ள தனிச்சிறப்பை தரணி அறியும் நாள் வெகுதூரத்திலும் இல்லை. அதன் பெருமையை நாட்டின் தென்பகுதியினர் உணர்ந்துதான் எம் தலைவர் வீட்டுக்கு அதனைப் பார்வையிடச் சென்றவர்கள்கூட ஒரு பிடி மண்ணும் எடுத்துச் செல்லுகின்றனர்.

எனவே வல்வை மண் மீண்டும் எழும். இதே தீருவில் மைதானத்தில் சரித்திரச்சின்னங்கள் உருவாகும். இதற்கு மானம் உள்ள தமிழன் உழைக்க வேண்டும். ✦



சாய்க்கப்பட்ட தூபி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அபிவிருத்திக்கு ஜப்பான் 3 ஆண்டுத் திட்டம்

இலங்கையின் அபிவிருத்தி புனர்வாழ்வுப் பணிகளுக்கு உதவி செய்வதற்கென ஜப்பான் மூன்று ஆண்டு காலத் திட்டம் ஒன்றினை த[illegible]கவுள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி டோக்கியோவில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இந்தத் திட்டம் அறிவிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது ஜப்பானிய விஜயத்தை மேற்கொண்டிருக்கும் அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் அந்த நாட்டின் துணை நிதி அமைச்சர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

டோக்கியோ மாநாட்டில் பங்கேற்குமாறு இலங்கையும் ஜப்பானும் இணைந்து சர்வதேச சமூகத்திடம் இருந்து கூட்டாக அழைப்பு விடுப்பதாகவும் -

இந்த அழைப்புக் கடிதத்தில் அமைச்சர் மிலிந்த மொறகொட மற்றும் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் ஜோரிக்கோ கவாக்குச்சி ஆகியோர் கையெழுத்திடவுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஓ-4)

## திருமண வாழ்த்து

இன்று 01. 06. 2003 ஞாயிற்றுக்கிழமை இல்லற வாழ்வில் இணைந்து கொள்ளும்



மணமகன்
சிரஞ்சீவி கோபாலகிருஷ்ணன்
மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்
கொக்குவில்

மணமகள்
சௌபாக்கியவதி
தயாளினி



மணமக்களை சகல செல்வங்களும் பெற்று சீருஞ்சிறப்புமாக பல்லாண்டுகாலம் வாழ்கவென கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் திருவருள் துணைகொண்டு வாழ்த்துகின்றோம். ஆலய சேவையில்.

வே.நடராசா, பெறுநர்.
மஞ்சவனப்பதி முருகன் ஆலய நிர்வாக சபை, கொக்குவில்.
த.கணேசபிள்ளை, தலைவர்.

(சி-28171)

## திருமண வாழ்த்து

உ

இல்லற வாழ்வில் இன்று இனிதாய் இணையும் புதுமணத் தம்பதிகள்

திருவளர் செல்வன்
தரனீஸ்வரன்



திருவளர் செல்வி
உசிதா

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்ற தெய்வப்புலவர் திருவள்ளுவரின் தெய்வீக வாக்குக்கிணங்க இப்பூவுலகில் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி பதினாறு பேறுகளும் பெற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வேண்டுமென்று மனமார வாழ்த்துகின்றோம்.

வாணி ரெக்ஸ் குடும்பத்தினர், சாவகச்சேரி.
01.06.2003
வாணி ரெக்ஸ் ஸ்தாபனத்தார், யாழ்ப்பாணம்.

(சி-28176)

## விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

உ
ஸ்ரீ ராம ஜெயம்
குகமயம்

அநேக நமஸ்காரம், ஆசீர்வாதம், உபயகுசலோபரி

ஸ்வஸ்திப ஸ்ரீ நிகழும் சுபமங்களகரமான சுபானு வருஷம் வைகாசி மாதம் 18ஆம் நாள் (01.06.2003) ஞாயிற்றுக்கிழமை பகல் 11.10 மணிக்குமேல் 12.01 மணிக்குள் வரும் சிங்க லக்கினமும் மிருகசீரிட நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்

வட்டுக்கோட்டை, சங்கரத்தை
சிவஸ்ரீ பொன் குமாரசாமிக் குருக்கள்
அவர்களின் கனிஷ்ட புத்திரி
சௌபாக்கியவதி
தயாளினியை

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்
சிவஸ்ரீ இரங்க வரதராஜக் குருக்கள்
அவர்களின் சிமந்த புத்திரன்
சிரஞ்சீவி
கோபாலகிருஸ்ண சர்மாவுக்கு

கன்னிகாதான பாணிக்கிரஹண திருமாங்கல்யதாரணம் செய்து கொடுப்பதாக பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்ற முகூர்த்தத்தில் வட்டுக்கோட்டை சங்கரத்தையில் அமைந்துள்ள மணமகள் இல்லத்தில் நடைபெற இருப்பதால் தங்கள் பந்துமித்திர சகிதம் வந்து தம்பதிகளை ஆசீர்வதித்து சபையைச் சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சமாவர்த்தனம் 01. 06. 2003 அன்று காலை 7.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

வரவேற்புபசாரம்: 01.06.2003 மாலை 4மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்:

ஸ்ரீ.ஸ்ரீமதி கு.பிரபாகரக் குருக்கள் - பாலேஸ்வரி
வட்டுக்கோட்டை,
சங்கரத்தை.

ஸ்ரீ.ஸ்ரீமதி இ.வரதராஜக் குருக்கள்
No.958A/2, நாச்சிமார் கோயிலடி,
K.K.S. றோட், யாழ்ப்பாணம்.

(18615) (இருவீட்டார் அழைப்பு)

## திருமண அழைப்பு

சிவமயம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் வைகாசி மாதம் 19ஆம் நாள் (02.06.2003) திங்கட்கிழமை கர்க்கடக லக்கினமும் துதியை திதியும் திருவாதிரை நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய பகல் 10.00 மணிமுதல் 11.20 மணிவரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
மகிந்தன்
அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
மஜெந்தா
அவர்களுக்கும்

இறைவன் திருவருளால் கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் கோயில் திருமண மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யத் திருவருள் கைகூடியுள்ளதால் அத்தருணம் எமது உற்றார் [illegible] நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து [illegible] ஆசீர்வதித்து மதியபோசனவிருந்துபசாரத்திலும் கலந்து [illegible]ப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி வேலுப்பிள்ளை (தம்பிஜயா)
திரு.திருமதி நீரஜன்
'விநீஜகம்', நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

திரு.திருமதி க.ஜெயரத்தினசிங்கம்
50, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(18626) (மணமகன் வீட்டார் அழைப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குப்பிளான் தெற்கு பரிசயப்புலம் நரசிங்க வைரவர் ஆலய வளர்ச்சி நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் - (30.05.2003)

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | : | இல. 654 |
| 2 ஆம் பரிசு | : | இல. 2549 |
| 3 ஆம் பரிசு | : | இல. 1377 |

ஆறுதல் பரிசுகள் - 10

2562, 3894, 3585, 3766, 4494, 3794, 3654, 697, 551, 1139

- நிர்வாகத்தினர்.

(18629)


## Central Nursing Home (pvt) Ltd.

350, Palaly Road, Thirunelvely, Jaffna.

Services at present.

- 24 hour O.P.D/INDOOR CARE
- Operation theatre - Facilities 24 hours
- Basic laboratory service - 24 hours
- Advanced LABORATORY SERVICES Daily by MOBILE UNIT OF MEDIQUICK, COLOMBO. From 8 A.M. - 10 A.M. with instant Computerized Reports.
- Regular Channel consultation services
- Maternity / Gynocological clinic / INDOOR SERVICES
- Regular Dental Consultation / Surgery
- Laparascopic Surgery
- 24 hours Ambulance Services

INQUIRIES

Direct or by phone : 021-2222263

(18523)



## After A/L's?

U.K. Diploma in Telecommunication

City & Guilds

London. U.K. December 2003

Telecom. & Electronics Engineering
Telecommunication Systems
Certificate & Diploma Level

- உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அங்கீகரிக்கப்பட்ட International தராதரப்பத்திரம்
- Ad. Diploma பரீட்சை சித்தி எய்துவோருக்கு London University களில் அனுமதிகள்.

Short Course : செய்முறைப் பயிற்சிகளுடன்
Computer Hardware Engineering
காலம் : 3 மாதம்

Open for Registration
Commencing On 01-07-2003

VICKNAA Tution Centre
52, Stanley Road, Jaffna.
கொழும்பில் APSS International,
57, E.S. Fernando Mw, Col-06. T.P: 362547

(18549)


## கலாதரிசனம்

## நூல் வெளியீட்டு விழாவும் நூலகத் திறப்பு விழாவும்

காலம் : 01-06-2003
(ஞாயிறு காலை 10.00 மணி புதியநேரம்)
இடம் : புதிய உயர் கல்லூரி மண்டபம்
தலைவர் : செல்வன் K.றஜீபன்
பிரதம விருந்தினர் : பேராசிரியர் S. மோகனதாஸ்
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)
கௌரவ விருந்தினர் : பேராசிரியர் P.பாலசுந்தரம்பிள்ளை
(தலைவர், புவியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்)
திருமதி பாலசுந்தரம்பிள்ளை
சிறப்பு விருந்தினர் : திரு. T. விக்னராஜா
(மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்)
திருமதி S.நாச்சியார்
(பதில் [illegible] இந்துநாகரிகம் - யாழ். பல்கலைக்கழகம்)
திரு. இரா. வை. கனகரட்ணம்
(தமிழ்த்துறை, பேராதனை)
வெளியீட்டுரை : கலாநிதி S.திருநாவுக்கரசு
(விரிவுரையாளர், ஆசிரிய கலாசாலை)
ஆய்வுரை : கலாநிதி விசாகரூபன்
(தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணம்,
பேராதனை பல்கலைக்கழகங்களின்
வெளிவாரிப் பட்டப்படிப்பு ஒன்றிய
புதிய உயர் கல்லூரி.

(18622)

# சங்க இலக்கிய மருதத்திணைப் பாடல்களை விரிவாக பகுப்பாய்வு நெறியில் விளக்கும் நூல்

| | | |
|---|---|---|
| நூல் | : | மருதத்திணை |
| ஆசிரியர் | : | வாசுகி சொக்கலிங்கம் |
| வெளியீடு | : | ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை |

தமிழ் இலக்கியங்களில் காலத்தால் முந்தியவை சங்க இலக்கியங்கள் ஆகும். சங்க இலக்கியப் பாடல்களை நோக்கும்போது அவை சங்க கால மக்களின் வாழ்வை கூறுவனவாகவே அமைந்துள்ளன. சங்கப் பாடல்கள் அகம், புறம் என்ற இரு துறைகளைக் கூறுவனவாகவுள்ளன. பாடல்களில் பாடப்படுபவர் பெயர் கூறப்படும்போது அவை புறத்திணை எனப்படும். பெயர் கூறப்படாது பாடப்படுபவை அகத்திணை எனப்படும். இவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணை சார்ந்தவையாக உள்ளன. அகநானூறு, குறுந்தொகை, நற்றினை, ஐங்குறுநூறு. கலித்தொகை, பரிபாடல் என்பன அகத்திணை பற்றிய சங்ககால நூல்கள். புறநானூறு முதலியன புறத்திணை நூல்களாகும்.

சங்க இலக்கியங்கள் போல இலக்கண நூல்களுள் காலத்தால் முந்தியவை தொல்காப்பியமாகும். தொல்காப்பியம் சங்ககாலத்துக்குப் பிந்தியது என்பது சிலருடைய கருத்து. தொல்காப்பியத்துள் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்கள் உள்ளன. இவற்றுள் எழுத்தும் சொல்லும் சங்ககாலத்துக்கு முந்தியன என்றும் பொருள் சங்ககாலத்துக்குப் பிந்தியது என்றும் கருதுவாரும் உளர். எவ்வாறாயினும் சங்கநூல்களும் தொல்காப்பியமும் காலத்தால் முந்தியவை என்பதில் ஐயமில்லை.

சங்ககால இலக்கியங்கள், தொல்காப்பியம் என்பவற்றை மூலமாகக் கொண்டு செல்வி வாசுகி சொக்கலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் முதுதத்துவமானிப் (M.Phil)பட்ட ஆய்வை, "சங்க இலக்கியங்களில் மருதத்திணையின் சமூக, ஒழுக்க, இலக்கிய நியமங்கள் பற்றிய ஓர் ஆய்வு" என்ற தலைப்பில் மேற்கொண்டு பட்டம் பெற்றார். பேராசிரியர்களான கா.சிவத்தம்பி அவர்களும் அ.சண்முகதாஸ் அவர்களும் இப்பட்ட ஆய்வை நெறிப்படுத்தினர். இவ்வாய்வேடு "மருதத்திணை" என்ற நூலாக செல்வி வாசுகி சொக்கலிங்கம் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. ஆறு இயல்களைக் கொண்ட இந்நூல் இருநூற்றறுபது பக்கங்கள்




கொண்டதாக அண்மையில் வெளியாகியுள்ளது.

சங்ககாலம் கி.பி. முதலாம் நூற்றாண்டுக்கும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டதென்பது சிலர் கருத்து. கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டதென்பது வேறு சிலர் கருத்து. இந்நுலாசிரியர் பிந்தியதே சங்ககாலம் என ஏற்றுக் கொண்டுள்ளார். முதலாம் இயலிலும் ஐந்தாம் இயலிலும் இக்காலம் பற்றி ஆராய்ந்து விளக்கியுள்ளார்.

இந்த நூலின் ஆய்வு நோக்கம் பற்றி நூலாசிரியர் முதலாம் இயலில் பின்வருமாறு கூறுகின்றார்.

*"சங்க இலக்கியங்களில் அகவொழுக்கம் சார்ந்த ஒவ்வொரு திணையிலும் பேசப்படும் சமூக உறவுகள் எத்[illegible]யன என்பதனை நிறுவுவதற்க[illegible] முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் பின்புலத்தில் மருதத்திணை பாடல்களை ஆராய்ந்து அவை சுட்டும் சமூக உறவுகளை அறிவதற்கான முயற்சி இந்த ஆய்வுக் கட்டுரையில் மேற்கொள்ளப்படுகின்றது." (பக்கம் 1-2)*

குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு ஆகிய காலத்தால் முந்திய சங்கநூல்களிலுள்ள நூற்றிருபத்தைந்து மருதத்திணை பற்றிய பாடல் விவரங்களும் காலத்தால் பிந்திய ஐங்குறுநூறு, கலித்தொகை, பரிபாடல் ஆகிய நூல்களிலுள்ள 132 பாடல் விவரங்களும் இவ்வியலில் கூறப்படுகின்றன.

இரண்டாம் இயலில் மருதத்திணையில் இடம்பெறும் பாத்திரங்களின் உணர்ச்சி நிலைகள் விளக்கப்படுகின்றன. மருதத்திணையில் தலைவனின் ஒழுக்கக் குறைபாட்டால் தலைவியின் உள்ளத்தில் ஏற்படும் உளத்தாக்க நிலை பேசப்படுகின்றது. இவ்வியலில் தமது ஆய்வின் நோக்கம் பற்றி நூலாசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்.

*"சங்ககால அகத்திணை நூல்களில் மருதத்திணைக்குரிய பாடல்களாக தொகுக்கப்பட்டுள்ளவை 257 ஆகும் மருதத்திணைக்கு ஊடல் ஒழுக்கமாக அமைகின்றது. தலைவனது பரத்தமையே தலைவி அவன் மீது ஊடல் கொள்ளக் கரணமாகும். மேற்குறித்த 257 பாடல்களிற் பரத்தமை பற்றிப் பேசுவன 223 பாடல்களே. ஏனையவை (34 பாடல்கள்) ஊடலோடு*

## நூல்விரிசை

*தொடர்பற்ற புணர்தல், பிரிதலாகிய ஒழுக்கங்களைப் பாடுபொருளாய்க் கொண்டுள்ளன. இவற்றைத் திணை மயக்கப் பாடங்கள் எனக் கொளவதே பொருத்தம் போல தோன்றுகின்றது. இதேபோன்று பிறதிணைகளிலும் ஊடல் (பரத்தமை) பற்றிய செய்திகளைக் கூறும் பாடல்கள் குறித்துக் காட்டவேண்டுவதே... இவையனைத்தையும் சான்றுகளாகக் கொண்டு இவ்வியலிலே மருதத்திணைப் பாத்திரங்களூடாகப் வெளிப்படும் உணர்ச்சி நிலைகள் ஆராயப்படும். (பக்கம் 35)*

அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகிய நூல்களின் பரத்தைக்கும் தலைவனுக்குமிடையே உள்ள தொடர்பால் ஏற்படும் தலைவியின் உளக்குழப்ப நிலை உண்மை நிலையாக கூறப்படுகின்றது. ஆனால், பரிபாடல் ஆகிய பிற்காலச் சங்க இலக்கியத்தில் பரத்தமைத் தொடர்பு தலைவன், தலைவியிடையே உறுதியான தொடர்பை ஏற்படுத்துவதற்கான கற்பனை என்றே கருதப்படுகின்றது. இவ்விரு கருத்துக்களையும் நூலாசிரியர் சிறப்பாக விளக்குகின்றார்.

மூன்றாவது இயலில் "திணைக் கோட்பாட்டின் சமூக அடிப்படைகளும் இலக்கிய வெளிப்பாடுகளும் சமூக மெலாண்மைக் கொள்ளைகளும்" பற்றி ஆராய்கின்றது. இது தொல்காப்பிய நெறிநின்ற ஆய்வாகும். சங்க இலக்கியங்களிலுள்ள மருதத்திணை பற்றித் தொல்காப்பியக் கருத்துக்களும் இளம்பூரணம், நச்சினார்க்கினியம் ஆகிய உரை நூல்கள் கூறும் கருத்துக்களும் இங்கு ஆராயப்படுகின்றன. இவை மட்டுமன்றி நவீன ஆய்வாளரின் நோக்குகளும் ஆராயப்படுகின்றன. இவை மட்டுமன்றி நவீன ஆய்வாளரின் நோக்கஞம் ஆராயப்படுகின்றன. சங்க காலம் வீரயுகம் எனப்படும். வீரர்கள் மருதநிலத்திலிருந்து தோன்றி அரசனாகவும் அரசரை ஆட்சியில் நிலைநிறுத்துபவராகவும் விளங்கினர் என்ற காலநிலை விளக்கப்படுகின்றது. அரசரிடையே போர் நிகழாது சமாதானம் நிலவிய காலங்களிலேயே மருதத்திணையில் ஊடலும் பரத்தமையும் விளங்கியதாக விளக்கப்பட்டுள்ளது.

மயிலங்கூடலூர்
பி.நடராசன்

நான்காம் இயலில் "கனவு, கற்பு என்பவற்றின் நியமங்களும் பெறுமாணங்களும்" ஆராயப்படுகின்றன. மருத நிலத்திலே சமூக நியமமான இல் வாழ்வுக்கும் பரதமைக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. இதனால் தலைவிக்கு கற்புநிலை உயிரானது என்று வலியுறுத்தி சமூகம் உடைவுறாமற் காக்கப்பட்டதென்ற உண்மை இங்கு விளக்கப்பட்டுகின்றது. "ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்ற தொல்காப்பியர் சூத்திரம் மூலம் திருமணத்தில் ஆரியச் செல்வாக்குத் தொல்காப்பியர் காலத்தில் தோன்றியிருக்கலாம் என விளக்கப்படுகின்றது.

ஐந்தாம் இயலில் "சமுதாய மாற்றமும் பரத்தையர் தோற்றமும்" ஆராயப்படுகின்றன. "சங்க கால சமுதாயத்தில் பரத்தமை உருவானமைக்கான வரலாற்றுக் காரணிகளையும் சமுதாய மாற்றங்களுக்கு ஏற்ப பரத்தையரின் இயல்புகள் மாற்றம் பெற்று வந்த நிலைகளையும் பற்றிய ஒரு வரலாற்றுப் பார்வையாக இவ்வியல் அமைந்துள்ளது" எனப் பேராசிரியர் நா.சுப்பிரமணியம் அணிந்துரையில் விளக்குகிறார். போர்களின் போது வெற்றி பெற்றோரால் அடிமைப்படுத்தப்பட்ட பெண்களும் கலைவீடுபாடு கொண்டு பின் குடும்ப நிலையிலிருந்து தாழ்ந்த பெண்களும் தமது தாழ்ந்த வாழ்க்கை நிலை காரணமாகப் பரத்தையராயினர் என இவ்வியலில் விளக்கப்படுகின்றது. இவர்களே பின்னர் கலைஞர்கள் ஆயினர் என்று கருதப்படுகின்றது.

ஆறாவது இயல் முல்லை சான்ற கற்புப்பற்றி ஆராய்கின்றது. வணிகரின் மேலாண்மையும் கற்பின் பரிணாமமும், பெண்மை பற்றிய கருத்துக்களில் புதிய பரிமாணங்கள், சாதிக் கட்டிறுக்கம் என்பன இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன. இவ்வியலில் சங்ககாலம் முதல் அண்மைக்காலம் வரை வாழ்ந்த பெண்களின் கற்பு நிலை விளக்கப்படுகின்றது.

*"சோழ மன்னர் பல தாரங் கொண்டோர். நாயக்க மன்னரின் அந்தப்புரங்களிலே பல நூற்றுக்கணக்கான பெண்கள் அவர்களின் ஆசை நாயகியராய் ஆக்கப்பட்டனர். பல்லவர் காலத்திலே தேவரடியாராகவும் கோயிற் பிணாக்களாவும் விளங்கிய மகளிர் பிற் தேவதாசிகள் என்றும் தாசிகள் என்றும் படியிறக்கப்பட்டு இழிவுக்குள்ளாயினர். சமூகத்தின் சாபக் கேடுகளாய்க் காலத்தில் கொள்ளப்பட்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதிவரை பெண்களின் நிலை படிப்படியாக மிகக் கீழ்நோக்கிச் சென்றது."*

*"மாயூரம் வேதநாயகம்பிள்ளையே பெண் கல்விக்கும் பெண்ணுரிமைக்கும் முதன்மைக் குரல் கொடுக்கக் காண்கிறோம். (பக்கம் 229-230)*

-என நூலாசிரியர் ஆதாரபூர்வமாகப் பெண்களின் தாழ்வையும் உயர்வையும் விளக்கக் காண்கிறோம்.

*"சங்க இலக்கியங்களிலேயுள்ள மருதத்திணைப் பாடல்களிலே ஆழமான ஈடுபாடுடையவராக ஆய்வாளர் விளக்குகிறார். பாடல்களைத் தரவுகளாகக் கொண்டு சமூக, ஒழுக்க, இலக்கிய நியமங்களை இனங்கண்டு அவற்றினுடைய பெறுமானங்களும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. வெறும் விவரண ஆய்வாகவன்றி விரிவான பகுப்பாய்வு நெறியிலே இப்பொருள் ஆராயப்பட்டுள்ளது."*

என இந்நூலின் சிறப்பைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார்கள். இலக்கிய ஆர்வமுடையவர்கள் இந்நூலை ஒருமுறை படித்துப் பார்க்கவேண்டும். ★

# 'ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள்'

| | |
|---|---|
| நூல் | : ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள் |
| ஆசிரியர் | : கருணாகரன் |
| வெளியீடு | : மகிழ் |

'ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல்' தொகுதியின் பின் இரண்டாவ தாக வெளிவரும் கருணாகரன் கவிதைகளின் தொகுதி 'ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள்.'

சூழல் தொடர்பான ஆழ்ந்த பார்வையும், ஆன்ம தேடலும், சுய விழிப்பும் மிக்கவை கருணாகரனின் கவிதைகள். மனதோடு நெருங்கிய சொற் களால் வசீகரிக்கும் வார்த்தைக் கோர்வைகளால் ஆன்மாவைச் சுண்டியிழுக்கும் தன்மை கொண்டவை அவை. இத்தொகுதியை




யும் அத்தகைய 29 கவிதைகள் நிறைத்திருக்கின்றன.

போரும், அழிவுகளும், இடம்பெயர்வும், இடர்களும் நிறைந்த எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையைச் சிதறடித்த காலச்சூழலில் விளைந்த மனவுணர்வுகளே பல கவிதைகளின் தொனிப்பொருள். 'இருள் விரிவு' என்ற கவிதை இப்படிப் பேசுகிறது.

*"பூக்கள் உதிர்ந்து*
*காற்றில் சருகுகள் பறக்கின்றன*
*குழந்தைகள்*
*ஊஞ்சலை இழந்தார்கள்*
*வானம் நட்சத்திரங்களை இழந்தது*
*தென்னைகளை வருட முடியாத காற்று*
*சுடுகாட்டின் சாம்பலை*
*அள்ளி வீசுகிறது*
*அகதிக் காலங்களைத் தள்ள முடியாமல்*
*மாய்ந்து கொண்டிருக்கிறேன் நான்.*

அதேபோல 'நீலம் பாரித்த வெண்மை' கவிதையில்

*'ஒரு குழந்தையின் கதறல்*
*எல்லா இசைக் கருவிகளையும் சிதறடித்த பின்*
*இசையின் நினைவலைகளில்*
*ஊடுருவிச் செல்கிறது ஏரிக்கல்லாக'*

- என்கிறார் கவிஞர். போரின் நீள் துயர அனுபவங்களை இவ்வாறு கலா பூர்வமாக அநேக கவிதைகள் பேசுகின்றன.

இந்தத் துயரங்களிலிருந்து மீள அவாவும் குரலாயும் இவரது கவிதைகள் ஒலிக்கின்றன. 'போரின் துயரொலியும் கடும் வலியும் வாழ்வின் இடிபாடுகளும் பிரமைகளில் நிறைந்திருக்கின்றன. இந்தப் பிரமைகள் அகலவேண்டும் மெய்யாய் அகலுவதாய் அது இருக்க வேண்டும். மெய்யாகவே சமாதானத்தை விரும்பும் குரல் நமது. அது அலைக்கழிக்கப்படாத சமாதானம், ஏமாற்றப்படாத சமாதானம், சூதற்ற சமாதானம் நமக்கு வேண்டுமென்று கேட்கிறது.' என முன்னுரையில் அவர் குறிப்பிடுவது கவிதைகளிலும் உள்நின்று ஒலிக்கிறது.

*'மாமிசக் கனவும்*
*நெருப்பின் ஞாபகமும்*
*இல்லாத காலம் மலரும் நாளை*
*உணருகின்றேன்"*

என்று 'ஒரு பயணியின் குறிப்புரை' கவிதையில் அவர் குறிப்பிடுவது அவரது துயரங்களிலிருந்து மீள அவாவும் குரலே என்லாம்.யாருடைய வீடு, ஆடுகளற்ற உலகம், சிறகுவெளி, அழகு, திரை, மரணத்தின் ருசி, பிரதிபலிப்பான்கள் பற்றி மேலுஞ் சில உண்மைமுகம் ஆகிய கவிதைகள் தொகுதியின் ஏனைய கவிதைகளின் தொனியிலிருந்து மாறுபட்டவை; தத்துவார்த்தப் பின்னணி கொண்டவை.

எனது வருகை, விழியோடிருத்தல் ஆகியன இத் தொகுதியின் நீண்ட கவிதைகள், வித்தியாசமான பரிமாணத் தில் அரசியல் பிரச்சினையைப் பேசு வன. எனினும் இக்கவிதைகள் கட்டிறுக்கத்தையும், உரத்த தொனிப்பையும் இழந்து உதிரிக் கோர்வைகளாய் தென்படுகின்றன.

இயல்வாணன்

நிகழ்காலத்தின் சம்பவங்களை கலா பூர்வமாகப் பதிவு செய்வனவாக இத் தொகுதியின் பெருப்பாலான கவிதைகள் அமைகின்றன. தேசிய விடுதலைப் போரின் நியாயப்பாட்டைச் சுட்டும் அதேவேளை, போரின் கொடிய கரங்கள் மக்களின் கிராமங்களின வாழ்வைப் பிடுங்கியெறிந்த அவலத்தையும் எடுத்துக் காட்டுகிறார். 'தீயாயும் நிழலாயும்' முதலான கவிதைகள் விடுதலைத் தீயில் ஆகுதியான வீரர்களைப் பேசுகின்றன.

மகிழ் வெளியீடாக 90 பக்கங்களுடன் வெளிவந்துள்ள [illegible] வத்திலும் [illegible] வித்தியாசமும், சிறப்பும் உடையதாய் விளங்குகிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோம்பயன் மணல் மயானம் அருகே

# கழிவுகள் கொட்டப்படுவதை தவிர்க்க விழிப்புக்குழு

### கிராம அலுவலர் தலைமையில் இயங்கும்

யாழ்ப்பாணம்,ஜூன்1

யாழ்.கோம்பையன் மணல் மயானச் சுற்றாடலில்கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதைத் தடுக்கும் வகையில விழிப்புக் குழு நிறுவப்பட்டுள்ளது.

மேற்படி கழிவுப்பொருள்கள் கொட்டப்படுவதனால் ஏற்படும் தீய விளைவுகள் மற்றும் அதனைத் தடைசெய்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த வியாழனன்று ஆறுகால மடம் அறிவொளி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. கலந்துரையாடலின் இறுதியில் விழிப்புக் குழு ஒன்றை அமைத்து மயானச் சுழலைப பாதுகாப்பது என தீமானம் நிறைவேறறப்பட்டது என அப்பகுதிக்கான கிராம அலுவலர் எஸ்ரி.சகுந்தலாதேவி அறிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர்கள், அறிவொளி சனசமூக நிலையத்தின் தலைவர் சி.க.தம்பிராசா மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

✪கோம்பையன் மணல் மயானப் பிரதேசத்தில் கழிவுப் பொருள்களைக கொட்டுவது தொடர்பான அறிவுறுத்தல் பலகைகளை நடுதல்.

✪அறிவுறுத்தல்களை மீறிச் செயற்படுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல்.

இதேவேளை - கலந்துரையாடலின் இறுதியில் அப்பகுதிக் கிராம அலுவலரின் தலைமையில் விழிப்புக் குழு உருவாக்கப்பட்டது.

(எ-12)

### புதுக்குடியிருப்பு நகரில் மலசலகூடம் இல்லாததால் மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம்,ஜூன்1

முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் பொது மலசலகூடம் இன்மையால் வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக புதுக்குடியிருப்பு பிரதேசசபையினிடம் புதுக்குடியிருப்பு வணிகர்கழகத்தினர் முறையிட்டிருந்த போதிலும் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என வணிகர்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ம-12)

## புதிய குருமனை

வடமராட்சி,ஜூன்1

மணற்காடு பங்குக்கென தனியான குருமனை ஒன்று 15 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டு, கட்டடம் பூர்த்தி அடையும் நிலையில் உள்ளது.

பங்கு மக்களின் நிதியுதவியுடன் மணற்காடு புனித அந்தோனியார் கோவிலுக்கு அருகில் இக்குருமனை கட்டப்பட்டு வருகின்றது. (ம-173)

### மெய்வன்மைப் போட்டி நேரத்தில் மாற்றம்

யாழ்ப்பாணம்,ஜூன்1

யாழ்.மத்தியகல்லூரி மைதானத்தில் நாளை காலை நடைபெறவிருந்த யாழ்.மாவட்ட பாடசாலைகளுக் கிடையிலான மெய்வன்மைப்போட்டிகள் யாவும் அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-6)

### மாவட்ட மட்ட மெய்வன்மை போட்டிகள்

யாழ். மாவட்டப்பாடசாலைகளுக்கு இடையிலான உடற் பயிற்சிப் போட்டிகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

யாழ். மாவட்டத்தில் உள்ள தீவகக் கல்விவலயம், வடமராட்சிக் கல்வி வலயம், யாழ். கல்விவலயம், வலிகாமம் கல்விவலயம், தென்மராட்சி கல்வி வலயம் ஆகிய ஐந்து கல்வி வலயங்களிலும் இருந்து தெரிவுசெய்யப்பட்ட அணிகள் மாவட்டமட்டப் போட்டியில கலந்து கொள்கின்றன.

மாவட்ட மட்டத்திலான அரை இறுதிப் போட்டிகள் காலையிலும், இறுதிப் போட்டிகள் மாலையிலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மேசைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்1

வடக்கு - கிழக்கு விளையாட்டுத் திணைக்கழத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவாட்ட ரீதியாக நடத்தபபடும் ஆண்கள், பெண்களுக்கான மேசைப்பந்தாட்டப்போட்டி நாளை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

திருநெல்வேலி வை.எம்.எச்.எ மண்டபத்தில் இப்போட்டி நடைபெறவுள்ளது. (ம-12)

# ஆனைவிழுந்தானில் செவ்வாயிரவு படப்பிடிப்பாளர் வீட்டில் திருட்டு

கிளிநொச்சி,ஆனைவிழுந்தான் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு புகைப்படப் பிடிப்பாளர் ஒருவரது வீட்டினுள் புகுந்த திருடர்கள் இருபத்தியிரண்டாயிரம் ரூபா பணம் மற்றும் ஒன்பது பவுண் நகை, சில்லறை நாணயங்கள என்பவற்றைத் திருடிச் சென்றுளளனர்.

ஆனைவிழுந்தானைச் சேர்ந்த பா.ஸ்ரீதரன் என்பவரின் வீட்டிலேயே மேற்படி திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மூன்று தினங்கள் நித்திரையின்றி படப்பிடிப்புக்களில் ஈடுபட்டதால் தான அன்றையதினம் ஆழ்ந்த நித்திரையில் இருந்ததாகவும்-இதனைப் பயன்படுத்திய திருடர்கள் அன்றையதினம வீட்டினுள் புகுந்து தனது காற்சட்டை பணப்பை என்பவற்றுள் இருந்த பணம், நகைக்ள், சூட்கேசினுள் இருந்த பெருமளவு சில்லறை நாணயங்கள் என்பவற்றைத் திருடிச்சென்றுள்ளனர்-என்று ஸ்ரீதரன் தெரிவித்தார்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடாபாக தமிழீழ காவல் துறையினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-ரி)

# நயினை உற்சவ காலத்தில் 16 படகுகள் சேவையில்!

## செயலகக் கலந்துரையாடலில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஜூன்01

எதிர்வரும் 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நயினாதீவு அருள்மிகு நாகபூஷணி அம்மன ஆலய மகோற்சவ காலத்தில் பயணிகளை ஏற்றி இறக்குவதற்கென 16 படகுகளுக்கு கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

மேற்படி ஆலயத்தின் வருடாந்த உற்சவம் தொடர்பான முன்னேறபாட்டுக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம்போல் தலைமையில் யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பக்தர்களின் போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் இன்னோரன்ன தேவைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இம்முறை பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் உற்சவத்தில் கலந்து கொள்வார்கள் என எதிர் பார்க்கப் படுவதால், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு விரிவான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு வலியுறுத்திக் கூறப்பட்டது.

சுகாதார, குடிதண்ணீர் வசதிகளை மேற்கொள்வதில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் -

குடிதண்ணீர் வசதிகளை யாழ் பஸ நிலையத்தில் யாழ். மாநகர சபையும், அல்லைப்பிட்டியில் இராணுவம் மற்றும் கடற்படையினர் மேற்கொள்வர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

உற்சவ இறுதி நாள்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச்சொந்தமான 40 பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவது என்றும் - தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செலவநாயகம், யாழ் மாநகர சபை ஆணையாளர் இ.இராமலிங்கம், ஆலய அறங்காவலர் சபையினர் மற்றும் இராணுவ, கடற்படை அதிகாரிகள் ஆகியோரும் மற்றும் சிலரும் கலந்துகொண்டனர்


## புற்று நோயாளர்கள் கவனத்திற்கு!

நாளை (02.06.2003) திங்கட்கிழமை, நாளை மறுதினம் (03.06.2003) செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் புற்றுநோய் வைத்திய நிபுணர் Dr. வாணி அவர்கள் வருகை தருகின்றார். நோயாளர்கள் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்,**
08, இராமையாச் செட்டியார் லேன்,
யாழ்ப்பாணம்.
(அமுல் கிறீம் கவுஸ் அருகே)

குறிப்பு:
நேற்றைய பத்திரிகையிலும், இன்றைய பத்திரிகையில் 6 ஆம் பக்கத்திலும் வெளிவந்துள்ள "புற்றுநோயாளர் கவனத்திற்கு" எனும் விளம்பரத்தில் உள்ள திகதிகள் (21.06.2003, 31.06.2003) எனத் தவறாக பிரசுரமாகி விட்டன. (18583)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சாவகச்சேரி இந்துக்கல்லூரி, யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை ஆகியவற்றின் பழைய மாணவியான



**Dr. செல்வறஜனி முகுந்தன்**
**M.B.B.S.**

அவர்கள் M.S.(Srilanka) F.R.C.S பரீட்சையில் சித்தியடைந்துள்ளமையையிட்டு நாம் அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் வைத்தியத்துறையில் மேலும் பல சித்திகளைப் பெற்று முன்னேற வேண்டுமென இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
திரு.பூ.வெற்றிவேலு (அப்பா)
(முன்னாள் அதிபர்,
சாவகச்சேரி இந்துக்கல்லூரி),
அம்மா மற்றும்
சகோதரர்களும்,
குடும்பத்தினரும்.

"சிவன் அகம்"
நுண்ணாவில் மேற்கு,
சாவகச்சேரி. (18644)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் உறுப்பினரான
**முத்தையா திங்கள்ஐயா ஜேம்ஸ்** அவர்கள்
30.05.2003 வெள்ளிக்கிழமை அகாலமரணமடைந்த செய்திகேட்டு நாம் மிகவும் துயரமடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்,

16/2 சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம்.
உபதலைவர், செயலாளர், பொருளாளர், அங்கத்தவர்கள்.
செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம்.

## BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.

A/L 2004 இரசாயனம
திரு.N.யகேஸ்வரன்
பௌதிக இரசாயனம
சனி,ஞாயிறு - 4.30 p.m.
PAPER CLASS
சனி,ஞாயிறு - 5.30 p.m.
ஆரம்பம்:இன்று 01-06-2003.
(18653)



(18646)

## 41 ஆவது பர்ட்சையில் கூடிய புள்ளி பெற்றோர்.

| | |
|---|---|
| சி.சுமிதா | 183 |
| V.சேயோன் | 180 |
| த.அனோஜன் | 178 |
| சி.சுபாங்கன் | 176 |
| ஸ்ரீ.கவிப்பிரியன் | 172 |
| ஆ.ஜேனுகானந் | 171 |
| ர.சிந்துஜன் | 171 |

அடுத்த பரீட்சை: இன்று (01.06.2003) நடைபெறும்.
BOND கல்வி நிலையம்.
யாழ்நகர்

## வேலையாள் தேவை

✪ விடுதி ஒன்றிற்கு சுத்திகரிப்பு, பராமரிப்பு செய்ய வேலையாள் தேவை.
✪ வீட்டில் தங்கியிருந்து வேலை செய்ய அல்லது நாளாந்தம் வந்து போகக் கூடிய பணிப்பெண் தேவை.
(18 வயதுக்கு மேற்பட்டவர்கள்)
(18645)

விவரங்களுக்கு:
175, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

## ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்
### வெதுப்பக (பேக்கரி) போறனை அமைத்தல்

எமது சங்கம் புதிதாக வெதுப்பகம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது. அதற்கு போறனை அமைப்பதற்கான பாஸ் தேவையாகவுள்ளார். எனவே போறனை அமைக்கக் கூடியவர்கள் ஊர்காவற்றுறையில் அமைந்துள்ள எமது தலைமைக் காரியாலயத்துக்கு சமுகம் தந்து பொதுமுகாமையாளரைச் சந்திக்குமாறு கேட்டுக்கோள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்,
ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்.
(சி-28190)

உ
ஐங்கரன் துணை
## இணுவில்
## அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் இரதோற்சவ விஞ்ஞாபனம்

ஐங்கரன் அடியார்களே!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் வைகாசி மாதம் 19 ஆம் நாள (02.06.2003) திங்கட்கிழமை இரதோற்சவம் சிறப்புற நடைபெறவுள்ளது.

காலை 5.00 மணி - பூஜை
காலை 5.15 மணி - அபிஷேகம்
காலை 6.00 மணி - பூஜை
காலை 7.00 மணி - வசந்த மண்டபபூஜை
காலை 8.00 மணி - சுவாமி எழுந்தருளல்
மாலை 4.00 மணி - சுவாமி இரதத்தில் இருந்து இறங்குதல்
மாலை 5.30 மணி - இராஜபிடேகம்

இவ்விழாவில் நாதஸ்வர தவில் கலைஞர்களாக S.சிவகரன் குழுவினர்.
நாதஸ்வர கான கலாநிதி N.K.பத்மநாதன் குழுவினர்.
நாதஸ்வர கலாபூசணம் K.R.சுந்தரமூர்த்தி குழுவினர்.
நாதஸ்வர கானபூபதி V.K. பஞ்சமூர்த்தி குழுவினர்.
நாதஸ்வர கலைமணி N.R. கோவிந்தசாமியின் புதல்வர்கள்
N.R.K. இரட்ணகுமார்
N.R.K. வாகீஸ்வரன் குழுவினர்.
தவில் மேதை V. தெட்சணாமூர்த்தியின் புதல்வர் V.T. உதயசங்கர்.
தவில் மேதை N.R. சின்னராசாவின் புதல்வர்கள்
N.R.S. ரவீந்திரன், N.R.S.சுதாகரன் சகோதரர்கள்

தென்னிந்தியாவில் இருந்து வருகைதந்துள்ள கலைஞர்கள்

| நாதஸ்வர இசைமாமணிகள் | தவில் இசைமாமணிகள் |
|---|---|
| கடம்பர் கோவில K.R. அன்பழகன் | திருச்சிமலைக்கோட்டை A.அசோக்குமார் |
| சின்னம்மனூர் N.A. கார்த்திகேயன் | திருச்சிமலைக்கோட்டை S.செந்தில்குமார் |
| இடும்பாவனம் E.V. இளையராஜா | திருச்சிதொட்டிபம் S.கண்ணன் |
| கடிச்சம்பாடிசகோதரர்கள் K.P.பாலமுருகன் | |
| K.P .ஸ்ரீநிவாசன் | |

ஆகியோர் சிறப்பிப்பார்கள்.
அனைவரும் வருக! திருவருள் பெறுக!!

இங்ஙனம்
தேர்த்திருவிழா
உபயகாரர்கள்.
(சி-28189)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WALK IN INTERVIEW

We have Vacancies in the Following positions for ideal Candidates who are energatic, dynamic and result oriented.

01 MANAGER (ABLE TO HANDLE IN - BOUND & OUT BOUND, PASSENGERS, CARGO, LOCAL & OVER SEAS TICKETING AND MANAGE THE TRAVEL AGENT WITH FLUENTY IN THREE LANGUAGES)
02 STATION MANAGER (ability to handle the domes tic air line)
03 ASSISTANT MANAGER
04 SALES MANAGER
05 COMPUTER OPERATOR
06 ACCOUNTS CLERK
07 FIELD OFFICER
08 SECURITY GUARD
09 LABOUR
10 DRIVER
11 TECHNICIAN

**walk in interview**
02nd JUNE & 03rd JUNE 2003
TIME 10 AM - 5 PM

HUMAN RESOURCE MANAGER
THAMPI AIR TOURS (PTE) LTD.,
90, KANTHAPPASEGARAM ROAD,
JAFFNA. (c/28191)


# கண்ணீர் அஞ்சலி



## கந்தையா தையலம்மா

அன்பு எனும் நீர் ஊற்றி
அரவணைத்த எம் குல விளக்கே
ஆறாத்துயர் தனில் எமை ஆழ்த்தி
சென்றதெங்கே
அந்தரிக்கும் எம் மனதை யார்
தேற்றுவார் இப் பாரினிலே.
ஓம் சாந்தி! சாந்தி!சாந்தி!

*பிராம்பற்றை,* உமது பிரிவால் வாடும்
*பண்டத்தரிப்பு.* (18656) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா தையலம்மா

வேலணை கிழக்கு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பண்டத்தரிப்பு, பிராம்பற்றையை வதிவிடமாகக் கொண்டவருமான கந்தையா தையலம்மா நேற்று (31.5.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி கந்தையாவின் அன்பு மனைவியும் கமலாதேவி, தவமணிதேவி, இரத்தினசிங்கம், பரராஜசிங்கம்(ஜேர்மனி), குலமணிதேவி, வன்னியசிங்கம்(சுவீஸ்), பாலசிங்கம்(சுவீஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் சிவலிங்கம், தவராசா, யோகேஸ்வரி, மதிவதனி, கோமளேஸ்வரி, நிர்மலா ஆகியோரின் அன்பு மாமியாரும் இராசகுமாரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (1.6.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் விமாவெளி இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிராம்பற்றை,*
*பண்டத்தரிப்பு.* (18655)
தகவல்:
க.இரத்தினசிங்கம்
*(மகன்)*

## சின்னத்துரை நாகராசா

கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நாகராசா நேற்று (31-05-2003) இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - ராசம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும், சரோஜினிதேவி, நாதன், இந்திராதேவி, கமலேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தங்கவடிவேல், கலா, இலங்கைராசா, காந்தி ஆகியோரின் மாமனாரும், ஜெகன், விஜிதா, றஜிதா, சுஜிதா, பகீதரன், தினேஸ், தனுஜா, புவிராஜ், அமல்ராஜ் ஆகியோரின் பேரனும், பாக்கியத்தின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 02-06-2003 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (சி-28193)
தகவல்:
நா.நாதன் (மகன்)
(துர்க்கா கடைச்சல் தொழிலகம்)

## நாங்கள்....

(இரண்டாம் பக்கத்தொடர்ச்சி)

சல்களும் கேட்பது போல் இருக்கிறது. எமது நித்திரைகளில் கரிய இருளிற்குள் இருந்து பெண்கள் கத்துவது கனவாக வருகின்றது.

என்றாலும், நாங்கள் நம்பிக்கையைப் பிடித்துக் கொண்டு முயற்சித்து பார்க்க நினைக்கிறோம். சிலந்தியும், சிற்றெறும்பும் நாளாந்தம் பெருமுயற்சி எடுத்து தங்கள் வாழ்வை வாழ்ச்து காட்டிக்கொள்கின்றன. மரங்கொத்திகளெல்லாம் நாள் முழுவதும் முயற சித்து தங்களிற்கான பொந்தை குடைந தெடுக்கின்றன. நாங்கள் மனிதர்கள் தானே? எனவே, ஒரு முறை முயற்சித துப் பார்க்க நினைக்கிறோம்.

ஷெல்லடி பொம்மர் இரைச்சல், பங்கர் வாழ்வு, பயமான இரவுகள், எங்கள் பெண்களின் கதறல்கள் எம் சொந்தங்களின் இழப்புக்கள், இவை எதுவுமே இல்லாமல் எங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சித்துப பார்க்கிறோம். நீங்களும் வருகிறீகளா? வந்தால் எங்கள் கரங்கள் பலப்படும். நம்மால் சில மாறுதல்களைச் செய்ய முடியும் என நம்புகின்றோம். நாம் கேட்க நினைப்பதெல்லாம், நாம் அறிவிக்க ஆசைப்படுவதெல்லாம் ஒன்று தான்.

"நாங்கள் எங்கள் வீடுகளிற்கு போவதற்காக நீங்கள் உங்கள் வீடுகளிற்கு செல்லுங்கள்"

மிகவும் அடிப்படையான, மிகவும் ஜனநாயகமான, மிகவும் நாகரீகமான, ஆனால், அத்தியாவசியமான, நேர்மையான, உண்மையானது. இந்த அன்பான வேண்டுகோள். எமது ஆசையின் வெளிப்பாடு இது. ஆனால், மிகவும் உறுதியானது.

தெரிந்தோ தெரியாமலோ எம்மைப் பாதுகாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடனே இராணுவம் இங்கு அனுப்பப்பட்டது; சமாதானத்திற்கான யுத்தம் நடந்தது.

நாம் செம்மணிகளையும் இன்னும சொல்ல முடியாத அனுபவங்களையும் அனுபவித்து முடித்துவிட்டோம் சரி அது அவர்கள் அறியாமல் செய்தது. தமிழர்களைப் புலிகளிடம் இருந்து பாதுகாக்க வேண்டும் என்று அவர்கள் நம்பியதால் நடந்தது என்று அவற்றை மறந்து விடுவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

ஆனால், இன்று தெளிவாகச் சொலலுகிறோம் எங்களின் பாதுகாப்பிற்கு நீங்கள் தேவையில்லை. அது சர்வ நிச்சயமாக சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டுவிட்டது. எமது பாதுகாப்பிற்கு ஏகப்பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள் இருக்கிறார்கள் - என்றுள்ளது.

(ம-3)


**லஷ்சுமி சினிமா**
இணுவில்
விஜய், சாலினி நடித்த
"காதலுக்கு மரியாதை"
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
2 ஆம் திகதி முதல்
MGR, ஜெயலலிதாவின்
இரகசியப்பொலிஸ 115
(18609)

**ராஜா** யாழ்ப்பாணம்
மூன்றாவது வாரம்
விஜய், மீராஜஸ்மின், கருணாஸ்





புதிய கீதை
காட்சிகள் :10.30, 2.30, 6.30,
சனி, ஞாயிறு 10.30, 2.30, 6:40, 9.30
(C/27626)

**லிபேட்டி** அச்சுவேலி
இன்று மட்டும்
விஜய், ரம்பா நடித்த





என்றென்றும் காதல்
(ரீலஸ்)
11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C/28006)

**நிறஞ்சனாஸ்**
எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, நாகேஸ்,
வி.கே.இராமசாமி நடித்த
இரகசியப் பொலிஸ் 115
(ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
THE ROCK THE SCORPION KING
(C/27608)

**நாகம்ஸ்** சுன்னாகம்
இன்று முதல்
சந்திரராஜ், சீதா, தலைவாசல் விஜய்,
(ரீலஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு விசேடகாட்சி 7.00 (பு.நே)
(18643)




உ

*காரைநகர் – களபூமி*

### திக்கரை முருகன் ஆலய இராஜ கோபுர அடிக்கல் நடும் விழா

*திக்கரை முருகன் அடியார்களே!*

★இடம் : திக்கரை முருகன் ஆலயம், களபூமி
★காலம் : **இன்று (01.06.2003) ஞாயிறு** மு.ப. 11மணி

*இந்நிகழ்வு திரு.சி.க.பொன்னம்பலம் அவர்களின் தலைமையில் நடைபெறுவதுடன் கௌரவ இந்து கலாசார மாண்புமிகு அமைச்சர் திரு.தி.மகேஸ்வரன அவர்களும் கலந்துகொள்கின்றார்.*

களபூமி-காரைநகர், (18652)
தலைவர்,
திக்கரை முருகன் திருப்பணிச்சபை.

# மரண அறிவித்தல்கள்

## அப்பாத்துரை தெய்வேந்திரன்

(ஓய்வுபெற்ற மொழிபெயர்ப்பாளர், சுகாதாரத் திணைக்களம், கொழும்பு)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட அப்பாத்துரை தெய்வேந்திரன் 27-05-2003 இல் ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் பாக்கியத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, விவேகானந்தா மகாவித்தியாலயம், கொழும்பு), அன்புக்கணவரும், காலஞ்சென்ற அப்பாத்துரை - கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற விநாசித்தம்பி, ஆச்சிமுத்து (நொத்தாரிஸ், சரவணை) ஆகியோரின் அன்பு மருமகனும், ராசேந்திரன் (மலேசியா), மகேஸ்வரி (யாழ்ப்பாணம்), புனிதமணி (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற சத்தியபால் (நோர்வே), அரியநாயகம் (ஓய்வுபெற்ற அதிபர்), அருந்ததி (பண்டாரவளை) ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை (ஓய்வுபெற்ற தபாலதிபர்), மனோன்மணி, மங்களம், காசிப்பிள்ளை, பொன்னுத்துரை (ஓய்வுபெற்ற அதிபர்), காலஞ்சென்ற பாலசிங்கம் நடராசா (கணக்காளர், கனடா), ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் 03-06-2003 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் கொழும்பு இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*41,1 ஆவது செப்பல் லேன்,*
*வெள்ளவத்தை.*
*கொழும்பு - 06*
***T.P:503442*** (18654)
தகவல்:
திருமதி பாக்கியம் தெய்வேந்திரன்
(மனைவி)

## வீரவாகு முருகையா

தாவடியைப் பிறப்பிடமாகவும் கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வீரவாகு முருகையா நேற்றுமுன்தினம் (29.05.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் கலாதேவி, ராதாதேவி, ஜசோதரன் (**Quantity Surveyor, DOHA - Qatar**) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிமலன் (ஆசிரியர், யாழ்.இந்துக்கல்லூரி), வரதராஜா (அபுதாபி) ஆகியோரின் மாமனாரும், ஜனலக்ஷன், பிருந்தாவன், சஜித்திரா ஆகியோரின் பேரனும் பூரணம், பூமணி, ஈஸ்வரி, குமாரசாமி, செல்லத்துரை மற்றும் காலஞ்சென்றவர்களான ஜயாத்துரை, இராசமணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02-06-2003) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கே.கே.எஸ்.வீதி,*
*கோண்டாவில் மேற்கு.* (சி28192)
தகவல்:
நிமலன் - மருமகன்
(யாழ்.இந்துக் கல்லூரி)

## யோசவ் திருஞானம்

சுன்னாகம், புனித அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த யோசவ் திருஞானம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், றோ.க பாடசாலை குளமங்கால்) அவர்கள் நேற்று 31.05.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசவ் - சுவக்கீன் தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான வடிவேலு - லட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் தவமணி அவர்களின் அன்புக் கணவரும் ஞானசீலன் (யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை), டார்வின் (விஞ்ஞான ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி), திருமதி டொமினிக் ஜீவா ஞானறோகினி (**B.F.A**), செல்வி றெகன்சியா ஞானவதனி (சித்திரமும் வடிமைப்பும், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசிமிகு தந்தையாரும் திருமதி ஞா.மொறீன் (ஆசிரியை, மன்/கள்ளியடி அ.த.க.பாடசாலை, இலுபக்கடவை), ம.டொமினிக் ஜீவா (ஓவிய ஆசிரியர், ஆசிரிய கலாசாலை, கோப்பாய்), ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பெர்னிப்பஸ் வின்சன்ற், வேதநாயகம் (கணக்காளர், மரக் கூட்டுத்தாபனம்) யேசுதாசன் (ஆசிரியர்) ஆகியோரின் அருமைச் சகோதரனும் மகேந்திரராசா, திருமதி இராமச்சந்திரன், சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் யூகிறேசியாவின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02-06-2003) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு சுன்னாகம் அந்தோனியார் வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து நல்லடக்க ஆராதனைக்காக சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்க் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புனித அந்தோனியார் வீதி,*
*சுன்னாகம்.* (18651)
தகவல்:
குடும்பத்தினர்

## ஆறுமுகம் சிவபாதம் (கரந்தன், நீர்வேலி)

நீர்வேலி தெற்கைப்பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவபாதம் அவர்கள் 30.05.2003 வெள்ளிக்கிழமை இரவு அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இளையபிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் வைத்திலிங்கம் கனகம்மாவின் அன்பு மருமகனும் தெய்வமணியின் அன்புக்கணவரும் இந்துஷா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), விதுஷா ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவபாக்கியம், சிவசுப்பிரமணியம்(நீர்வேலி ப.நோ.கூ.ச.) சிவஞானம் (கனடா) சிவனேஸ்வரி, சிவலோகநாதன், சிவகுமாரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரந்தன் வீதி,*
*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.* (18657)
தகவல்:
சி.தெய்வமணி
*(மனைவி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டிலுள்ள 5 ஆயிரம் சாரதிகள் வாகனம் செலுத்தத் தகுதியற்றவர்கள்

## மருத்துவ ஆய்வில் தெரிவிப்பு

நாட்டிலுள்ள போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் சாரதிகளில் 5 ஆயிரம் பேருக்கு மேற்பட்டோர் வாகனங்களைச் செலுத்துவதற்கு அறவே தகுதியற்றவர்கள் என்று தேசிய போக்குவரத்துச்சபையைச் சேர்ந்த வைத்திய நிலையத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட வைத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வின்படி நாட்டிலுள்ள போக்குவரத்துச்சபை மற்றும் தனியார் பஸ்களின் 45 ஆயிரம் சாரதிகளில் 5 ஆயிரத்து 191 பேர் வாகனங்களைச் செலுத்துவதற்கான எந்தத் தகுதியும் இல்லாதவர்களாவர்.

தகுதியற்ற சாரதிகள் எனக் குறிப்பிடப்பட்டவர்களுள் கண்பார்வை குறைவானவர்கள், இருதய வியாதி, உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், வலிப்பு நோய், மனநோய் போலியோ வியாதி போன்ற ஏதாவது நோய் உடையவர்களும் உள்ளனர் எனபது அதிர்ச்சியூட்டக்கூடிய ஓர் உண்மை.

இந்த நிலை பற்றி போக்குவரத்து திணைக்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என மேற்படி வைத்திய நிலையத் தலைவர் டாக்டர் காமினி கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாணத்திலுள்ள 7762 சாரதிகளில் 144 பேர் வாகனங்கள் செலுத்துவதற்கு தகுதியற்றவர்கள் என்றும் -

கடந்த வருடம் ஜூலை மாதத்தில் இருந்து இந்த வருடம் பெப்ரவரி மாதம் வரை குற்றங்களுக்காக பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்ட 208 சாரதிகளில் 36 பேர் வாகனம் செலுத்தத் தகுதியற்றவர்கள் எனவும் -

நாட்டில் இடம்பெறும் வாகன விபத்துகளில் சுமார் 80 வீதமானவை இவ்வாறான சாரதிகளினாலேயே ஏற்படுகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## குடும்பஸ்தர் வெட்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை அந்தப் பகுதியில் உள்ள தோட்டக் கிணற்றுப் பக்கம் சென்றவர்கள் அதற்குச் சமீபமாக மோ.சைக்கிள் உறுதிப்பத்திரங்கள் சில சிதறிக் கிடப்பதைக் கண்டுள்ளனர். அந்தப் பத்தித்திரங்களில் இரத்தக் கறைகள் காணப்பட்டுள்ளன. இதனால் சந்தேகங்கொண்ட அவர்கள் கிணற்றை எட்டிப் பார்த்தபோது அதற்குள் சடலம் ஒன்று கிடப்பதைக் கண்டுள்ளனர். சடலம் கிணற்று நீரில தலைகீழாக மிதந்துள்ளது. இறந்தவர் சென்றதாகக் கூறப்படும் C-90 மோட்டார் சைக்கிளும் கிணற்றில் கிடக்கக் காணப்பட்டுள்ளது.

இதையடுத்து, பொலீஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. பொலீஸார் கிணற்றில் இருந்து சடலத்தை வெளியே எடுத்தனர் - என்று தெரிவிக்கப்பட்டது.

தோட்டக் கிணற்றில் இருந்து நூறு மீற்றர் தூரத்தில் உள்ள பிரதான வீதியில் வைத்து இவர் கொலை செய்யப்பட்டு, தோட்டம் ஊடாக இழுத்துவரப்பட்டு கிணற்றில் போடப்பட்டமைக்கான அடையாளங்கள் அங்கு காணப்படுவதாகப் பொலீஸார் தெரிவித்தனர். சடலம் இழுத்து வரப்பட்ட இடமெங்கும் இரத்தக் கறைகள் காணப்பட்டன.

இறந்தவர் கட்டியிருந்த செயற்கைப் பற்றகளும் அப்பகுதியில் சிதறிக் கிடக்கக் காணப்பட்டன. சில தாள் நாணயங்களும் இரத்தக் கறையுடன் கிடந்தன.

இறந்தவரின் நெற்றி, தலை, இடதுகாது என்பவற்றில் வெட்டுக் காயங்கள் காணப்பட்டன.

விசாரணை நடத்திய நீதிவான் மரணவிசாரணை, பிரேதபரிசோதனை ஆகியவற்றுக்காக சடலத்தை யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பும்படி உத்தரவிட்டார்.

நேற்று விசாரணை நடந்த சமயம் அந்த இடத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கூடியிருந்தனர். இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

(ம-3-17-72-180)

EESAN INSTITUTE
GENERAL ENGLISH
★பாடசாலை விலகியோருக்கும் உயர் கல்வி தொடர்வோருக்கும் உரியது.
Covers all Language Skills Speaking, Reading, Writing and Grammar
★சகல மொழித்திறன்களுடன் கூடிய கற்கைநெறி
வாரத்தில் மூன்று நாள்கள்
திங்கள், புதன், வெள்ளி
ஆரம்பம்: 04-06-2003 (புதன்) 3.30 மணி
(18100) - நிர்வாகி.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை
ஆதரவுடன்
பளு தூக்கும் அணி நடத்தும்
யாழ்.மாவட்ட ரீதியிலான பளுதூக்கல் (Weight Lifting), வலுதூக்கல் (Power Lifting) போட்டிகள்.
விண்ணப்ப முடிவு திகதி: 15-06-2003
விண்ணப்பங்களை யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் 50/= செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்
குறிப்பு: போட்டிகள் யாவும் ஜூன் மாத இறுதியில் நடைபெறும்.
பளுதூக்கும் அணி
யாழ்.பல்கலைக்கழகம்.
(18595)
விளம்பர அனுசரணை:
கஜமுகன் ஹாட்வெயர்ஸ்
இல.147, 149 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

## ஏ-9....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்மநாதன் (வயது 70) என்பவரும் மற்றும் ஒருவரும் மரணமாகினர். அவரின் பெயர் விவரம் தெரியவில்லை.

வீதியில் மண் ஏற்றிய நிலையில நிறுத்தப்பட்டிருந்த 'ரிப்பர்' வாகனத்துடன் வவுனியாவில் இருந்து வந்த 'ஹைஏஸ்' வான் மோதுண்டு விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் உடனடியாக வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இரு சடலங்களும் மரண விசாரணைக்காக வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன. (ம-3-9)

## தொலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கக் கோரி ரெலிக்கொம் நிறுவனம பாதுகாப்பு அமைச்சுக்கு ஒரு மாதத்துக்கு முன் விண்ணப்பித்திருந் தது.

இதற்கான அனுமதி கிடைக்காததால் உபகரணங்களை எடுத்துச் சென்று பொருத்த முடியாதுள்ளது என்றும் -

இதன் காரணமாக 500 தொலைபேசி இணைப்புக்களை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் - ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-3)

## மாற்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரைஞர் அன்ரன் பாலசிங்கம் பிரதமருக்கு அனுப்பியிருந்தார்.

இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து உயர்மட்ட அமைச்சர்கள், அரசின் சமாதானச் செயலக உறுப்பினர்கள், சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் ஆகியோருடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீவிரமாக ஆராய்ந்து வருகின்றார்.

நேற்றுமுன்தினம் பின்னிரவு வரையும் நேற்றுமுழுநாளும் இக்கலந்துரையாடல்கள் தொடர்ந்து இடம்பெற்றன என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் தமது மாற்று யோசனைகள் அடங்கிய கடிதத்தை அநேகமாக நாளை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நோர்வேத் தரப்புடனும் பேச்சுக்கள் நடத்த அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறப்படுகின்றது.

சமாதான முயற்சிகளில் தற்சமயம ஏற்பட்டுள்ள நிலை குறித்து ஆராய்வதற்காக, கொழும்புக்கு வெளியே சென்றுள்ள அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும் ஜப்பான் சென்றுள்ள அமைச்சர் மிலிந்த மொறகொடவும் அவசரமாகக் கொழும்பு திரும்புகின்றனர்.

(ம-3-9)

SUBRA(14)
சித்தன்கேணி
SPOKEN ENGLISH AND GRAMMAR
BY: BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்:
03.06.2003 Tus.காலை8.00
(வழமையான வகுப்புகள் Tus.Thu.8.00)
பேச்சுச் சிங்களம்
திரு.லீலாக்கிருஷ்ணன்
புதியபிரிவு 03.06.2003(Thu.9.00)
(வழமையான வகுப்புகள் Tus., Thu.9.00-10.00)
(C/28124)

தரம் 5
புலமைப் பரிசில்-2003 (DEC.)
விசேட புலமைப் பரிசில் வகுப்பு
ஆரம்பம்: 01-06-2003
ஞாயிறு பி.ப 2.00 மணி
• ஞாயிறு தோறும் காலை பயிற்சிப் பரீட்சை
• தூர இட மாணவர்களின் வசதி கருதி சனி, ஞாயிறு வகுப்பு.
• புதிய பாடத்திற்கமைய திறமை வாய்ந்த ஆசிரியர்களின் கற்பித்தல்.
• ஒவ்வொரு வகுப்பிலும் 35 மாணவர்கள் மட்டும்.
• அனுமதிக்கு முந்துங்கள்
தரம் 1 முதல் O/L வரை சிறப்பாக நடைபெறுகின்றன.
O/L Day Class
பிரிவு - II ஆரம்பம் - 02-06-2003
காலை 8.00 மணி
(18619)
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்



'தூண்டி' இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நேற்று ஆரம்பமான ஈழத்து தமிழ்க் கவிதை ஆய்வரங்கில் கலந்து கொண்ட கவிஞர் கலாநிதி இ.முருகையன் மற்றும் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்த கவிஞர் சு.வில்வரத்தினம், ஈ.குமரன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# கலாசாரத்தைப் பாதுகாக்க இப்படியும் நடக்கின்றது

யாழ்ப்பாணம்,ஜூன்6

அச்சுவேலிப் பகுதியில் கலாசார சீர்கேடான செயல்களில் ஈடுபடுபவர்கள் என 10 இளைஞர்களின் பெயர் விவரங்கள் அச்சிடப்பட்ட சுவரொட்டிகள் பொது இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் அவர்கள் செய்த செயல்கள் மற்றும் விவரங்கள் குறிப்பிட்டு பெரிய அளவில் அச்சிடப்பட்ட இந்தச் சுவரொட்டிகள் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், பொது இடங்கள் என்பவற்றில் ஒட்டப்பட்டுள்ளன.

சுவரொட்டியில் பெயர் குறிப்பிடப்பட்டவர்களின் குழு நடமாட்டம் தற்பொழுது இல்லாமல் இருப்பதோடு சிலர் அச்சுவேலியை விட்டு இடம் பெயர்ந்து விட்டதாகவும் பொதுமக்கள் மத்தியில் பேசப்படுகின்றது.

(ம-11)

## வல்வை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவற்றுடன் அந்தப் பகுதிக்கு வந்த படையினர், முகாம் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

முகாம் அமைக்கும் முயற்சியை உடன் நிறுத்துமாறு கோரி பொது அமைப்புக்களும் கடற்றொழில் அமைப்புக்களும் அப்பகுதியில் இன்று முற்பகல் 10 மணிமுதல் மறியல் போராட்டம் ஒன்றை மேற்கொள்ள ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்தப் பகுதியில் ஏற்கனவே முகாம் அமைக்கப்பட்டிருந்தது. புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னரே அந்த முகாம் அகற்றப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ம-3)

## கண்காணிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடைப்பிடிக்கப்பட்ட அணுகுமுறை மற்றும் அவர்களின் செயற்பாடுகள் பக்கச சார்புடையனவையாக இருந்தன என்று இளம்பரிதி தமது ஆட்சேபத்தில் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இப்படியான, முரண்பாடான சம்பவங்கள் இடம்பெறாமல நடவடிக்கை எடுப்பதாகக் கண்காணிப்புக்குழு அதிகாரி உறுதி அளித்தார்.

NEW SCIENCE HALL
பகல் நேர வகுப்புக்கள்
ஒளியியல்
செவ். வியா. – 10 – 11
புலம் (மின் காந்த ஈர்ப்பு)
செவ்., வியா. – 11 – 12
ஆரம்பம்: 03.06.2003
By: R.குகன் B.Sc.

கலையகம்
கல்வி நிலையம்
ஆவரங்கால் - புத்தூர்
SPOKEN WITH GRAMMAR
BY:BRITTO
ஆரம்பம்:05.06.2003
வியாழன் 10.00 மணி (ப.நே.)
பேச்சு சிங்களம்
K.R.சூரி
(18624)

## தவறிவிட்டது

மஞ்சள் கயிற்றில் கோர்க்கப்பட்ட தாலி ஒன்று மானிப்பாய்க்கும் நல்லூருக்கும் இடையில் நேற்று முன்தினம் (30–05–2003) வெள்ளி பிற்பகல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

வரதராஜன்
ஜெயா வைண்டிங் வேக்ஸ்.
வெலிங்டன் சந்தி.
T.P.: No. 222 2691
(18623)

இயற்கை மருத்துவத்திற்கு:-
சுஜெ சித்த மருத்துவ நிலையம்
SUJAY SIDDHA MEDICAL CENTRE
நேரம் : தினமும் மாலை 4.30 - 7 மணி வரை
சனி காலை 9 - 12 மணி வரை
ஞாயிறு மாலை 4 - 7 மணி வரை
இடம் : 83, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 0776 027948, 0777 774600 (18102)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை யோகரத்தினம்

சங்கானையைப் பிறப்பிடமாகவும் நல்லூர் தெற்கு, ஸ்ரான்லிக் கல்லூரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை யோகரத்தினம் நேற்று (31.5.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் திருநாவுக்கரசு(வியாபாரம்), கனகலிங்கம்(சுவிஸ்), கணேசலிங்கம்(கராட்டி மாஸ்ரர், லண்டன்), திருமதி ச.செல்வராணி, காலஞ்சென்ற பரராஜசிங்கம் மற்றும திருமதி லோ.தர்மலோஜினி, அமிர்தலிங்கம்(பிரான்ஸ்), நடராஜலிங்கம (லண்டன்), சாந்தலிங்கம்(பிரான்ஸ்), திருமதி வீ.கமலலோஜினி (கனடா), திருமதி சி.சாந்தலோசனா(கனடா), பரமலிங்கம்(ராஜன்ஸ் வீடியோ) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.5/1,ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம். (18650)

தகவல்:செ.திருநாவுக்கரசு
செ.பரமலிங்கம்(கண்ணன்)
(மகன்மார்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.06.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | வெ. புதன் | சூ. ▲ ராகு சந் | சனி |
| செ. | இராசிச் சக்கரம் | | வியா. |
| | | | |
| | கே. | | |

# இந்த வார இராசி பலன்

மகாதேவா ஜோதிடம்

## 01-06-2003 - 07-06-2003

### மாற்றம்

1.6.2003இல் மிருகசீரிடம், இடபத்தில் சந்திரன் நிறகும்.
3.6.2003இல் இடபத்தில் புதன் மாறும்.
5.6.2003இல் இடபத்தில் வெள்ளி மாறும்.

சமாதானச் சூழ்நிலை திரும்பவும் உருவாகும். வெளிநாட்டு அழுத்தங்கள் ஒரு நிலைப்பாட்டுக்கு வரும். இந்தியா மறைமுக உதவிகள், அழுத்தங்கள் கொடுக்கும். அரசியலில் புதிய திருப்பம். தென் பகுதி அரசியல்வாதிகளின் அபிப்பிராய பேதங்கள் மேலிடும். மத்தியகிழக்கு நாடுகளில் ஈரான்-அமெரிக்க முறுகல் நிலை தோன்றும். இந்து சமுத்திர பிராந்திய நாடுகளில் காற்றின் அழுத்தம் கடுமையாக இருக்கும். பசுபிக் நாடுகளில் பூமி அதிர்வுகள் ஏற்படும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

மனம் சாய்ந்து போனால் எல்லாம் சரிந்து போகும் நிலை மனிதர்களுக்கு வந்துவிடும். தொழிலில் வருமானப் பெருக்கம், உற்சாக மின்மை, குடும்பத்தில் சலனம், சகோதர உதவிகள், வீடு, வாகன சுகம், தந்தை வழியினருடன் மனக் கசப்பும் இருக்கும். தூரதேச வாழ்வு வாழ்பவராகவும் உஷ்ண பீடைகள் உடையவராகவும் இருப்பீர்கள். வியாபாரத்துறை, தோட்டத்துறையினர்களுக்கு பல மாற்றங்களும் நன்மைகளும் நடைபெறும் காலமாகும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன்.*

### இடபம்

கடமைகளைத் திறமையாகச் செய்துவரும் ஊழியர்களுக்கு சோதனைகள் அடிக்கடி வருவதுண்டு. தொழில் பீடங்களில் கீழ் உத்தியோகத்தர்கள் வீணாக மேலதிகாரிகளுக்கு உங்களைப் பற்றிக் கோள் சொல்லுவார்கள். பணச் செலவுகள் அதிகரிக்கும். தாய்வழி யினருடன் பகைமை வளரும். வாய்வுத் தொல்லை. உடம்பு நோ கொடுக்கும். தூரத்து உறவினர் வருகை அல்லது செய்திகள் வரும். சங்கீதச் செலவுகள் அதிகரிக்கும். ரீவி, வீடியோ துறையினர்- மருந்துத் துறையினர் அதிக நன்மை அடை வார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன்.*

### மிதுனம்

தனிமனிதர்களில் சிலர் கட்டுப்பாடு அற்றநிலையில் நடப்பதனால் எத்தனை பேருக்குத் துன்பம் ஏற்படுகிறது. அவசரத்தில் தவறுகள் ஏற்படுகின்றன. தெய்வ பக்தி, இனஜனக் கொண்டாட்டங்கள், குடும்பத்தில் கலகலப்பு, வீடு வாகன வசதிகள் உடையவராக இருப்பர். அரசியல்வாதிகளின் உதவி அரச அதிகாரிகள் தயவு மேலதிகாரிகளின் உதவிகள் என்பன கிடைக்கும். வாய்வுத் தொல்லை வரும். குருத்துறை , செய்தித்துறை, சங்கீதத் துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன்.*

### கடகம்

யுத்தத்தாலும், கலகத்தாலும், போட்டிகளாலும் எத்தனையோ நியாயங்கள் உருவாகின்றன. உங்கள் தொழில் ஸ்தானத்திலும் கலகம் பிறந்து உண்மை வெளிவரும். குடும்பத்தில் நன்மைகள் வரும். சகோதரங்கள் உதவி கள் செய்வார்கள். யோசனை, நெஞ்சு வருத்தம், சலவருத்தங்கள் கொடுக்கும். தூரத்தில் இருந்து உதவிகள் கிடைக்கும். பெரியவர்கள் ஆதரவு தருவார்கள். அரசியல்துறை, குருத்துறை, சட்டத்துறையினர்களுக்கு மாற்றங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், புதன், வியாழன்.*

### சிங்கம்

நாம் எத்தனை நன்மைகளைச் செய்தாலும் சிலரது கண்களுக்குக் கெடுதியாகவே தெரிகிறது. அதற்காக நீங்கள் பிறருக்கு நன்மைகளைச் செய்யாமல் விடுவதில்லை. பணவரவிருக்கும், நண்பர்கள் உதவி செய்வார்கள். தூரத்துச் செய்திகள் மகிழ்ச்சி தரும், அரசாங்க அதிகாரிகளாலோ, தொழில்ஸ்தானத்து அதிகாரிகளாலோ உதவிகள் கிடைக்கும். செய்தித்துறையினர்கள், குருத்துறையினர்கள், சந்தைத்துறை யினர்கள், சாய்ப்புச் சாமான் விற்பனையாளர்கள் நன்மைகள் அடைவார்கள். தெய்வ வழிபாட்டால் நன்மைகள் அடைவீர்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன். வியாழன்.*

### கன்னி

செல்வமும் செல்வாக்கும் சிலரை நீதிக்கு மாறான செயற்பாடுகளில் தூண்டி பிறருக்குத துன்பத்தைக் கொடுக்கின்றது. தொழில்ஸ்தானத்தில் போட்டிகள், எதிர்பாலார்கள் நல்லது சொல்லமாட்டார்கள். குடும்பத்தினருடன் பகைமை பாராட்டுபவராகவும் இருப்பீர்கள். வீடு, காணி, வாகனச் சிறப்புக்கள் கொடுக்கும். மேலதிகாரிகள் உதவி செய்வார்கள். சட்டத்துறையினர், செய்தித்துறையினர், குருத் துறையினர்கள் அதிக நன்மை அடைவார்கள். வாய்வு. உஷ்ண பீடைகள் சிலரை வருத்த இடமுண்டு. பிரயாணங்களைத் தவிர்த்தல் நன்று.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன்.*

### துலாம்

காலதேவன் விட்ட குறை, தொட்டகுறைகளை நிவர்த்தி செய்யப் பலன் கொடுப்பான். எப்படிக் கெட்டித்தனம் இருந்தாலும் விதி தக்க நேரம் எவரையும் சதிசெய்துவிடும். தொழில்ஸ்தானத்தில் மேலதிகாரிகள் உதவிகள் செய்து தருவார்கள். நண்பர்கள் நல்லதைச் செய்வார்கள். பொருளொன்று களவு போகலாம். குடும்பத்தினருக்கு சிறப்புக்கள் கொடுக்கும். பணவரவுகள் இருக்கும். சட்டத் துறையினர், மருந்து விற்பனையாளர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள் மாணவர்களுக்கு மாற்றங்கள் ஏற்படும். சலவருத்தம், உஷ்ணவருத்தங்கள் வரும். மருந்து எடுக்க சுகம் வரும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, புதன், வியாழன்.*

### விருச்சிகம்

நீங்கள் போராடித்தான் எதையும் சாதிக்கமுடியும். காற்றுள்ளபொழுதே தூற்றிக்கொள்ளவேண்டும். மேலதிகாரிகளின் கண்டிப்பும், அரவணைப்பும் மாறிமாறியிருக்கும். வாங்கல் காரியங்கள் நிறைவேறும். வீடு, வாகன யோகம் மிக்கவராக இருப்பர். பிரச்சினைகள் வந்து போகும். தந்தை வழியினருடன் வாக்குக் கலகம் கொடுக்கும். மாணவர்களுக்கு மாற்றங்கள் கொடுக்கும். வியாபாரத்துறை, இரும்புத்துறை, சட்டம். பாதுகாப்புத்துறையினர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, புதன், வியாழன்.*

### தனுசு

வயது சென்றதும் வருத்தமும், சோர்வும்- நித்திரையும் தானாக வந்து விடும். அறுபதுக்கு மேலே அரசாங்கம் பென்சன் கொடுப்பதில் நியாயம் இல்லாமலில்லை. தொழில்ஸ்தானத்தில் ஒரு சோர்வு நிலை, லீவு நிலை ஏற்படும். தூரத்துச் செய்தி உற்சாகம் தராது. தடு மாற்றம் கொடுக்கும். எதிர்பாலர்கள் எதிர்ப்பார்கள். பொருள் வரவு இருக்கும். மாணவர்கள் நன்மை அடைவர். இனஜன வருகை திருப்தி தரும். குருநிலை, செய்தித் தொடர்பு, வைத்தியத்தொடர்பு, சட்டத்தொடர்பு உள்ளவர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, திங்கள், புதன், வியாழன்.*

### மகரம்

வருங்காலச் சந்ததி கட்டு மீறிஓடும். கீழ்ப்படிவில்லாதவர்களால் அவமானங்களும், மனத் துன்பங்களும்தான் பெற்றோர், சகோதரர்களுக்கு வரும். தொழில் நிலையில் உறுதி, மாற்றங்கள். உறவினர், நண்பர்களால் புதிய செய்திகள் வரும். மாணவர்களுக்கு மாற்றங்கள் கொடுக்கும். பணவரவு சுமாராக இருக்கும். தூரத்துப் பிரயாணங்கள், புதிய பொறுப்புக்களைத் தவிர்க்கவும். வியாபாரிகள், கடற்தொழல் செய்வோர், வைத்தியர்கள், அரசியல்வாதிகள் போன்றவர்களுக்கு தொழில் ரீதியிலான நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வியாழன்.*

### கும்பம்

பதவிகள் ஏறஏற பணமும் வரும். அதிகவேலைப்பளுவும் பொறுப்புக்களும் வரும். புதிய மாற்றம், புதிய நண்பர்களின் தொடர்பு ஏற்பட இடமுண்டு. பண வரவு உண்டு. மேலதிகாரிகள் குறைப்படுவர். பிரயாணங்களைத் தவிர்க்கவும். மாணவர்களுக்குப் புதிய சித்திகள் கிடைக்கும். கால் உளைவு, தலைச்சுற்றல், கொடுக்கும். நண்பர்களின் உதவிகளால் பல காரியங்கள் நிறைவேறும். குருத்தொழில், சந்தைவியாபாரம், சட்டத்துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வியாழன்.*

### மீனம்

மனிதர்கள் தத்தமது சக்திக்கேற்ப செயற்பாடுகளைச் செய்கின்றார்கள். ஆனால் தெய்வ வலிமை கிரகங்கள் மூலம் விதிக்கப்பட்ட விதி வலிமையின் அடிப் படையில் பலன் ஒவ்வொருவருக்கும் நடக்கும். தொழில் விருத்தியடையும். புதிய தொழில் சிறப்புக் கொடுக்கும். மாணவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்கள் உதவி செய்வார்கள். வாய்வு, வயிற்று வருத்தம், கால் வருத்தம் கொடுக்கும். மருந்து வியாபாரம், சந்தைத் தொழில். ஹோட்டல் தொழில் கடற்தொழில் செய்பவர்கள் நன்மைகள் அடைவார்கள். *அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வியாழன்.*

---

# உடுவில் கல்விக் கோட்டத்தை இடம்மாற்றுவதற்கு ஏற்பாடு

வலி.தெற்கு,ஜுன்1

வலிகாமம்தெற்கு கல்வி வலய பணிமனைக்கு அருகில் உள்ள அறையில் இயங்கிவரும் உடுவில் கல்விக் கோட்ட அலுவலகத்தை இடம்மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரண்டு அலுவலகங்களும் அருகருகே அமைந்துள்ளமையால் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு இடைஞ்சல் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி உடுவில் கோட்ட அலுவலகத்தை இடம் மாற்றுமாறு கல்வித் திணைக்களம் அறிவித்திருந்தது.

உடுவில் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் கோட்ட அலுவலகத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குபேரநாதன் தலைமையில் நடைபெற்றபோது, கோட்ட அலுவலகத்தை வெளியேற்றுவது தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டது அதற்கு அதிபர்கள் தரப்பில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

உடுவில் மான்ஸ் தமிழ் கலவன் பாடசாலை அல்லது சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலை என்பவற்றில் ஒன்றில் இதன் அலுவலகத்தை அமைப்பது பற்றியும் ஆராயப்பட்டது.

அலுவலகக் கட்டட வசதி, இட வசதி, பாதுகாப்பு போன்ற பிரச்சினைகள் அங்கு காணப்படுவதால் அவற்றை ஏற்படுத்திக் கொடுக்கும் வரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் முன்னர் யூனியன் கல்லூரியின் அதிபர் அலுவலகம் இயங்கிய கட்டடத்தை உடுவில் கோட்ட அலுவலகமாக தற்காலிகமாக இடம்மாற்றுவதற்கு கல்வித் திணைக்களத்திடம் அனுமதி கோருவது என்றும் அதிபர்களால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. (எ-152)

# சுருக்கிட்ட நிலையில் இளைஞரின் சடலம் சனியன்று வன்னேரிக்குளத்தில் மீட்பு!

கிளிநொச்சி, வன்னேரிக்குளத்தில் கடந்த 24ஆம்திகதி சனிக்கிழமை இளைஞர் ஒருவர் மரத்தில் சுருக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

வன்னேரிக்குளத்தைச் சேர்ந்த இ இராசசேகரன் (வயது 22) என்னும் இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குளமொன்றின் கரையில், குளத்தின் மேற்புறமாக நீண்டிருந்த மரக் கிளையில் சுருக்கிட்டு தொங்கிய இவரது சடலம் குளத்தின் மேல் தொங்கிய நிலையில் இருந்தது.

இரவுவேளை இவர் தற்கொலை செய்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. கழுத்தில் 'டோர்ச் லைற்' எரிந்த வண்ணம் தொங்கிக் கொண்டிருந்தது. இவரது சைக்கிளும், பாதணிகளும் அருகிலேயே காணப்பட்டன.

இச்சம்பவம் வன்னேரிக்குளம் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழீழ காவல்துறையினர் இது குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-ரி)

## கருத்தரங்குகள்

கைதடி,ஜுன்1

கைதடிப் பிரதேச இளைஞர், யுவதிகளின் மேம்பாட்டுக்காக கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகம் ஏற்பாடு செய்துள்ள சமுதாய அபிவிருத்திக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் கைதடி நவபுரம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (எ-75)

★ ★ ★

வரணி,ஜுன்1

ஜி.ரி.இசற் நிறுவனம், தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகள் சிலவற்றுக்கு மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளது.

இது தொடர்பான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் ஆகியோர் இதில் தவறாது கலந்துகொள்ளவேண்டுமென தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ-170)

## முன்பள்ளி விளையாட்டு விழா

தென்மராட்சி,ஜுன்1

சாவகச்சேரி வடக்கு ஐங்கரன் முன்பள்ளி சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

போட்டிகளில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.நாகியர.ா கலந்துகொள்வார். (எ-117)

# ஆசைகளைத் துறந்தால் அகிலத்தை வெல்லலாம்!

இன்று மனித தேவைகள் வேகமான வளர்ச்சியைக் கண்டுகொண்டு இருக்கின்றன. இதற்கு அடிப்படையான காரணம் பலவிதமான நவீன கருவிகளின் அறிமுகம் என்றுகூறலாம். ஒரு கணம் எங்களுடைய நாளாந்த அனுபவத்தை மீட்டுப் பார்ப்போம். ஒரு கடைக்குப் போனவுடன் அங்கு கண்ணைக் கவரும் வண்ணம் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொருள்களைக் கண்டவுடன் அவற்றைக் கொள்வனவு செய்து, பயன்படுத்தவேண்டும் என்ற ஆர்வம் எங்களில் எழுவது இயல்பே. இப்படியாக ஒவ்வொருவரின் ஆசைகளும் காட்சிப் பொருள் அதிகரிக்க, அவையும் அதிகரிக்கும் அதேவேளையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான ஆர்வமும், ஆசையும் எழுவதும் இயல்பே.

இப்படியாக ஆசைகளின் வடிவமாய் உருவெடுப்பதே மனித செயற்பாடு என்று கூறலாம். அப்படியானால், இந்த ஆசைகள் எதன் அடிப்

**ஞாயிறு நற்பிரசாதம்**

படையில் எழுகின்றன. அல்லது எதற்காக இந்த ஆசைகளை நாங்கள் பூர்த்திசெய்ய துடிக்கின்றோம். என்று சந்தித்து பாருங்கள். ஆம், எம் ஆசைகள் அனைத்தும் நாம் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்றே எழுகின்றன. இப்போது சற்று ஆழமாக எமது அனுபவத்தை அலசிப் பார்ப்போம். நாம் ஆசைபட்ட விடயம் கிடைத்தவுடன் எமக்கு மன நிறைவு அல்லது நிரந்தர மகிழ்ச்சி கிடைத்து விடுகின்றதா? ஏன் எமக்கு அந்த ஆசையின் நோக்கமாகிய மன நிறைவு கிடைப்பதில்லை. ஏன் என்றால், நாம் ஆசை என்னும் பாற்கடலில் ஒரு பூனையைப் போன்று மூழ்கிக் கிடக்கின்றோம். ஒரு சிறுபிள்ளையைப் பார்த்து 'உனக்கு என்னவேண்டும் என்று கடவுள் உன்னிடம் கேட்டால் நீ என்ன பதில் சொல்வாய்? என்று கேட்கின்ற போது அது கூறும் 'மலை அளவு ஐஸ்கிறீம் வேண்டும் என்று' இதே போன்று சிறுபிள்ளைத்தனமாக எமது ஆசைகளை வரம்பின்றி வளர்த்து இருக்கின்றோம். "இங்க பாருங்கோ பக்கத்து வீட்டுக்கு ரெலிபோன் வந்திட்டுதாம் நாங்களும் எடுக்காவிட்டால் மரியாதை இல்லை" என்று சொல்பவர்கள் எம் மத்தியில் இல்லையா? இதனால் எரிச்சல் கோபம், தாழ்வு மனப்பான்மை, தேவையற்ற கவலைகள் எழுவதில்லையா?

**அருட்சகோதரர் சோபன்**

ஆம் சகோதரர்களே! ஆசையைத் துறந்தால் அகலத்தைவெல்லாம் என்று தானே புத்தபெருமான், காந்தி மகான், இறைமகன் இயேசு ஆகியோரும் இதனை மொழிந்துள்ளனர். அதற்காக முற்றும் துறந்த முனிவராகிவிட முடியுமா எம்மால்? குறைந்தது எந்த ஆசைக்கும் நாம் அடிமைகளாகி விடாதபடி பார்க்கலாம் அல்லவா.

புனித அகுஸ்தீனார் தன்னுடைய இளமைப் பருவத்தை உலக ஆசைகளில் மூழ்கடித்தார். ஆனால், இறுதியில் அவருடைய அனுபவத்தில் இருந்து குறிப்பிட்டார். 'ஆண்டவரே எனது உள்ளம் உம்மை ஆவலாய் தேடுகின்றது. அது உம்மை கண்டடையும் வரை அது ஒருபோதும் அமைதியடையாது?' ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

KONICA (1212) Photo copy Machine விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கணேஷ் (T.P. 3785), கேணியடி லேன், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (18495)

MBX 125 றேடியற்றர் மொடல் ஜப்பான் மோட்டார் சைக்கிள் நல்ல நிலையில் உள்ளது விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- ஸ்ரீ குகன், சந்திர சேகரப் பிள்ளையார் கோவிலடி, கலை மகள் வீதி, கல்வியங்காடு. (18547)

நல்ல நிலையிலுள்ள Sony 21" T.V. களும் 2197 - 24,000/=, 2192 - 19,000/= (Japan), G 21 Q2 - 22,000/= National J22 (Japan), Panasonic SD 10 (Japan) ஆகிய டெக் வகைகளும விற்பனைக்குண்டு தொடர்பு: R.மகேஸ்வரன் (சிறுவர் பூங்கா முன்பாக), K.K.S. வீதி, மல்லாகம்.(18628)

கொழும்பிலிருந்து கொண்டு வரபட்ட சாளி மோட்டார் சைக்கிள் சகல ஆவணங்களுடனும் விற்பனைக்குண்டு. விலை 28000/= 74, சட்டநாதர் கோயில் வீதி (காட்டுக் கந்தோருக்கும் சிறுவர் இல்லத்துக்கும் அருகில்), கல்வியங்காடு. (18582)

டாக்டரின் பாவனையிலுள்ள Super Cup 50 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. E.கணேஷ் 564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்(18593)

## கார் விற்பனைக்கு

3 ஸ்ரீ தொடர் இலக்கமுடைய ஒஸ்ரின் கேம்பிறிச் (பரினா) கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.346, கேணியடி, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு. (18596)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து உங்களுக்கு தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (18475)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 1Kg-160/= சுத்தம செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.: 3529, 2867 (18570)

இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. சந்தை விலையிலிருந்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம் (சுத்தம் செய்தல் இலவசம்). தொடர்பு:- Y.A.சுரேஸ் (கிராமக் கோட்டுச் சந்தியில் இருந்து 150m உள்), பருத்தித்துறை. (18580)

புறொயிலர் 1 Kg 180/= கல்பேட இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும சில்லறையாகவும் விற்பனைக்குண்டு சுத்தம் செய்தல் இலவசம். 1.மான்ஸ் பாடசாலை வீதி, டச்றோட், உடுவில். 2.மீன் சந்தை முன்பாக, சுன்னாகம். (18630)

## பௌதிகவியல்

பிரத்தியேக தனிப்பட்ட குழுநிலை வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. தொடர்பு: பொ.விஜயகுமாரன். T.P.: 077-6032308 (18598)

## காணி விற்பனைக்கு

ஆனந்தன்வடலி வீதி, கொழும்புத்துறை, புகையிரதப்பாதை இருந்த இடத்திற்கு அருகில் 2 1/2 பரப்பு வெறுங் காணி விற்பனைக்குண்டு தொடர்பு: சோ.சிவசுந்தரம், 272, ஆனந்தன்வடலி வீதி, அரியாலை. T.P.: 0777-293265. (18625)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நல்ல பராமரிப்புடன், பூச்சி நீக்கப்பட்ட, ஒன்றரை மாத ஜேமன் சப்பேட் அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.குமரகுரு, பண்ணாகம், சுழிபுரம். (18589)

## பஜாஜ் ஸ்கூட்டர் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பஜாஜ் ஸ்கூட்டர் மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T. கங்காதரன், இல.101/1, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (18590)

## தவறிவிட்டது

அல்வாய் வடக்கு யூடிசன் - சுதர்சினி தம்பதியரின் விவாகப் பதிவு வீடியோ கசெற் கொப்பி கடந்த மாதம் சமரவாகு பொலிகண்டியிலிருந்து அல்வாய் வடக்குக்கு ஆலங்கட்டை மயான வீதி வழியாகவும் தக்கம் வீதி வழியாகவும் வரும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நெல்லியடி சந்துஜன் பான்சியில் அல்லது நக்கீரன் சனசமூக நிலையத்தில் ஒப்படைத்துதவவும். (C/28174)

தம்பிப்பிள்ளை ராஜகுமார் என்பவரது தொ.அ.அட்டை மற்றும் சாரதி அனுமதிப் பத்திரத்துடன் பணப்பை கிளிநொச்சி டிப்போ சந்திக்கும் கந்தசுவாமி கோவிலிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தொடர் ஊற்று வீதி, அன்பன் தையலகம், சந்தை முன்பாக, கிளிநொச்சி என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். (18618)

## ஜோதிடம்

கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும். சனீஸ்வரன், வியாழ பகவான் ஆகிய கிரகங்களால் துன்பமா? தினமும் சந்திக்கலாம். தொடர்பு: சி.சோதிநாகரத்தினம், மெய்கண்டான் வீதி, இளவாலை வடக்கு, இளவாலை.(18527)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, பட்டதாரி ஆசிரியருக்கு, (பூரட்டாதி நட்சத்திரம் வயது 31 மொத்தக் கிரகபாவம் 81/4) படித்த, அழகிய மணப்பெண் தேவை. தொடர்பு: வே.மகேந்திரன், டச்சுவீதி, மீசாலை மேற்கு, மீசாலை.(18586)

## வேலையாள்கள் தேவை

பலசரக்கு கடைக்கு நல்ல அனுபவமுள்ள வேலையாள்கள் உடன தேவை. அத்துடன் சமையலுக்கு ஒரு பெண் தேவை. நல்ல சாப்பாடும், சம்பளமும் தரப்படும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

தனபாலசிங்கம்
19, முருகேசர் ஒழுங்கை,
(நல்லூர் வீடியோ சென்ரர் வளவு)
முத்திரைச்சந்தையடி, நல்லூர்.
(18579)

## கணனிப் பயிற்சிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்1

யாழ். மத்திய கல்லூரில் யாழ். கல்வித் திணைக்களத்தின் கல்விப் பிரிவினால் நடத்தப்படும் இலவச கணனிப் பயிற்சி, கணனித் தட்டெழுத்து, தமிழ்த் தட்டெழுத்துப் பயிற்சிகளுக்கு புதிதாக மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை யாழ். மத்திய கல்லூரியில் பெற்று எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக சமர்ப்பிக்கவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சிநெறிக்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கமுடியும் என்றும்-அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-12)

## சுயதொழில் வாய்ப்புத் திட்டம் ஸ்கிரீன் பிறிண்டிங் பயிற்சி



பெரிய முதலீடு இன்றி உங்கள் வீட்டிலேயே சிறிய இடத்தில் திருமண அழைப்பிதழ், ஸ்டிக்கர், லெட்டர் பெட், விசிட்டிங் கார்ட் அத்துடன் Textile Printing எல்லா வகைத் துணிகளிலும் பிரிண்டிங் செய்யலாம். மரம், பிளாஸ்டிக், பேனா, CD கவர், CD யில்; Four Colour Print, Embossed Print, Foil Print கலண்டர் என்பன பிரிண்டிங் செய்யலாம். இவற்றினை செய்முறை பயிற்சியளிக்க 15 வருட தேர்ச்சிபெற்ற ஸ்கிரீன் பிரிண்டிங் நிபுணர் **திரு.R.பரதன்**, D.P.Tech.அவர்கள் வருகை தருகின்றார். 20.06.2003 இற்கு முன் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

(அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன)

**CAREER. COM INSTITUTE**

இல.79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
0777 706334, 0777 108423

(18012)

உ

## மங்களகரமான புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் வைகாசித் திங்கள் 19 ஆம் நாள் (02-06-2003) திங்கட்கிழமை (புதியநேரம்) காலை 9.31 மணிமுதல் 11.27 மணிவரையில் வரும் சுபவேளையில்,

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும்

**GEETHA TRADER**

என்னும் வியாபார ஸ்தாபனத்தை இறைவன் திருவருள் துணைகொண்டு திறந்து வைக்க இருப்பதால் அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகைதந்து விழாவைச் சிறப்பித்து எமக்கு ஆதரவு நல்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம். T.P.: 0777 570139 - உரிமையாளர்: கீதா ரேடா

(C-28175)

## பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா தரிசனம் @ தென்னிந்திய திருத்தல யாத்திரை

**✪ தரிசிக்கும் புனித ஸ்தலங்கள்**

புட்டபத்தி பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா தரிசனம், திருப்பதி, சென்னை, காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள், சிதம்பரம் நடராஜர், பூம்புகார் கண்ணகை அம்மன், நாமக்கல் ஸ்ரீ ஆஞ்சநேயர், தஞ்சாவூர், தஞ்சைப் பெருங்கோயில், திருச்சி உச்சிப் பிள்ளையார், ஸ்ரீரங்கம், பழனி, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருத்தணிகை, பழமுதிர்ச்சோலை, சுவாமிமலை, இராமேஸ்வரம், கன்னியாகுமரி, திருவேனி சங்கமம், காந்தி மண்டபம், சுவாமி விவேகானந்தர் நினைவாலயம்.

- ★ யாத்திரியர்களுக்கு சௌகரியமான விடுதிகளில் தங்குமிட வசதியும், முற்றிலும் குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்களில் வழிகாட்டி துணையுடனான பிரயாணமும் உயர்தர சைவ உணவுகளும் வழங்கப்படும்.
- ★ விசா கட்டணம் உட்பட யாத்திரை சென்று மீண்டும் வெள்ளவத்தை திரும்பும் வரையான சகல செலவுகளும் நிறுவனத்தால் பொறுப்பேற்கப்படும்.
- ★ இத்திருத்தல யாத்திரை ஜூலை இறுதி வாரத்தில் ஆரம்பமாகும். யாத்திரியர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருப்பதால் ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

**✪ கட்டணம் ~ 37,500/= (சகல செலவுகளும் உட்பட)**

குறிப்பு : சாயி நிறுவனங்கள், சமித்திகள், சமயதொண்டர் நிறுவனங்கள் மற்றும் குழுக்களாக விண்ணப்பிப்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

மேலதிக விவரங்களுக்கும் பதிவுகளுக்கும்:

Kameshni or Sumathy

**METRO TRAVELS & TOURS (PVT) LTD,**
No. 403 1/2, Galle Road, Wellawatta, Col. - 06,
Tel : 362766, 074-510562
e.mail : meetro@sltnet.lk

(சி-28152)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

சிற்பச் சக்கரவர்த்தி கலாபூஷணம்

**ஸ்தபதி ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆச்சாரியார்**



நீள நினைந்து நின் வழியிலே நடந்து
ஈர விழிகளுடன் இருக்கின்றோம்.
எம்மை விட்டுப் பிரிந்து
ஈராண்டும் ஆகியதோ?
ஓராயிரம் வருடம் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகளே எங்களது வாழ்வாகும்.

குடும்பத்தினர்.

ஆறுமுகம் சிற்பாலயம், திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏல விற்பனை

பின்வரும் பொருள்கள் 07.06.2003 சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் ஏலத்தில் விடப்படும். எடுப்பவர்கள் உடனே பணத்தைச் செலுத்தி அன்றே பொருள்களை அப்புறப்படுத்த வேண்டும்.

1. பழைய மின் விசிறிகள்.
2. ரியூப்லைட் தகரங்கள்.
3. பழுதடைந்த குளிரூட்டிகள்.
4. பழைய யன்னல் கதவுகள்.
5. கதவு நிலைகள்.

**போதனா வைத்தியசாலை,**
*யாழ்ப்பாணம்.* (சி-28181) **- பணிப்பாளர்.**


# பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜுன்1

நெல்லியடி மத்திய மகா வித்தியால பழைய மாணவர் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பாடசாலையின் பழைய மாணவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்க செயலாளர் கேட்டுள்ளார்.

(எ-ரி)


# குதூகல ஆரம்பம்

புகைப்படப் பிடிப்பாளர்களே!

உங்களுக்கொரு நற்செய்தி

இன்று (01.06.2003) ஞாயிற்றுக்கிழமை

நண்பகல் 12மணி ~1மணி வரையுள்ள சுபவேளையில்,

மூர்த்தி வீடியோ ஸ்தாபனத்தாரின் மற்றுமொரு சேவையாக,

**மூர்த்தி ஸ்ருடியோ அன்ட் கலர் லாப்**

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து வைக்கின்றோம். மேலும் உங்கள் படச்சுருள்களை உங்கள் எண்ணம் போல வண்ண வண்ணமாய் விரும்பிய அளவுகளில் (3R - 8x12) உடனுக்குடன் பிரதியாக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம் என்பதனையும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

உங்கள் தேவை அறிந்து சேவை செய்திட...

**மூர்த்தி ஸ்ருடியோ அன்ட் கலர் லாப்**

யாழ்.வீதி, மானிப்பாய்.

T.P.: 021-2222884

(18605)



# அரிய சந்தர்ப்பம்

மொபி ஸ்டார் நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற, யாழ்.மாவட்டத்தின் ஏக விநியோகஸ்தர்களான றெயின்போ லிங்ஸ் (Rainbow Links) வழங்கும்

**மொபிடெல் தொலைபேசி இணைப்புக்கள்**

குறைந்த விலையில் கையடக்கத் தொலைபேசிகள்

மொபிடெல் இணைப்புடன் மேசைத் தொலைபேசிகள்

அனைத்திற்கும் ஒருவருட உத்தரவாதம்.

| | |
|---|---|
| Ericsson - 1228d | 8,800/= |
| Ericsson - LX / KF 788 | 9,200/= |
| Motorola- M 70 A | 6,800/= |
| Motorola- 650 | 7,000/= |
| Star TAC | 7,500/= |
| Nokia - 918 | 8,000/= |
| Nokia - 3360 | 16,000/= |
| Microtel (Land Phone) | 15,500/= |

**Rainbow Links**

Hospital Road Junction,
First Cross Street,
Jaffna.

Tel - 222 3170 (18633)


# கண்ணீர் அஞ்சலி

எமது நிலையத்தின் விஞ்ஞான
ஆசிரியர் திரு.டார்வின் அவர்களின்
அன்புத் தந்தையார்

## அமரர் யோசப் திருஞானம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்ரார் கல்வி நிலையம்,**
சுன்னாகம் - மல்லாகம். (18634)

நிர்வாகி, ஆசிரியர்கள்,
மாணவர்கள்.


TVS **சுசுக்கி ரேடர்ஸ்** TVS

59, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்



அறிமுகம்
Scooty - pep
75 CC
Self Start

3 விற்பனைக்குப் பிந்திய சேவையுடன்





**சுசுக்கி ரேடர்ஸ்** TVS

TVS LANKA PRIVATE LTD

அங்கீகரிக்கப்பட்ட (3S) யாழ்.முகவர்

0777-340056 / 222-6185



HERO HONDA

World No. 1

Two-Wheeler Company





HERO HONDA 2 Year warranty



RG **இரத்தினகோபால்ஸ்**

63, 65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்

STAFFORD MOTOR CO. LTD இன்

அங்கீகரிக்கப்பட்ட (3S) யாழ்.முகவர்

0777-340056 / 222-6185


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# நயினாதீவு, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

நயினாதீவு

# போலி வேடதாரிகளை இனங்காண உதவுங்கள்

**அம்பிகை அடியார்களே!**

நயினாதீவு, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் உற்சவ காலம் 29-06-2003 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

இக்காலப் பகுதியைப் பயன்படுத்தியும் ஆலயத்தின் பெயரைப் பயன்படுத்தியும் போலி வேடதாரிகளும், ஏமாற்றுப் பேர்வழிகளும் அடியார்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்ற தகவலை அம்பிகை அடியார்கள் அறங்காவலர் சபையின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர். சாவகச்சேரி, நாவற்குளி மற்றும் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இவர்களின் நடமாட்டம் உள்ளதாக அறியத்தந்துள்ளனர். அன்னதானப் பணி, தேநீர், கோப்பிச் சபை, தர்மகைங்கரியங்கள் என்னும் பெயரால் பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன. இத்தகைய பணிகளுக்காக பணம் வசூலிக்க வருபவர்களை இனங்கண்டு அருகில் உள்ள பொலீஸ் நிலையத்திலோ அல்லது உங்கள் பகுதி கிராமசேவகர், பிரதேச செயலாளர் மூலமோ அறங்காவலர் சபை, நயினாதீவுக்கோ அல்லது யாழ்ப்பாண தொடர்பகம்,72, பெரியகடை மேற்கு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கோ தகவல் தரவும்.

ஆலயத்தின் பெயரால் எவ்வித நிதிவசூலும் செய்ய தனி நபர்களுக்கோ, நிறுவனங்களுக்கோ அனுமதி அளிக்கப்படவில்லை. பணம் செலுத்த விரும்பும் அடியார்கள்,

**பொருளாளர்,**
**நயினாதீவு, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,**
**நயினாதீவு.**

என்னும் விலாசத்திற்கு அனுப்பிவைக்க முடியும். அல்லது

**வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்**
**கணக்கு இல. 10600 12330 இற்கோ**

அல்லது **யாழ்ப்பாண தொடர்பாகம்**
**இல. 72, பெரியகடை மேற்கு, யாழ்ப்பாணம்.**

என்னும் விலாசங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**கு.சரவணபவானந்தன் J.P.**
**செயலாளர்.**

**தொலைபேசி இல. 070-21-3024**
**071-347587**

**நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி**
**நயினாதீவு அம்மன் கோயில்,**
**நயினாதீவு,**
**யாழ்ப்பாணம்.**

## போலிப் பற்றுச்சீட்டின் மாதிரி



நைனாதீவு நாகபூசனி அம்மன்
கோயில் பரிபாலன சபை

801

அருள்மிகு
நைனாதிவு
நாகபூசனி அம்மன்
தமது சொந்தப்
பெருமானைப்போல்
வணங்கி வரும்
அடியவருக்கு
அவர்களது
சித்தும் மலரச் செய்வார்
ரூபா 100/-

நைனாதீவு
நாகபூசனி அம்மன்
சிந்தும் மலர
வருடா வருடம்
வரும்
தேர் திருநாளை
முன்னிட்டும் மற்றும்
பெருநாட்களிலும்
வரும் அடியார்க்கு
தேனீர் கோப்பி
அன்னதான·
பொது சன
தர்ம கைங்கரியம்

## பதவி வெற்றிடம்

1. ஆலய மடைப்பள்ளியில் பணியாற்றுவதற்கு அந்தண குலத்தைச் சேர்ந்த பாகசாலை உதவியாளர்கள் தேவை. முன் அனுபவத்துடன் கூடிய தகுதி உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
2. ஆலயத்தின் முச்சக்கரவண்டி (ஓட்டோ) சாரதிக்கான பதவிவெற்றிடமாக உள்ளது சாரதி அனுமதிப்பத்திரமுடையவர்கள் விண்ணப்பிக்கவும். சம்பளத்தை குறிப்பிட்டு விண்ணப்பிக்குக.

## உற்சவக்கால தற்காலிக கடைகள் பகிரங்க ஏலம்

நயினாதீவு, ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில் மகோற்சவம் 29.06.2003ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 16 நாள்கள் நடைபெறும். இக்காலப்பகுதியில் தற்காலிக கடைகளை அமைத்து வியாபாரம் செய்ய விரும்பும் வர்த்தகர்கள் 15.06.2003, ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும் பகிரங்க ஏலத்தில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள். இத்திகதியின் பின் கடைகள் எதுவும் கொடுக்கப்படமாட்டாது என்பதை அறியத்தருகின்றோம். கேள்வித் தொகையின் 25%உடனடியாகச் செலுத்திப் பற்றச்சீட்டுப் பெற்றுக்கொள்ளப்படவேண்டும்.

## ஆலய உள் வீதியில் புகைப்படம், வீடியோ படம் எடுத்தலை தடைசெய்தல்

ஆலய உள்வீதியில் புகைப்படம், வீடியோ படம் எடுத்தல் ஆகிய செயற்பாடுகளினால் அடியார்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் குறித்து பல முறைப்பாடுகள் அறங்காவலர் சபைக்குக் கிடைத்துள்ளமையால் இந்த அறிவித்தல்மூலம் புகைப்படம், வீடியோ எடுத்தல் தடைசெய்யப்படுகின்றது.

ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பேண சகல அம்பிகை அடியார்களும் ஒத்துழைப்பு நல்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**கு.சரவணபவானந்தன் J.P.**
**செயலாளர்**
**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,**
**நயினாதீவு.**
(18638)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

**சித்த மருத்துவர்களால் சித்தர்கள் கூறியபடி தயாரிக்கப்பட்ட**

பாலர் ரோகங்களுக்கான

**சுஜெ பாலர் கிரந்தி எண்ணெய்**

பெற்றுக்கொள்ள:

**சுஜெ சித்த மருத்துவ நிலையம்**

(18185)　83. கச்சேரி நல்லூர் வீதி. யாழ்ப்பாணம்.

---

## அச்சுவேலி பத்தமேனி
## தீர்த்தாங்குளப் பிள்ளையார் திருக்கோவில்
# பூங்காவன உற்சவம்

விநாயக அடியார்களே!

இன்று (01-06-2003) ஞாயிறு பிற்பகல் 4.00 மணிக்கு எம்பெருமானுக்கு அபிஷேகம். மாலை 7.00 மணிக்கு பலவர்ண மின்குமிழ்களால் வீதிகள் அலங்கரிக்கப்பட்டு எம்பெருமான் விஷேட தவில், நாதஸ்வர மங்கள இசையுடன் திருப்பூந்தண்டிகையில் திருவீதி உலாவருவார்.

இவ்வாலயத்தில் 25 வருடங்களுக்கு மேலாக மங்கள இசை வழங்கி மறைந்த "நாதஸ்வர புலவர்" **இராமையாவின்** சேவையினைப் பாராட்டி அவரின் சேவையைத் தொடரும் அவரது புதல்வர்கள் தங்கப் பதக்கமும், பட்டமும் வழங்கி கௌரவிக்கப்படுவர்.

**கௌரவிப்புப் பெறுபவர்கள்**

1. **இராமையா தங்கவேல்** "தாளலய பூபதி"
2. **இராமையா லோகநாதன்** "சுரகானசாகரம்"
3. **இராமையா தர்சன்** "தவில்கானமணி"
4. **சூடாமணி கண்ணன்** "நாதகானபுலவர்"

**இரவு விசேட நிகழ்வாக**

| | | |
|---|---|---|
| L.S. ஜெகநாதன் | ~ | உடுப்பிட்டி |
| சிவகுமார | ~ | சித்தன்கேணி |
| மயூரன் | ~ | உடுப்பிட்டி |
| தட்சணாமூர்த்தி | ~ | கெருடாவில் |
| முருகையா | ~ | இருபாலை |

ஆகியோரின் தவில் நாதஸ்வரக் கச்சேரி நடைபெறும்.

அகில இலங்கை அமுதசுரபி கலாமன்றம் வழங்கும் **"பட்டிமன்றம்"**

சாரங்காவின் **"இன்னிசை நிகழ்வு"** இடம்பெறும்.

கலைஞர்களைக் கௌரவித்து வாழ்த்துபவர்கள் :

**மேற்படி திருக்கோவிலின் பிரதம தர்மகர்த்தாவும், முன்னாள் செயலாளருமான மறைந்த பாலசுப்பிரமணிய ஐயாவின் ஞாபகார்த்தமாக புதல்வர்களும், பூங்காவனத் திருவிழா அடியவர்களும்.**

(சி-28182)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தசாமித்துரை குணபூஷணம்

வல்வெட்டித்துறை, கொண்டைக்கட்டைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமித்துரை குணபூஷணம் அவர்கள் திருமலையில் காலமாகிவிட்டார்.

அன்னார் சோமசுந்தரம் - மாணிக்கம்மா ஆகியோரின் அன்புப் புதல்வியும் கந்தசாமித்துரையின் அன்பு மனைவியும் வேலுப்பிள்ளை - இராசரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகளும் சாந்தகுமார் (ஜேர்மனி) அவர்களின் அன்புச் சகோதரியும் இரவீந்திரன் (அமெரிக்கா), நிர்மலா (ஆஸ்திரேலியா), வத்சலா (திருகோணமலை), சரோஜா (மானிப்பாய்), சுந்தரேஸ்வரன் (பருத்தித்துறை), ஜெயகுமார் (பருத்தித்துறை), காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் மகேசன் (லண்டன்), ஆனந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் றஞ்சிதமணி (அமெரிக்கா), கதிர்காமத்தம்பி (ஆஸ்திரேலியா) பரமேஸ்வரன் (மானிப்பாய்), தங்கராணி (பருத்தித்துறை), செல்வராணி (பருத்தித்துறை), றோகினி (லண்டன்), வேல்நாயகம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுரேஷ், மீறா, மணிமோகன, கிருஷ்ணமோகன், விஜயமோகன், அருள்மோகன், செந்தில்குமார், கணேஷ்குமார், செந்தூரன், நித்தியஜீவன், தட்சாயினி, அரவிந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (02-06-2003) திங்கட்கிழமை இல.46, திருமால் வீதி, திருகோணமலை இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

46,திருமால் வீதி,
திருகோணமலை.

தகவல்:
**க.பரமேஸ்வரன்** (மருமகன்)
மாஸ்ரர்
லோட்டன் வீதி, மானிப்பாய்.

(18635)

## திருமதி கந்தையா மாணிக்கம்

வளலாயைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவி மாணிக்கம் (30-05-2003) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகர் - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் கந்தையாவின் அன்பு மனைவியும் திரவியம் (துணுக்காய்), தியாகராஜா (S.S.O.பிரதேச செயலகம், கரவெட்டி), குணலிங்கம் (S.K., யாழ்.போதனா வைத்தியசாலை), சிவபாதம், மகிழம்மா (கொழும்பு), சிவகுரு(டென்மார்க்), தர்மரெத்தினம் (சுவிஸ்), ஸ்ரீஸ்கந்தராசா (டென்மார்க்), சுந்தரலிங்கம் (துணுக்காய்), அமிர்தலிங்கம் (ஜேர்மனி), ஜெயபாலசிங்கம் (கனடா), கணேசலிங்கம் ரவிவதனா (சுவிஸ்), காலஞ்சென்ற தங்கமலர் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் செல்வமணி (துணுக்காய்), செல்வராணி (ஆசிரியை, பருத்தித்துறை), இராஜேஸ்வரி (பருத்தித்துறை), சிவபாதம் (சுவிஸ்), விஸ்ணுசாமி (டென்மார்க்), சிவபாக்கியம் (சுவிஸ்), மங்களேஸ்வரி (டென்மார்க்), தவமலர், கிருஷ்ணவேணி (துணுக்காய்), சற்குணமலர் (டென்மார்க்), கணேசலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வளலாயில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (01-06-2003) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் இடைக்காடு செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வளலாய்,
பருத்தித்துறை.　(2817)

தகவல்:
**க.குணலிங்கம்** (மகன்)
(S.K.,யாழ்.போதனா வைத்தியசாலை)